KALKI
5.2006 ரூ.8.00
30 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் களிக்க...



விடுபடுமா மர்மம்?


நல்ல விலை கொடுத்து
ஒரு பொருளை ஏன் வாங்குகிறீர்கள்?
Parry's
Pure
Refined
பாரீஸ் ப்யூர் ரிஃபைண்டு சர்க்கரை
தூய்மையானது, இனிமையானது.
குழந்தைகள் பேசுவதைப் போலவே.
தூய்மை! இனிமை!!

சச்சினால் திணறிய வெப்சைட்!



ரஜினியால் காளிகாம்பாள் கோயிலுக்கு ஒரு மவுசு கிடைத்ததுபோல், இன்று சச்சின்டெண்டுல்கருடைய திடீர் வருகையால் மங்களூர் குக்கே சுப்ரமணிய சுவாமி கோயில் மீது ஒட்டுமொத்த பக்தகோடிகளின் பார்வையும் திரும்பியுள்ளது.

கடந்த பதினொரு டெஸ்டுகளில் சச்சின் அடித்த ரன்களின் ஆவரேஜ் இருபது மட்டுமே. இதுபோதாதென்று அவ்வப்போது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும் தோள்பட்டைக் காயங்கள். இந்த அபாய நிலைமையில் 'ஐகானிக்ஸ்' நிறுவனத்தோடு நாற்பது மில்லியன் டாலருக்கு காண்ட்ராக்ட் போட்டிருக்கிறார் சச்சின். இனிமேலும் அவரால் காற்றாடிபோல வாழ்க்கையை அங்குமிங்கும் அலைக்கழிக்க முடியாது. அனைத்து சிக்கலிலிருந்தும் முற்றிலுமாக விடுபட, மங்களூர் கடவுள் மஜுனாதேஸ்வராவை வணங்கினால் முற்றிலுமாக தோஷம் கழியும் என்று நலம்விரும்பிகள் அறிவுறுத்த, மனைவி அஞ்சலியைக் கூட்டிக்கொண்டு மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அருகே சிறு கிராமத்திலுள்ள குக்கே சுப்ரமணிய சுவாமி கோயிலில் இரண்டு நாட்கள் தங்கியிருக்கிறார் சச்சின். இவர்மீதான தோஷங்கள் கழிய சர்ப சம்ஷ்காரா, நாகபிரதிஸ்தே, அஷ்லேஷா பாலி போன்ற பூஜை புனஸ்காரங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மங்களூர் குக்கே சுப்ரமணிய சுவாமி கோயிலுக்கு ஆதிசங்கரர் அடிக்கடி சென்றதுண்டாம். பக்தர்கள் அருகிலுள்ள குமாரதாரா நதியில் நீராடிவிட்டு கோயிலுக்குச் செல்வது வழக்கம். மங்களூரிலிருந்து நூறு கிலோமீட்டர் தொலைவிலிருக்கும் கோயிலைப் பற்றிய ஏராளமான தகவல்கள் kukkesubramanya.com என்கிற வெப் சைட்டில் கொட்டிக் கிடக்கின்றன. மங்களூரிலிருந்து எவ்வழியே கோயிலுக்கு வருவது என்று நேர்த்தியாக வரைபட மிட்டு விளக்கப் பட்டுள்ளது. மேலும் எவ்வெப்பொழுது பூஜை புனஸ்காரங்கள் நடைபெறுகின்றன, தொலைபேசி எண்கள், அருகிலுள்ள புண்ணிய ஸ்தலங்கள் என பக்தர்களுக்கு வேண்டிய அத்தனை உபயோகமான விஷயங்களும் இதில் உள்ளன. ஆயிரம் பேர்கூட எட்டிப் பார்க்காத இந்த இணையதளத்துக்கு, சச்சின் கோயிலுக்கு வந்த செய்தி பரவியபின் நாளொன்றுக்கு லட்சக்கணக்கானவர்கள் இணைய தளத்தை மொய்ப்பதாக குக்கே சுப்ரமணிய தளத்தின் வெப்மாஸ்டர் ஆச்சர்யத் தகவல் தெரிவிக்கிறார். இந்தத் திடீர் வருகையைத் தாங்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது இணைய தளத்தினுடைய சர்வர்.

• கோயிலில் சச்சின்...



கிரிக்கெட் வீரர் உத்தப்பா இந்தக் கோயிலின் ரெகுலர் விசிட்டர். அடுத்து மகேந்திரசிங் டோனியும் கூட விஜயம் செய்யவிருக்கிறாராம்.

- சநகன்

குடும்பத் தலைவன் நோய்வாய்ப் பட்டதும், எப்படி குடும்பமே பொறுப்பாக நடந்து கொள்கிறதென உணர்த்திய 'டைபாய்டு' சிறுகதை அருமை.

- பி.எல்.பரமசிவம், புனலூர்

எஸ்.எஸ். ஸ்டாலினின் பேட்டிக்கு நூற்றுக்கு நூறு மார்க் போரையும் மூலதனமாகக் கருதும் அமெரிக்கா வில் பள்ளிக் குழந்தைகள் ஆயுதமேந்து வதில் ஆச்சரியமென்ன?

- பி.வள்ளி, திசையன்விளை

நரேஷ்குப்தாவின் பேட்டி அளவில் சிறிதென்றாலும், குணத்தில் 'நறுக்.'

- கோமளா ரங்கநாதன், சென்னை

லத்திகா சரண் பேட்டி கொடுக்கத்

வட்டமேஜை

சம்திங் ஸ்பெஷல்!

கொடுக்கலாம்.

- எஸ்.ஆர்.ஹரிஹரன், சென்னை

கிருஷ்ணரின் ஆனந்தப் புன்னகை பற்றிப் பேசிய அமிர்தானந்தமயியின் அட்வைஸ் சம்திங் ஸ்பெஷல்.

- கே.பி.ராமன், சென்னை

ரங்கனே தெய்வம்; பொங்கலே பிரசாதம். கம்பமே (தூண்) தண்ணீர் என்ற பாரம்பரிய பழக்கம் தொடர்ந்து, தற்போதும் பரிமள சுகந்தம் கமழ்ந்து வருகிறது.

- எஸ்.கௌரிலஷ்மி, ஸ்ரீரங்கம்

அரசியல் கட்சிகள், இலவசங்களை அதிகமாக அறிவிப்பதால், தமிழகம் பொருளாதாரத்தில் பின்னடையும் என்பதைக் காட்டிய கார்ட்டூன் அருமை!

- இரா.சக்கரபாணி, மதுரை

ஆயுத வியாபாரத்தையும், தயங்கினாலும் கடமையில் கண்ணாய் இருக்கிறாரே! பாராட்டப்பட வேண்டிய விஷயம்தான்.

- வே.முருகேசன், சென்னை

எம்.ஜி.கன்னியப்பனின் 'வசூல் ராஜாக்கள்' கவிதை சூப்பரோ சூப்பர்.

- மூ.மோகன், வேலூர்

சரத்குமார் கூறிய குற்றச்சாட்டுக்கு தராசார் பதில் தந்த விதம் நெத்தியடி.

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

'அம்மான்னா சும்மா இல்லடா' படித்து, சிரித்துச் சிரித்து வயிறு வலித்தது.

- ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

பெண்களின் மன உணர்வுகளையும், எதிர்பார்ப்புகளையும் அழகாகச் சித்திரித்துள்ளார் ஜி.ஆர்.சுரேந்தர்நாத். ஸ்யாமின் ஓவியங்கள் 'அழகி'யை மேலும்

அழகுபடுத்தின.

- வி.திலகம்,
திருநெல்வேலி

காஞ்சி கிருஷ்ணாவின் 'வளம் தரும் வாஸ்து' பல வாஸ்து சந்தேகங்களைப் போக்குகிறது.

- ஜி.குப்புசாமி,
சங்கராபுரம்

கு.ஞானசம்பந்தனின் தொடர் நகைச்சுவை



யோடு யதார்த்தத்தைப் பேசுகிறது.

- ஜி.ராமதாஸ், தஞ்சாவூர்

'**அ**ழகி' எங்களை ரொம்பவே ஈர்த்து விட்டாள். தேவியின் வாழ்க்கை பலருக்கு நல்ல பாடம்.

- டி.கே.சுப்பிரமணியன்,
திருப்பரங்குன்றம்

'**ஊ**ரான் புள்ளைய' சிறுகதையின் நடையழகு பிரமாதமாக இருந்தது.

- இராம.பார்த்திபன், வயலூர்

'**வோ**ட்டு யாருக்கு?' தலையங்கம் என் போன்றவர்களின் உள்ளக்கிடக்கையைப் பிரதிபலித்தது.

- என்.சண்முகம், திருவண்ணாமலை

தா.பாண்டியனின் தடாலடி பேட்டியை ரசித்துப் படித்தேன்.

- சி.பரத், சென்னை - 82

கனிமொழியின் பேட்டி வெகு யதார்த்தம்!

- ஆர்.ராமசுப்ரமணி, திருவாரூர்

கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
ஆர்.சி. ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

'கலைஞர் கலர் தொலைக்காட்சி இலவசமாகக் கொடுப்பேன் என்கிறார். அப்படிக் கொடுக்கப்படும் தொலைக்காட்சி பழுதானால் அதை யார் ரிப்பேர் செய்து கொடுப்பார்கள்?' என்று தேர்தல் பிரசாரத்தில் கேட்டார் வைகோ.



கலைஞர்?' என்று ஆர்வமுடன் கேட்டார்கள். இந்த அறிவிப்பும், கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்ற வாக்குறுதியும் கலைஞர் அணி வெற்றிபெற உதவியிருக்கிறது என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

இவை மட்டுமா? விவசாயிகள் வாங்கிய கூட்டுறவுக் கடன்கள் அசல், வட்டியுடன் அடியோடு தள்ளுபடி, இலவச காஸ் ஸ்டவ், வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதம் 300 ரூபாய் உதவிப் பணம், கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் உதவிப் பணம், ஏழைப் பெண்கள் திருமணத்துக்கு 15,000 ரூபாய், நிலமில்லாதவர்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் என்றெல்லாம் தேர்தல் அறிக்கையில் கலைஞரால் சொல்லப்பட்ட வாக்குறுதிகளை நம்பி லட்சக்கணக்கானோர் வோட்டுப் போட்டிருப்பார்கள். இவற்றைவிட மிக முக்கியமாக, மத்திய அரசு அதன் ஊழியர்களுக்காக நியமித்துள்ள ஆறாவது ஊதிய கமிஷன்

என்ன செய்யப்

'அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. இந்தத் தேர்தலுக்குப் பின்னர் வைகோவுக்கு எந்த வேலையும் இருக்காது. எனவே அவரே தெருத்தெருவாகச் சென்று பழுதுபார்க்கும் வேலையை எடுத்துக்கொள்ளலாம்' என்று நெற்றியடியாக நையாண்டி பதிலடி கொடுத்தார் ஸ்டாலின். கலைஞர் தேர்தல் அறிக்கையில் சொன்ன இலவச கலர் தொலைக்காட்சி, வாக்காளர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பைத் தோற்றுவித்திருக்கிறது என்பது உண்மை. நாம் கவரேஜுக்குச் சென்ற ஏரியாக்களில் சந்தித்த பெரும்பாலான கிராமத்து மக்கள் 'என்ன பிராண்ட் தொலைக்காட்சி கொடுப்பார்

சிபாரிசுகளை மாநில அரசு ஊழியர்களுக்கும் அமல்படுத்துவதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் காலியாக உள்ள மூன்று லட்சம் அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும் கலைஞர் சொல்லியிருக்கிறார். இப்போது பொதுமக்கள் மற்றும் எதிர்கட்சியினர் முன் உள்ள கேள்வி அல்லது சந்தேகம், 'கலைஞர் கொடுத்துள்ள எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியுமா? அதற்கு ஆயிரக்கணக்கான கோடிகள் செலவாகுமே! நிதி எங்கேயிருக்கிறது?' என்பதுதான். கலைஞரின் தோள்களில் ஏற்றப்பட்டுள்ள சுமை மிக அதிகம்தான். எப்படிச் சமாளிக்கப் போகிறார்?

உதாரணமாக அரிசியை எடுத்துக்

கொள்வோம். சுமார் ஆறரை கோடி மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டில் ரேஷன் கார்டு வைத்திருக்கும் குடும்பங்கள் ஒரு கோடியே எண்பத்தேழு லட்சம். அவர்கள் மாதம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசி பெறுகிறார்கள். வறுமை கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு கிலோ ரூ.5.65 வீதமும், அதற்கு மேலே உள்ளவர்களுக்கு கிலோ ரூபாய் 8.30 வீதமும் அரிசியைக் கொடுக்கிறது மத்திய அரசு. ஆனால், கடந்த அரசு கிலோ ரூபாய் 3.50க்கு இந்த அரிசியை விற்றது. இதன் மூலம் வரும் இழப்பைச் சரிக்கட்ட வருடத்துக்கு 2400 கோடி ரூபாய் மான்யமாகக் கொடுத்தது தமிழக அரசு. இப்போது கலைஞர் சொன்னபடி இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ போட்டால், தமிழக அரசு ஈடு செய்ய வேண்டிய மான்யம் 3000 கோடியைத் தொடும். விவசாயிகள் கடன் ரத்துக்கு சுமார் 400 கோடி ரூபாய் ஆதாரம் தேவைப்படும்.

அதேபோல கலர் தொலைக்காட்சி இல்லாத குடும்பங்கள் தமிழகத்தில் 30 லட்சம் என்று கணக்கெடுத்து வைத்திருக்கிறது தி.மு.க. கலைஞரின் கணக்குப்படி பார்த்தால் கலர் தொலைக்காட்சிக்கு 600 கோடி ரூபாய் தேவையாகிறது. இது தவிர வேலையில்லாத இளைஞர்களுக்கு உதவிப்பணம், கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி என்று சுமார் 50 கோடிக்குச் செலவு காத்திருக்கிறது. ஏற்கெனவே மின்சார வாரியம் தள்ளாடிக் கொண்டிருக்க, நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம் என்று அறிவித்திருக்கிறார் கலைஞர். இவற்றையெல்லாம்விட தமிழக அரசின் நிதி ஆதாரங்களை அசைத்துப் பார்க்கும் விவகாரம், ஆறாவது சம்பளக் கமிஷனை அமல்படுத்துவதும், பணியிடங்களை நிரப்புவதும்தான்.

அறிவித்துள்ள இலவச திட்டங்கள் அனைத்துமே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு என்று கலைஞர் அறிவிக்கக் கூடும். ஆனால் வறுமைக் கோட்டை நிர்ணயிக்கும் பொறுப்பும் தற்போது மாநில அரசுகளின் கையில் இருந்து திட்ட கமிஷன் கைக்குப் போய் விட்டது. 'இந்த வாக்குறுதிகளை பிரதமரை நம்பித்தான் அறிவித்திருக்கிறேன்' என்று தீவுத்திடல் கூட்டத்தில் கலைஞர் சொன்னதற்கு பிரதமர் ஏதும் பதில் சொல்லவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கும் திட்டங்களைக் கைவசம் வைத்திருக்கிறது தி.மு.க. டாஸ்மாக் கடைகளை ஏலம்விட்டு தனியாரிடம் ஒப்படைத்தால் கூடுதல் வருமானம் நிறையக் கிடைக்குமாம். அதுபோல அ.தி.மு.க. ஆட்சியில் மணல் மூலம் வரும் வருமானம் தனியார் கைகளில் போய்ச் சேருகிறது என்றும் அதை அரசுக்குத் திருப்பி விட முடியும் என்றும் சொல்கிறார்கள். வருமானத்தைப் பெருக்க சாராயக் கடைகள் திறக்கப்படலாம்.

போகிறார் கலைஞர்?

கலைஞரின் வாக்குறுதிகளை நிறைவேற்றும் பெரிய பொறுப்பு நிதியமைச்சருக்குத்தான். இவை எல்லாவற்றுக்கும் மேலாக வாக்குறுதிகளை நிறைவேற்ற கூட்டணிக் கட்சிகள் அபஸ்வரம் எழுப்பாமல் உறுதியாக ஆதரவு தெரிவிக்க வேண்டும். சென்ற பட்ஜெட்டை தாக்கல் செய்த பொன்னையன், 2006-07 நிதியாண்டில் பட்ஜெட் பற்றாக்குறை 5000 கோடியாக இருக்கும் என்று அபாய சங்கு ஊதியிருக்கிறார். என்ன செய்யப் போகிறார் கலைஞர் என்று ஏகப்பட்ட எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள் மக்கள்.

- ப்ரியன்

படம் : ஸ்ரீஹரி

சமீபத்தில் சாதனை சரித்திரத்தில் இடம்பெற வேண்டுமென்று சில பள்ளி மாணவர்கள் தொடர்ந்து ஐந்து மணி நேரம் யோகாசனப் பயிற்சி செய்ததாகச் செய்தி.

'இது சரியா? இவ்வளவு நேரம் தொடர்ந்து யோகாசனங்கள் செய்வதால் உடல் பாதிக்கப்படாதா?'- சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள கிருஷ்ணமாச்சாரி யோக மந்திரத்தின் யோக சிகிச்சை இயக்குநர் டாக்டர் சந்திரசேகரனைச் சந்தித்தோம்.



''ஏதோ ஒரு நோக்கத்துக்காக - சாதனைச் சரித்திரத்தில் இடம்பெற என்றாலும் கூட - யோகாசனங்களைச் செய்திருக்கிறார்கள் என்றால், அதில் தவறு காண முடியாது. யோகாசனப் பயிற்சிக்கு வரும்போது தெளிவான நோக்கம் இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு சிலர் இதைவிட அந்த ஆசனம் அதிகப் பயன் தருகிறதே, இது இதைவிடப் பரவாயில்லையோ என்பது போல் அலை பாய்வார்கள். அதுதான் தவறு.

ஆனால், இப்படி அதிக நேரம் யோகாசனம் செய்வதற்கு முன் பல நிலைகள் உள்ளன. அவற்றிற்குத் தங்களைத் தயார் செய்துகொண்டார்களா என்பது முக்கியம். முக்கியமாக சுவாச அளவு, மன உணர்வுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

நம் உடலை வருத்திக்கொள்வது என்பது கூடாது. அப்படிச் செய்தால் அது யோகாவின் அடிப்படையைத் தகர்த்த மாதிரி ஆகிவிடும்.

எங்களைப் பொறுத்தவரை தினமும் இருபது நிமிடங்களிலிருந்து ஒரு மணி நேரம் யோகாசனங்களைச் செய்தாலே போதுமானது. ஒரு மணி நேரம் என்ற அதிகபட்ச அளவுகூட யோகா கற்றுத் தரும் ஆசிரியர் போன்றவர்களுக்குத் தான்.

யோகாசனங்கள் செய்யும்போது மனம் அதில் லயிக்க வேண்டும். இல்லையென்றால் டி.வி.யைப் பார்த்துக் கொண்டே உடற்பயிற்சிகள் செய்யலாமே? ஆனால் அதுவல்ல யோகா.

'அதியோகம்' - அதாவது தேவைக்கதிகமாக ஆசனங்கள் செய்வது - பல சமயங்களில் விபரீத விளைவுக்கு வழி வகுக்கலாம். எனக்குத் தெரிந்த

அளவுக்கு



• டாக்டர் சந்திரசேகரன்

ஒருவர், தினமும் நாற்பது நிமிடங்கள் சர்வாங்காசனம் செய்வதாகச் சொன்னார். 'சர்வாங்காசனம்' என்ற பெயரே உடலின் எல்லாப் பாகங்களுக்கும் பயிற்சி அளிப்பதைக் குறிக்கிறதே என்று வேறு கூறினார். இது தோள்களை ஆதரவாகக் கொண்டு நிற்கும் ஆசனம் (சிரசாசனத்தில் தலையை ஆதரவாகக் கொண்டு நிற்பதைப் போல). அவரது

மார்புப் பகுதி உள்ளடங்கிக் காணப்பட்டது. சுவாசிப்பதில் சிக்கல் ஏற்பட்டதாகக் கூறினார். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் அவரது நுரையீரலில் காசநோய் உருவானது தெரிந்தது. மிக அதிகமாக ஒரு குறிப்பிட்ட ஆசனத்தைச் செய்ததில் அவரது நுரையீரலின் கொள்ளளவு குறைந்ததைத் தொடர்ந்து மேற்படி பாதிப்பும் சேர்ந்து கொண்டது. உடனடியாக அவரை



மிஞ்சினால்...

சர்வாங்காசனம் செய்வதை நிறுத்தச் சொன்னேன். அதற்கு எதிரான சில ஆசனங்களைச் செய்து சரிப்படுத்தினேன்.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது சந்தேகமில்லாமல் யோகாசனப் பயிற்சிக்கும் பொருந்தும்தான்'' என்றார் டாக்டர் சந்திரசேகரன்.

- ஜி.எஸ்.எஸ்

சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளர் சுஷ்மா ஸ்வராஜ், கட்சி அலுவலகமான கமலாலயத்தில் கல்கிக்கு அளித்த பிரத்யேகப் பேட்டி.

பா.ஜ.க.வுக்கு இது மிகவும் கஷ்டங்கள் நிறைந்த காலகட்டம் என்று சொல்லலாமா?

"ஒரு அரசியல் கட்சி என்றால் அதற்கு ஏற்றத்தாழ்வுகள் இருக்கத்தான் செய்யும் என்பதை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். இது கஷ்டங்கள் நிறைந்த காலம் என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். சவால்கள் நிறைந்த காலகட்டம் என்று வேண்டுமானால் சொல்லலாம். அவற்றை எப்படி எதிர் கொள்கிறோம் என்பதுதான் முக்கியம். இந்த நிலைமையை மனம் தளர்ந்து போகாமல், மிகவும் தைரியமாகவும் திறமையாகவும் வெற்றிகரமாகவும் சமாளித்துக் கொண்டிருக்கிறோம்."

பாராளுமன்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவது தவிர, ஒரு எதிர்கட்சி என்ற முறையில் வேறு என்ன உருப்படியாக பா.ஜ.க. செய்து கொண்டிருக்கிறது?

"மிகச் சரியாகச் சொல்ல வேண்டுமானால், பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சிக்கும், பா.ஜ.க.வுக்கும் வெறும் ஏழு இடங்கள்தான் வித்தியாசம். கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு காரணமாக அவர்கள் ஆளும்கட்சியாக இருக்கிறார்கள். நாங்கள் எதிர்கட்சியாக இருக்கிறோம். எதிர்கட்சியாக இருப்பது எங்களுக்கு ஒன்றும் புதிது இல்லை. நாங்கள் நாற்பது வருடங்கள் எதிர்கட்சியாகத் தான் இருந்திருக்கிறோம். ஆனால் காங்கிரஸ் எதிர்கட்சியாக இருந்தபோது மிகவும் தடுமாறிப்போனது உண்மை.

எதிர்கட்சி என்ற முறையில் நாங்கள் 'கண்காணிக்கும் நாய்'போல இருந்து வருகிறோம். தவறு நிகழ்ந்தால் நாங்கள் விடமாட்டோம் என்பதை மத்திய அரசு புரிந்து கொண்டிருக்கிறது. அதையும் மீறி தவறுகள் செய்கிறபோது, எதிர்கட்சி என்ற முறையில் நாங்கள் தக்கபடி நடவடிக்கைகளில் இறங்கிவிடுகிறோம். இந்த அரசு பதவி ஏற்றதிலிருந்தே, கறை படிந்த மந்திரிகள் விஷயத்தில் நாங்கள் காட்டிய கெடுபிடியால் பல தலைகள் உருண்டன. வோல்கர் விவகாரத்தில், நாங்கள் காட்டிய எதிர்ப்பு காரணமாகவே நட்வர்சிங் பதவி இழந்தார். பாராளுமன்றத்துக்குள்ளே மட்டுமில்லாமல், வெளியிலும் மக்கள் பிரச்னை குறித்து தொடர்ந்து



குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 'சாமான்ய மனிதர்களின் அரசாங்கம்' என்று சொன்ன மத்திய அரசின் 'கை' இப்போது சாமான்ய மக்களின் பாக்கெட்டுக்குள் இருக்கிறது. விலைவாசி உயர்வைக் கண்டித்து, ஒரு வார காலம் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். இப்போது கோதுமை இறக்குமதி விவகாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம். உண்மையில், விவசாயிகள் கோதுமை இறக்குமதி

குறித்து கொதித்துப் போயிருக்கிறார்கள். ஆஃப்கானிஸ்தானில் இந்திய இன்ஜினீயரின் படுகொலை அயலுறவுத் துறையின் தோல்வியையே காட்டுகிறது."

உமாபாரதியை கட்சிக்குள்ளேயே அடக்கி வைக்கவும் முடியவில்லை. துணிந்து வெளியேற்றவும் முடியவில்லையே. இப்போது வெளியேற்றப்பட்டு விட்டாலும் ஆரம்பம் முதலே உமா பாரதி விவகாரத்தை ஏன் உங்கள் கட்சி தவறாகவே கையாண்டது?

"இது உங்களுடைய கருத்து. ஒரு பெரிய அரசியல் கட்சியில் இதுபோன்ற பிரச்னைகள் வருவது சகஜம். உமாபாரதி கட்சியில் ஒரு முக்கியமான தலைவர். அவரைப் போன்றவர்களை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று கட்சியிலிருந்து வெளியேற்றிவிடுவது தவறு. அந்தப் பிரச்னையை மிகவும் பொறுமையுடன் கட்சி கையாண்டது. இனிமேலும் பொறுத்துக்கொள்ள முடியாது என்ற நிலை வந்தபோது, கடுமையாக நடந்து கொள்ள வேண்டியிருந்தது. என்னைப் பொறுத்தவரை, உமாபாரதி விவகாரத்தை பா.ஜ.க. மிகவும் சாதுர்யமாகக் கையாண்டதாகவே கருதுகிறேன்."

பிரதமர் என்ற முறையில் மன்மோகன்சிங்கின் செயல்பாடுகள் குறித்த உங்கள் மதிப்பீடு என்ன?

"இந்தியாவில் மெஜாரிட்டி பலத்துடனும், மெஜாரிட்டி பலம் இல்லாமலும் பிரதமர்கள் இருந்திருக்கிறார்கள். கூட்டணி ஆட்சி நடத்திய பிரதமர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் முடிவுகள் எடுக்கும் திறமையைப் பெற்றிருந்தார்கள். ஆனால், பிரதமர் பதவியில் மன்மோகன்சிங் இருக்கிறார், அவ்வளவுதான். அதிகாரமெல்லாம் அவருக்கு இல்லை. சுதந்திர இந்தியாவின், மிகவும் பலவீனமான பிரதமர் என்று மன் மோகன் சிங்கைக் கூறலாம்."

பா.ஜ.க. ஆரம்பித்து 25 ஆண்டுகளாகிவிட்டன. ஆனால், இன்னமும்கூட உங்கள் கட்சி தமிழ்நாடு, கேரளா, மே.வங்காளம் போன்ற சில மாநிலங்களில் உதிரிக் கட்சி போலத் தானே இருக்கிறது?

"இந்தியா முழுவதும் நாங்கள் தடம் பதிக்க விரும்புகிறோம். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். ஏற்கெனவே இரண்டு பிரதான கட்சிகள் இருக்கும் இடங்களில், மூன்றாவது சக்தியாக வளர்வது கடினம். இருந்தாலும் நாங்கள் அவசரப்படவில்லை. நிதானமாக, ஆனால் படிப் படியாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம்."

'பி.ஜே.பி.க்கு இது கஷ்டகாலமா?'

நாட்டில் ஏராளமான, அதிமுக்கியமான மக்கள் பிரச்னைகள் உள்ளன. ஆனால், பா.ஜ.க. மற்றவற்றையெல்லாம் விட்டுவிட்டு எப்போது பார்த்தாலும் அயோத்தி பிரச்னைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறதே?

'பீகார், மத்திய பிரதேசம் போன்ற சட்டசபைத் தேர்தல்களின்போது அயோத்தி பிரச்னையை நாங்கள் பேசவில்லையே! மின்சார வசதி, சாலை வசதி, குடிதண்ணீர் பிரச்னை பற்றித்தானே பிரசாரம் செய்தோம். சட்டீஸ்கர் மாநில சட்டசபைத் தேர்தலின்போது அஜித்ஜோகியின் ஊழலைத்தானே மக்கள்முன் வைத்தோம்? எனவே உங்கள் கேள்வியில் சிறிதும் உண்மையில்லை."

- எஸ்.சந்திரமௌலி

படம் : **ஸ்ரீஹரி**

ஒரு பத்திரிகையாளனுக்கேயுரிய இறுக்கமான சந்தேகக் கண்ணோட்டத்துடன்தான் 'வாழும் கலை பயிற்சி' வகுப்புகளை நெடுநாட்களாக நோக்கி வந்தேன். ஆனால், ஒரு கட்டத்தில் அலைக்கழிப்பு மிகுந்துபோய் ஏதேனும் ஒரு வழிகாட்டலைப் பற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பற்றிய அந்த நெறி பகுத்தறிவை உள்ளடக்கியதாகவும் ஜகதல பிரதாப பிரகடனங்களற்றதாகவும் அமைந்து மனத்துக்கும் உடலுக்கும் ஒருசேர உரமளித்திருக்கிறது.

மே 13, 2006 அன்று ஐம்பதாவது பிறந்த நாள் காண்கிற, ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி என்று உலகெங்கும் அறியப்படும் ஆன்மிக வழிகாட்டியால் வகுக்கப்பட்டுள்ளது இப் பயிற்சி. மனித உடலும் மனமும் மூச்சுக்காற்றால் கட்டுப்படுத்தப்படுகின்றன என்கிற அடிப்படை உண்மையை அஸ்திவாரமாகக் கொண்டது (நமது பழைய யோக சாஸ்திரம்தான்). சராசரி வாழ்க்கையில், நமது நுரையீரல்களின் ஆற்றலில் சுமார் முப்பது சதவிகிதத்தைத்தான் நாம் பயன்படுத்துகிறோம். அப்படியானால், நாம் சுவாசிக்க வேண்டிய பிராண வாயுவில் எவ்வளவு பற்றாக்குறை இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்! இந்தப் பற்றாக்குறையை நேராக்கும் மூச்சுப் பயிற்சிகளை மையப்படுத்தியது வாழும் கலை பயிற்சி வகுப்பு.



• அகஸ்தியன்



• துக்ளக் சத்யா

இதற்குமேல் இந்த வகுப்புகள் பற்றி விவரித்துச் சொல்ல, பயிற்சி பெற்ற யாருக்கும் அனுமதி கிடையாது என்பதால் இதோடு நிறுத்திக் கொள்கிறேன். ஆனால் இந்த ஆறு நாள் மாலை வேளை வகுப்புகளில் பயின்று, அங்கு கற்றுத்தரப்பட்ட சுதர்ஷன் க்ரியா என்கிற சுமார் இருபது - இருபத்தைந்து நிமிடப் பயிற்சியை அன்றாடம் செய்து வருவதால் ஏற்பட்டிருக்கும் மலர்ச்சியை விவரிக்கலாம்.



• விநோதய சித்தம் • ஒரு காட்சி...

* பயிற்சி ஆரம்பித்த காலம் முதல் ஜலதோஷம், தலைவலி, ஜுரம் இல்லை. எதிர்ப்பு சக்தி கூடியிருக்கிறது.
* அலையலையாக எழும் அலுவலகப் பிரச்னைகளிலிருந்து விடுபட, 'சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போகலாமா அல்லது துறவு மேற்கொள்ளலாமா?' போன்ற விபரீத - அபத்த சிந்தனைகள் எழுவதில்லை.
* பிரச்னைகளை, நம்மை நோக்கி எய்யப்பட்ட அம்புகளாகப் பாராமல், உலகில் நிலவுகிற சூழ்நிலைகளாக ஏற்று, தீர்வுக்கு முயற்சி செய்யும் தெளிவு அரும்பியிருக்கிறது.
* நேசித்தவர்களை மேலும் ஆழமாக நேசிக்க முடிகிறது. வெறுத்தவர்களை வெறுக்காமல் ஏற்க முயற்சி செய்ய முடிகிறது.
* புறச்சூழல்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நிம்மதி, அமைதி நமக்குள் நிச்சயமாக இருப்பது சத்தியமாகத் தெரிகிறது.

சீதா ரவி



வாழ்வும் சாவும்!

'டம்மீஸ் கிரியேஷன்ஸ்' குழுவினர் வழங்கிய இந்த நாடகம், மரணத்திடம் வாய்தா வாங்கி வரும் ஒரு குடும்பத் தலைவனின் கதை!

சாவிடமிருந்து வாய்தா வாங்கினாலும் பிரச்னைகளிடமிருந்து வாய்தா வாங்க முடியாது என்பதை ஆரோக்கியமான நகைச்சுவை ததும்பும் வசனங்கள், காட்சிகள் மூலமாக விவரித்துக்கொண்டே போய் மனித மனத்தின் எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், உலகை விழுங்கும் அளவில் அவனுக்குள் தலைவிரித்தாடும் ஈகோ... அனைத்தையும் பிட்டுப் பிட்டு வைக்கிறது. கண்ணாடி முன் நின்று நம் முகத்திரைகளை நாமே கிழித்துப் பார்த்துக் கொள்ளும் அனுபவம். 'வினோதய சித்தம்'! படைத்தவர்களும் நடித்தவர்களும் அர்ப்பண உணர்வோடு இயங்கியிராவிட்டால் இந்த நாடகம் 'நம்ப முடியாத அதீதம்' என்று முத்திரை பெற்றிருக்கும். நம்ப வைத்தவர்கள் வெறும் டம்மிக்கள் அல்ல!

இந்தப் பயிற்சியை உடனே போய் எல்லோரும் மேற்கொள்ளுங்கள் என்று சிபாரிசு செய்யப்போவதில்லை. விரும்புவோருக்கும் தேவைப்பட்டவர்களுக்கும் இப்படி ஒரு மிக எளிய பரிபூர்ணமான வழி இருப்பதைச் சுட்டிக்காட்டி பகிர்ந்து கொள்ள மட்டுமே விரும்புகிறேன்.

வாழ்வைப் பற்றிய சிறு தெளிவு உண்டான கையோடு சாவைப் பற்றிச் சிரிக்கச் சிரிக்கச் சிந்திக்க வைத்தது தேவன் அறக்கட்டளை. ஆண்டுதோறும் நகைச்சுவை எழுத்தாளர்களுக்கு தேவன் நினைவு விருது வழங்கி வரும் இவ்வமைப்பு, விருது வழங்கும் விழாவின் (மே 5, 2006) இறுதியில் 'வினோதய சித்தம்' என்ற நாடகத்தை அரங்கேற்றியது.

• ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்



நாடகத்துக்கு முன்னதாக அதே அர்ப்பண உணர்வுடன் நகைச்சுவை எழுத்தாளர் தேவனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. நிர்வாக அறங்காவலர் சாருகேசியின் நகைச்சுவை ததும்பும் வரவேற்புரை, தலைமை வகித்த ஸ்ருதி இதழாசிரியர் கே.வி.ராமனாதனின் வரலாற்று பூர்வமான சிறப்புரை, விருது பெற்ற அகஸ்தியன் சிரிக்கச் சிரிக்க ஆற்றிய ஏற்புரை, அதே மேடையில் விருதுபெற்ற துக்ளக் சத்யாவின் சற்றே கோபம் கொண்ட ஏற்புரை... அனைத்துமே, தமிழக எழுத்துலகில் நகைச்சுவை தழைத்து வாழ்ந்து கொண்டிருப்பதை இலகுவாகவும் அமைதியாகவும் உணர்த்தின.

படங்கள் : **யோகா**

தேர்தல் வரைக்கும் நம்மை யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள் என்று ரஜினி குழந்தையாய் குதூகலம் அடைந்தது முடிவுக்கு வந்துவிட்டது. தேர்தல் முடிந்துவிட்டதால், இப்போது அனைவரது கவனமும் (மீண்டும்) 'சிவாஜி'மீதுதான். இப்போது 'சிவாஜி' படப்பிடிப்புத் தளத்தில் என்னதான் நடக்கிறது? யூனிட்டிலிருந்து நமக்குக் கிடைத்த சில அப் டு டேட் தகவல்கள்:

* இதுவரைக்கும் முப்பது சதவிகித காட்சிகளே படமாக்கப்பட்டுள்ளன. படம் தீபாவளிக்கு வரும் என்று ஆருடம் சொல்லப்பட்டது. ஆனால் தற்போதைய நிலவரப்படி அடுத்த பொங்கலுக்கு ரிலீஸ் தள்ளிப் போகலாம்.

* படப்பிடிப்புத் தளத்தில் ரஜினி ஒரு நடிகராக மட்டுமே பார்க்கப்படுகிறார். லைட்டிங்குக்கு ஏற்றவாறே காட்சிகள் படமாக்கப்படுகின்றன. இதனால் பல முறை ரஜினி ஷாட் இல்லாமல் வேடிக்கை பார்க்கவேண்டிய நிலைமை வருமாம். அதேபோல் வழக்கமாக ரஜினி படத்தில் அவருடைய கையே மேலோங்கி யிருக்கும். ஆனால் சிவாஜியில் ஷங்கர் தான் டீம் லீடர். முடிவு எடுக்கும் உரிமை அனைத்தும் ஷங்கருக்கே.

* சிவாஜியில் ரஜினிக்கு எதிராக மல்லுக்கு நிற்கப்போவது யாரென்ற மெகா கேள்விக்கு விடை தெரிந்து விட்டது. ஒன்றல்ல இரு வில்லன்கள். தெலுங்கு நடிகரான சுமனும், 'மெட்டி ஒலி' போஸும்தான் ரஜினியை முறுக்கி விடும் வில்லன்கள்.

* படத்தில் மணிவண்ணனும் நடிக் கிறார். ஒரு நாள் அவருடைய அம்மா படப்பிடிப்புத் தளத்துக்கு வந்து ரஜினி யைக் கண்டு உருகினாராம். "எம் பையன் நடிகர் திலகம் சிவாஜியோட நடிக்கும் போதுதான் முதன் முதலா ஷூட்டிங் ஸ்பாட்டுக்குப் போயிருந்தேன். அடுத்து இப்போதான்" என்று ரஜினியினுடைய கையைப் பிடித்துச் சொல்ல, ரஜினி நெகிழ்ந்து போய்விட்டாராம்.

* ஷங்கரும், ஒளிப்பதிவாளர் கே.வி. ஆனந்தும் நொடிக்கொருமுறை ஸ்க்ரிப்ட் பற்றி விவாதித்துக் கொள்வார்களாம். ஆற அமர மனதில் ஒருமுறை விஷுவல் செய்தபின்தான் எந்தக் காட்சியும் படமாக்கப்படுகிறதாம்.

* 'பில்லா' படத்தில் வந்தது போன்ற ரஜினியினுடைய இளமையான கெட்-அப், இந்தியா முழுக்கப் பரபரப்பு ஏற் படுத்தும் என யூனிட்டினர் தெரிவிக்கின் றனர். ஹாலிவுட் நடிகர்கள் பாணியில் வயதானாலும் மெருகு குறையாத





யுக்தியை இப்போதுதான் ரஜினி கற்றிருப்பதாகக் கூறுகிறார்கள்.

● ஒரு மாதத்துக்கு முன்பு யாரோ ஒருவர் மூலமாக சிவாஜி படத்தினுடைய ஸ்டில்கள் இ-மெயில் வழியே பத்திரிகைகளுக்குக் கிடைத்தன. எப்படி? படத்தின் காட்சிகள் பிராசஸிங் செய்வதற்காக மும்பை சென்றபோது இடையே களவாடப்பட்டதாம். அவையே பின்னர் புகைப்படங்களாக உலா வந்ததாகக் கூறப்படுகிறது.

● இதுவரைக்கும் தமிழில் யாருக்கும் வழங்கப்படாத சம்பளம், ரஜினி முதற்கொண்டு அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளதாம். படம் சூப்பர் ஹிட் ஆகும் பட்சத்தில் எத்தனை கோடி வசூலைக் கொட்டும் என்று யாராலும் கணித்துச் சொல்ல முடியவில்லை. அதிலும் ரஜினியின் மார்க்கெட் சர்வதேச லெவலை எட்டிவிட்ட நிலையில் வியாபாரம் நூறு கோடியைத் தொட்டாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லையாம்.

● 'சிவாஜி' படத்தின் கதை, இதுவரைக்கும் ஷங்கர், ரஜினி, ஏவி.எம். சரவணன், கே.வி.ஆனந்த், சுஜாதா என விரல்விட்டு எண்ணும் நபர்களுக்கே தெரிந்த புதையல் ரகசியம். மற்றபடி படத்தில் நடிப்பவர்களுக்கு அவரவர் நடிக்கும் காட்சி, வசனம் மட்டுமே விளக்கப்படுகிறதாம். 'சொன்ன காட்சியை சரியாகச் செய்து முடித்தால் போதும், கதையை யாரும் கேட்க வேண்டாம்' என்று கட்டளையாம். அடேங்கப்பா!

- பப்பி



கல்கி



2006 மே 21
விய வைகாசி 7
மலர் : 64
இதழ் : 42

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- பாரதியார்.

'இலவச' வெற்றி!

தேர்தல் வெற்றியைக் கொண்டாடும் தி.மு.க. கூட்டணிக்கு நமது மனமார்ந்த வாழ்த்தும் பாராட்டும் உரியது.

ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மதியாத ஓர் அராஜக ஆட்சி முடிவுக்கு வந்திருப்பதும் வரவேற்கத்தக்கது.

கூட்டணி சிக்கல்களைச் சமாளித்த தி.மு.க. தலைவரின் முயற்சியும் கடும் கோடையையும் பொருட்படுத்தாமல் முதிர்ந்த வயதில் அவர் மேற்கொண்ட பிரசாரமும் அசாதாரணமானவை.


ஆனால், தி.மு.க. கூட்டணிக்கு வெற்றிகிட்டியது கருணாநிதியின் அரசியல் அனுபவத்தாலா? உழைப்பினாலா? கூட்டணி கட்சிகளின் ஒத்துழைப்பினாலா?


இவற்றையெல்லாம்விட, அவர் அறிவித்த இலவசங்களே வெற்றிக்கு உதவியிருக்கின்றன என்பதுதான் உண்மை!

தேர்தல் அறிவிப்பு வெளியானபோது கருத்துக் கணிப்புகள் அ.தி.மு.கவுக்கு ஆதரவாகவே இருந்தன. போகப் போக இந்த நிலை சற்று மாறியது. ஆனாலும், தி.மு.க. கூட்டணிக்குப் பெரும்பான்மை கிடைப்பது கஷ்டம் என்றும் 'தொங்கு சட்டசபை' அமையக் கூடும் என்றும் கூட கணிப்புகள் வெளியாயின. இப்படி நிலையற்றதோர் சூழல் நிலவியதாலோ என்னவோ, தி.மு.க. தரப்பில் திடீரென்று இலவசங்கள் வரிசையாக அறிவிக்கப்பட்டன.

குறிப்பாக, இலவச கலர் டி.வி அறிவிப்பு என்பது. தொலைக்காட்சி மயக்கத்தில் கட்டுண்ட எந்தவொரு சராசரி வாக்காளனாலும் எளிதில் நிராகரிக்க முடியாதது.

கருணாநிதியின் இலவச அறிவிப்புகளைத் தொடர்ந்து ஜெயலலிதாவும் விஜயகாந்தும் வகைதொகையின்றி மேலும் பல





இலவசங்களை அறிவித்ததுதான் இந்தத் தேர்தலின் காமெடி டிராக். அதிலும் ஜெயலலிதா கடைசி பிரசார தினத்தில், தாம் ஏற்கெனவே அறிவித்த இலவசங்களுடன் கருணாநிதி அறிவித்தவற்றையும் சேர்த்துத் தருவதாகச் சொன்னது, அபத்தத்தின் உச்சம்! இது இத்துடன் முடியாது. அடுத்தடுத்த தேர்தல்களில் மேலும் மேலும் ஆசைகளை வளர்க்கும்.

வாழ்க்கைக்கு மிக அவசியமான பொருள்களுக்கு மானியங்களோ தள்ளுபடியோ வழங்குவது என்பது மக்கள் நல அரசுகளின் வழக்கம்தான். ஆனால், முற்றிலும் இலவசமாக வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் தருவது என்பது, தாம் ஜெயிப்பதற்காக மக்களைச் சோம்பேறிகளாகவும் பிச்சைக்காரர்களாகவும் மாற்றும் சுயநல பாதகம்.

இந்தப் போக்கு இனியேனும் நமது அரசியலிலிருந்து அடியோடு ஒழிய வேண்டும். இலவசங்கள் சாத்தியமா என்பதல்ல பிரச்னை; அவை சமுதாயத்துக்கு நல்லதா என்று பார்க்க வேண்டும்.

கடந்த கால அரசியல் வரலாற்றின் அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால், இது போன்ற அபத்த அறிவிப்புகள் செய்யாமலே தி.மு.க. - அ.தி.மு.கவைத் தேர்தலில் தோற்கடித்திருப்பது தெரிய வருகிறது.

அப்போதெல்லாம் தி.மு.க. தலைவருக்கு இருந்த நம்பிக்கையும் கொள்கை அடிப்படையிலான பிரசாரம் மீது அவருக்கிருந்த பற்றுதலும் இப்போது ஏன், எதனால் ஆட்டம் கண்டன? தி.மு.க.வுக்குள் எது, எப்படி மாறியிருக்கிறது?... அதன் மூத்த தலைவர்கள் சிந்திக்கட்டும்.

புதிய ஆட்சி, 'இலவச' வாக்குறுதிகளை நிறைவேற்றியாகவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. கணிசமான நிதி தேவைப்படும். சாராயக் கடைகளைத் திறந்துவிடுவது வருமானத்துக்கு மிகவும் எளிதான வழி. அதனை இந்த அரசு தவிர்க்க வேண்டும். கூட்டணி கட்சிகள் விழிப்புடன் இருந்து இதை அனுமதிக்காமல் தடைபோட வேண்டும்.

'இலவச' வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மட்டும் போதாது. உற்பத்திக்கு உதவும் முதலீடுகள், வேலை வாய்ப்புப் பெருக்கம் (தகவல் தொழில்நுட்பத் துறையில் மட்டும் அல்ல!) விவசாய முன்னேற்றம், அடிப்படை வசதிகள் பெருக்கம் என பல சவால்கள் காத்துக் கிடக்கின்றன. அவற்றில் ஆழ்ந்த கவனம் செலுத்தி, சுறுசுறுப்பாகவும் இலஞ்ச - ஊழல் இன்றியும் இயங்குவதற்குக் கூட்டணி அரசு முனைப்புக் காட்டட்டும். ○

"சினிமாதான் எனக்கு மூச்சு!"

'பிருந்தாவனத்தில் நந்தகுமாரன்' படத்துக்காகத் தேர்வாகியிருக்கும் மானஸா, சென்னைத் திரைப்படக் கல்லூரி மாணவி. அந்த கேம்பஸ்"க்குள் நடக்கும் அனுபவங்கள் சிலவற்றை நம்மிடையே பகிர்ந்து கொண்டார்.

"பாட்டி வரலட்சுமி தெலுங்குல புகழ்பெற்ற நடிகை. அந்த ஜீன் எனக்குள்ளும் இருந்திருக்கு. ஆனாலும் வெறும் கதாநாயகியா நீண்டநாள் தாக்குப்பிடிக்க முடியாது. தொழில்நுட்பம் தெரிஞ்சா காலத்துக்கும் நிலைக்க முடியும்னு டி.எஃப்.டியில ஒளிப்பதிவு கத்துக்கப் போனேன். ஆனா அதுக்கு +2வுல அறிவியல் படிச்சிருக்கணும். காமர்ஸ் ஸ்டூடண்டான நான் உடனே எடிட்டிங்குக்குத் தாவினேன்.

திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, இயக்கம், எடிட்டிங், பிராசஸிங் என ஐந்து பிரிவுகளுக்கும் தலா பதினான்கு மாணவர்களை மட்டும்தான் தேர்ந்தெடுப்பாங்க. ஐ.ஐ.டி. லெவலுக்குப் போட்டி கடுமையா இருக்கும். அதுக்கு ஈடுகொடுக்க வி.டி. விஜயன் சார்கிட்டே கொஞ்சநாள் பயிற்சி எடுத்துக்கிட்டேன். இண்டர்வியூல டி.எஃப்டி மாணவர்களோட விருது வாங்கின படங்களை நாம விமர்சிக்கணும். அதுதான் முதல் படி. இதுல தேர்ச்சி பெற்றபிறகு நேர்முகத் தேர்வு. நாம தேர்ந்தெடுக்கிற துறை சம்பந்தமான அடிப்படை அறிவை ஆராய்வாங்க. இப்போ டி.எஃப்.டி. தேர்வுகள்ல தமிழ் அறிவும் சோதிக்கிறாங்க. என் செட்ல எல்லோரையும் திருக்குறள் சொல்லச் சொன்னாங்க. நான் சொன்னது 'கற்க கசடற...'



பாடப்புத்தகங்களே எங்களுக்குக் கிடையாது. எல்லாம் பிராக்டிகலா தான் கத்துக்கணும். புனே திரைப் படக் கல்லூரி அளவுக்கு சென்னை இளையையும் இப்போ நவீன மாக்கறாங்க. மாணவர்கள்ல பெண்கள் பாதிகூட இருக்க மாட்டாங்க. சென்னை வாசிகள் மிகக் குறைவு. எங்களுக்கெல்லாம் சினிமா தான் மூச்சு. கனவுலகூட சினிமா தான் வரும். குக்கிராமங்களிலிருந்தெல்லாம் வந்து உலக சினிமாவுல பெருசா சாதிக்க முயற்சி செய்றவங்களைப் பார்த்தா ஆச்சர்யமா இருக்கும்'' என்று கண்கள் விரிக்கும் மானஸாவுக்கு தமிழ் சினிமாவைக் கலக்க வேண்டுமென்பதில் அலாதி பிரியம்.

-ச.ந.கண்ணன்

அட்டை, படம் : **ஸ்ரீஹரி, சங்கர் சத்யமூர்த்தி**

காஞ்சி கிருஷ்ணா



பொதுவாக நம் வீட்டின் அமைப்பு முறைகள் மற்றும் வீட்டில் இருக்கும் பொருள்களால் மட்டும் நமக்கு வாஸ்து இருக்கும் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் அது தவறு. நம் வீட்டுக்கு அருகிலிருக்கும் அமைப்புகளாலும் வாஸ்து குறைபாடு வரலாம். இதற்கு சுற்றுப்புற வாஸ்து என்று பெயர். சுற்றுப்புற வாஸ்து பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன் சுற்றுப்புறம் என்று நாம் எவற்றைச் சொல்கிறோம் என்று தெரிந்து கொள்வோம்.

சுற்றுப்புற அமைப்புகளை இயற்கை அமைப்புகள், செயற்கை அமைப்புகள் என்று இரண்டாகப் பிரித்துக் கொள்வோம். உதாரணமாக ஆறு, குளம், கடல் போன்றவை இயற்கை அமைப்புகள். பொதுக்கிணறு, பாழடைந்த வீடு, மின்சார டிரான்ஸ்ஃபார்மர் போன்றவை செயற்கை அமைப்புகள். இவை அமைந்திருக்கும் முறை, திசைகூட நம் வீட்டில் மாற்றங்களை ஏற்படுத்தும். ஆகவே இவற்றில் எவை எவை எப்படி இருந்தால் நல்லது என்பதைத் தெரிந்து கொள்வோம். அதன்பிறகு அவற்றின் சாதக பாதகங்களைத் தெரிந்து கொள்வோம்.



கோயிலுக்கருகே குடியிருக்கலாமா?

வளம் தரும் வாஸ்து-5

கோயில்:

பொதுவாக நம் வீட்டுக்கு அருகில் கோயில் இருப்பது நல்லதுதான். ஆனால் கோயிலில் இருந்து நூறடி தள்ளி நம் வீடு இருப்பது வாஸ்து தோஷத்தைத் தடுக்கும். முக்கியமாக கோயிலின் மதில்சுவரை ஒட்டி வீடு இருக்கக் கூடாது.

காலி நிலம்:

வீட்டுக்கு அருகில் காலி நிலம் இருக்கலாம். அதில் தவறில்லை. ஆனால் அந்த நிலம் மேற்கிலும் தெற்கிலும் இருப்பது நல்லதல்ல.

பொதுக்கிணறு:

பொதுக்கிணறு கிழக்கு அல்லது வடக்கே அமைந்திருப்பது நல்லதைத் தரும். இதற்கு மாறாக அமைந்தி

கேளுங்கள் சொல்கிறேன்!



ருந்தால் பிரச்னைகள் வரலாம்.

குளம் - குட்டை:

குளம் - குட்டை வறண்டு கிடக்காமல், மழைநீர் அங்கு வந்து விழுமாறு ஏற்பாடு செய்தால் எந்த இடையூறும் இல்லை. முக்கியமாக குளம், குட்டையானது மேற்கு தெற்காக இருப்பது ஆபத்தைத் தரும்.

பாழடைந்த வீடு:

பாழடைந்த வீடு மற்றும் நீண்ட நாட்களாகப் பூட்டியிருக்கும் வீடு நம் வீட்டின் எந்தப் பக்கமும் இருக்கக் கூடாது. ஒருவேளை பின்புறம் இருந்தால் பிரச்னை பெரிதாக இருக்காது.

டிரான்ஸ்ஃபார்மர்:

மின்சார டிரான்ஸ்ஃபார்மர் வட கிழக்கு தவிர எந்தப் பக்கம் வேண்டுமானாலும் இருக்கலாம். அதனால் ஆபத்தில்லை.

சூதாடும் இடம்:

நம் வீட்டுக்கு நேர் எதிரே சூதாடும்

எங்கள் வீட்டில் பணம் வைக்கும் பீரோவை வாஸ்துப்படி எந்த இடத்தில் வைப்பது சரி?

- ஞானசேகரன், நிலக்கோட்டை

அக்னி மூலையில் உள்ள அறையைத் தவிர மற்ற எந்த அறையிலும் பணம் வைக்கும் பீரோவை வைக்கலாம். அப்படி வைக்கும்போது, மேற்கு - தெற்கு சார்ந்து, வடக்கு - கிழக்கு பார்த்து பீரோவை வைப்பது நல்லது.

எங்கள் வீட்டில் கிழக்கு, தெற்கு என இரண்டு திசைகளிலும் இரண்டு வாசல்கள் உள்ளன. இவற்றில் எதைப் பயன்படுத்துவது நல்லது?

- ஜெயலட்சுமி, திருவான்மியூர்

பலருக்கு இந்தச் சந்தேகம் வருகிறது. குழப்பமில்லாமல் சொல்ல வேண்டுமானால் சாலையைப் பார்த்து இருக்கும் வாசலைப் பயன்படுத்துவதுதான் முறையானது.

எங்கள் வீட்டு காலண்டரில் வாஸ்து பகவான் படம் உள்ளது. அதை வைத்து வணங்கலாமா?


- நாகராஜன், திருச்சி

வாஸ்து பகவானின் தலை வடகிழக்காக இருக்கும்படி வைத்து, வருஷம் எட்டு நாள் பிரசாதம் அல்லது பழம் வைத்து பூஜிக்கலாம். அந்த எட்டு நாட்கள் என்பது வாஸ்து பகவான் கண்விழிக்கும் காலம். இந்த நாட்கள் எப்போது என்பதை காலண்டரிலேயே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

வாஸ்து சாஸ்திரப்படி நாம் எப்படிப்பட்ட நிலங்களை வாங்கக் கூடாது என்று வரையறை இருக்கிறது. அந்தப் பட்டியல் இதோ:

1. ஏலத்தில் வந்த நிலம். (குறிப்பாக நேரடியாக வாங்கக் கூடாது)
2. வாரிசு இல்லாதவர்களின் நிலம்
3. மேடு, பள்ளங்கள் உள்ள நிலம்
4. தொழுநோயாளியின் நிலம்
5. விபத்தில் மரணமடைந்தவரின் நிலம்
6. துக்க காரியத்துக்காக விற்கப்படும் நிலம்
7. சமாதி உள்ள நிலம்
8. இடிந்துபோன வீடு உள்ள நிலம்
9. பாகப்பிரிவினையின்போது ஏமாற்றி எடுத்துக் கொள்ளப்பட்ட நிலம்
10. கோயிலுக்குச் சொந்தமான நிலம்.

இடம் இருப்பது நல்லதல்ல. பக்கத்தில் இருப்பது எதிர் விளைவைக் குறைக்கும்



நல்லது.

கடல்:

கடற்கரையில் இருந்து 1500 அடி தள்ளி வீடு இருப்பது நல்லது. முக்கியமாக கடற்கரையைப் பார்த்து வாசல் அமையக் கூடாது.

குப்பைத்தொட்டி:

வடகிழக்கு திசையில் குப்பைத் தொட்டி இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

சாக்கடை:

அத்தியாவசியத் தேவையான சாக்கடை இருப்பதைத் தவிர்க்க முடியாது. அதில் சாக்கடைத் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வது நல்லது.

இவை தவிர இன்னும் பல முக்கிய அமைப்புகள் மற்றும் அவற்றின் சாதக பாதகங்கள் பற்றி விரிவாக அடுத்த வாரம் பார்க்கலாம்...

> “கடலைப் பார்த்து வாசல் கூடாது!”

(பேசலாம்)

படம்: ஸ்ரீஹரி

நிறம் மாறும் புடவை!

சென்னையில் உள்ள ஸ்ரீ குமரன் ஸ்டோர்ஸில் மாயாஜால் பட்டுப் புடவையை அண்மையில் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அதென்ன மாயாஜாலம்? புடவையைக் கட்டிக்கொண்டு வீட்டுக்குள்ளே இருக்கும் போது புடவை ஒரு வண்ணத்தில் இருக்கும். அப்படியே நடந்து வெளியில் வந்தால், புடவையின் மீது வெயில் பட்டதும் புடவையின் சில குறிப்பிட்ட பகுதிகள் மீது சூரியனின் புற ஊதாக் கதிர்கள் மாயா ஜாலம் நிகழ்த்தும். குறிப்பிட்ட பகுதிகளில் டிசைன்களின் நிறமே மாறிவிடும். 4000 ரூபாயிலிருந்து இருபதாயிரம் ரூபாய் வரை விலை. இந்த மாயாஜாலப் புடவை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகித்த ஸ்ரீகுமரன் ஸ்டோர்ஸின் ரவியிடம் ஒரு கேள்வி:

“சமீபகாலமாக பிரபல துணிக் கடைகள் கின்னஸ் சாதனை, அதுஇது என்று போட்டிகள் தொடர்கிறதே?”

“ஜவுளி வியாபாரத்தில் இன்று கடுமையான போட்டி நிலவுகிறது. தவிர, இன்று கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் கேட்கும் முதல் கேள்வி, ‘லேட்டஸ்ட்டாக என்ன டிசைன் வந்திருக்கு?’ என்பதுதான். எனவே, தொடர்ந்து ஏதாவது புதுமையாக செய்துகொண்டே இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னால், 3-டி புடைவையை அறிமுகப்படுத்தினோம். அதன் விசேஷ டிசைன்கள், 3-டிக்கான ஸ்பெஷல் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பார்த்தால்தான் தெரியும். புடைவை பிடித்துப் போய்விட பலர் ஆர்வத்தோடு வாங்கினார்கள். மொத்தத்தில், புதுமைகளுக்கும், சாதனைகளுக்கும் காரணம் போட்டியும், வாடிக்கையாளர்கள் திருப்தியும்தான்” என்கிறார் ரவி.

- மானசா





• சுசி கணேசன்

"அந்த ஹீரோக்கள் என்னை உணர்வார்கள்!"

'**ச**த்தமில்லாம ஜெயிச்சுட்டாரே' என்று இயக்குநர் சுசி கணேசனை தமிழ் சினிமா ஆச்சர்யத்தோடு பாராட்டிக் கொண்டிருக்கிறது. பெரிய ஓபனிங் ஹீரோ, டி.வி. கிளிப்பிங்ஸ், ஆக்ஷன் கதை, குத்துப்பாட்டு என வெற்றிக்கான எவ்வித ஆதாரங்களுமின்றி ஒரு த்ரில்லர் வழியாக சராசரி தமிழ் சினிமா ரசிகனுடைய தமது 'திருட்டுப் பயலே' படம் மூலம் ரசனையை அடுத்த கட்டத்துக்கு அழைத்துச் சென்றிருக்கிறார் சுசி கணேசன்.

"நான் இன்ஜினியரிங் முடித்து ஐந்தாண்டு பத்திரிகையாளனாக சமூகத்தைப் படம் பிடித்தவன். கூடவே இயக்குநர் மணிரத்னத்திடம் சினிமா பயின்றவன். ஆக என் வளர்ப்பும் சிந்தனையும் இயங்கியது வெவ்வேறு தளத்தில். நான் எடுக்கும் ஒவ்வொரு படமும் என்னை உயர்த்தும் படிக்கட்டாக இருக்க வேண்டும். எனது முதலிரண்டு படங்களை வைத்து 'சுசி கணேசனா, அவருக்கு மென்மையான படம் மட்டும்தானே கொடுக்க முடியும்' என்ற என்மீதான அபிப்ராயத்தை 'திருட்டு பயலே'வில் மாற்றி எழுதியுள்ளேன். படம் முழுக்க அடுத்தது என்ன என்கிற கேள்வியை ரசிகன் கேட்டுக்கொண்டே சீட்டின் நுனிக்குச் சென்று படம் பார்க்க வேண்டும் என்கிற முயற்சி வெற்றிபெற்று, என்மீதான பார்வையும் மாறியுள்ளது. ஆனால் ஒன்று, எந்தவொரு புது முயற்சிக்கும் தீர்ப்பெழுதுபவர்கள் ரசிகர்களே. லகான் அவர்கள் கையில்தானே உள்ளது" என்று ஆர்வமாகப் பேச ஆரம்பித்தவருக்கு சில நியாயமான கேள்விகளும் உண்டு.

"இன்று யாருக்காகப் படமெடுக்கிறோம் என்று குழம்ப வேண்டியதாகிவிட்டது. தியேட்டருக்கு வரும் ரசிகனின் ஆர்வம் குறைந்துவிட்டது. அரசியல் பிரசாரங்கள் முதற்கொண்டு இன்று அவனுக்கு ஏராளமான பொழுதுபோக்குகள். வீட்டில் குடும்பத்தோடு அமர்ந்து முப்பது ரூபாயில் திருட்டு வி.சி.டி.யில் படம் பார்க்கவே விரும்புகின்றான். திரையரங்கை நிரப்பும் வாலிபர்களோ கட்டாயம் கலாட்டா செய்யவேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு வருகிறார்கள். படத்தில் எங்கேயாவது நிசப்தம் இருந்தால்கூட கமெண்ட் அடித்து அழகான காட்சிக்கு வேட்டு வைக்கிறார்கள். இதனாலேயே நல்லதோ, கெட்டதோ எல்லாக் காட்சிகளையும் இசையால் நிரப்பி விடுகிறோம். மக்கள் எவ்வழியோ மன்னன் அவ்வழி என்பது

போல மக்கள் வி.சி.டி.யில் படம் பார்க்க விருப்பப்படுகிறார்கள் என்றால், அதையும் பரீட்சார்த்தமாக முயற்சிக்க வேண்டியது தான்'' என்கிறார் வேதனையோடு.

படத்தின் வித்தியாசமான கதை, காட்சிகளுக்கு மேலும் நிறம் சேர்த்திருப்பது ஒளிப்பதிவும் பாடல்களும். "ஒளிப்பதிவில் எனது முதல் விருப்பம் பி.சி.ஸ்ரீராம்தான். ஆனால் தேதி பிரச்னையால், பின்னர் அவரே பரிந்துரைத்தவர்தான் அவரது உதவியாளர் 'வைட் ஆங்கிள்' ரவிஷங்கர். லைட்டிங் மற்றும் கோணங்கள் எல்லாம் அற்புதமாக அமைத்து கதையோடு ஒளிப்பதிவை நகர்த்தினார். பரத்வாஜின் ரீமிக்ஸ் பாடலுக்கு வைரமுத்து அற்புதமான வரிகளைத் தந்துள்ளார். அர்த்தம் பொதிந்த இப்படியொரு பாடலை சமீபகாலங்களில் கேட்டது கிடையாது. என் படங்களில் எப்போதும் இரண்டு க்ளைமாக்ஸ்கள் இருக்கும். சீட்டை விட்டு எழும்முன்



திடுக்கென்று ஆங்கிலப் படபாணியில் ஒரு பஞ்ச் வைப்பது எனது ட்ரேட் மார்க்.''

தவறான உறவு பற்றிய கதை முடிச்சால் படத்தின் வசூலுக்கு ஆரம்பத்தில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இது பற்றி என்ன சொல்கிறார் சுசி. கணேசன்?

"புதுமுக ஹீரோ, புது முயற்சி போன்ற காரணங்களைச் சொல்லி ஆரம்பத்தில் படத்தினுடைய வசூல் அடிவாங்கியது உண்மைதான். இப்போது அரங்கு நிறைந்த காட்சிகளாகப் படம் ஓடிக் கொண்டிருக்கிறது. ரசிகர்கள், எனது தயாரிப்பாளர் என எல்லோரும் புன்னகைக்கிறார்கள். 'தவறான வழியில் கிடைக்கும் பணமும் பெண்ணும் என்றைக்கும் ஆபத்துதான்' என்கிற கருத்துக்கு, இப்போது தம்பதி சகிதமாக திரையரங்குக்கு வந்து ஆதரவு தெரிவிக்கிறார்கள் தமிழ் மக்கள்'' என்கிறவருக்கு 'திருட்டுப் பயலே' ரிலீஸ் செய்ய இரண்டாண்டுகளுக்கும் மேலாகியிருக்கிறது.

'' 'ஃபைவ் ஸ்டார்'க்குப் பிறகு மூன்று பெரிய ஹீரோக்கள் பின்னால் சென்றது தான் நான் செய்த பெரிய தவறு. தயாரிப்பாளர்கள், ஹீரோக்கள் என எல்லோரும் என்னைத் தேடி வந்தும், படம் எடுக்க முடியாமல் தடுமாற்றம் ஏற்பட்டது. இது தமிழ் சினிமாவின் சாபக்கேடு. சரி, கதை மட்டுமே முக்கியம் என்று புதிய கதையோடு சத்தமில்லாமல் 'திருட்டுப் பயலே' எடுத்து முடித்தேன். இப்போது என்னை மிஸ் செய்துவிட்டதாக சம்பந்தப்பட்டவர்கள் உணர்வார்கள்'' என்று தமது படப்பாணியில் இறுதி 'பஞ்ச்' வைத்தார் சுசி கணேசன்.

- ச.ந.கண்ணன்

அஞ்சல் வழியில் ஹிந்தியில் பேச பயிற்சி பெறுவோமா? அஞ்சல் வழியில் ஆங்கிலத்தில் புலமைப் பெற்று பேச பயிற்சி பெறுவோமா?

"அதிகமான மொழிகள் அறிந்தவர்களே அதிக வெற்றி வாய்ப்புகளைப் பெறுகிறார்கள்."

இப்போதெல்லாம் 25 வயதான பிள்ளைகள்கூட குறைந்த பட்சம் மாதம் 25000 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். படிக்கும்போதே காம்பஸ் இன்டர்வியூ மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு விடுகிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பெரும்பாலும் அவர்களது ஆங்கிலம் மற்றும் இந்தி மொழித் திறமையின் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். எனவே தாய்மொழியுடன் ஆங்கிலம் மற்றும் இந்தியில் சரளமாக பேசுவது மிக அவசியமானத் தேவையாகி விட்டது.

சமீபத்தில் ஒரு முன்னோடி மருத்துவ மனைக்குச் சென்றிருந்தேன். அங்கு பணி புரியும் பெரும்பாலானவர்கள் இந்தி, ஆங்கிலம், தமிழ் மற்றும் அண்டை பிரதேச மொழிகளை மிக சரளமாகப் பேசுகிறார்கள். அங்கு பல மாநிலத்தவரும் வருகின்றனர். அவர்கள் தங்கள் மொழியை மற்றவர் பேச கேட்கும் போது எல்லையற்ற ஆனந்தம் அடைந்தனர். எந்த வேலையில் இருந்தாலும் தாய்மொழியுடன் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுபவர்கள் வெற்றிகரமாக உள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தமிழ்நாட்டை விட்டு வெளியேறின உடனேயே இந்தி மொழியில் பேச வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. சமீபத்தில் எனது நண்பர் ஒருவர் தில்லி சென்றிருந்தார். அவர் Red fort செல்ல விரும்பினார். Red fort ஐ இந்தியில் 'லால் கிலா' என்று கூற வேண்டும். Red fort என்றால் அங்கு யாருக்கும் புரியாது. நண்பருக்கு இந்தி தெரியாத காரணத்தால் Red fortம் செல்லவில்லை, மற்ற இடங்களையும் சுற்றிப் பார்க்கவில்லை. புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லும்போது, அதாவது காசி கயா போன்ற இடங்களுக்கு போகும் போது இந்தி மொழி தெரியாவிட்டால் அவஸ்தைதான். இந்தி மொழி கற்றால் மற்ற மொழிகளைக் கற்பது மிக எளிது.

நம் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க செல்லும்போதும், அவர்களது படிப்பைப் பற்றி அறிவதற்காக ஆசிரியர்களைப் பார்க்கச் செல்லும்போதும் ஆங்கிலத்தில் உரையாட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கணவரது நண்பர்களோ, பிள்ளைகளின் நண்பர்களோ தொலைபேசியில் பேசும்போதும் ஆங்கிலத்தில் பேச வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. அப்படி பேச முடியாதபோது மனம் வருந்துகிறது. இவை அனைத்தையும் மனதில் கொண்டு பாரத ஸ்டேட் பாங்கு அதிகாரிகள் சங்கம் பயிற்சி மையம், பேச்சுமொழி இந்தி மற்றும் பேச்சு மொழி ஆங்கில பயிற்சிகளை அஞ்சல் வழியில் நடத்தி வருகின்றது. இந்தப் பயிற்சி பற்றிய மற்ற விபரங்கள் கீழ் கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன.

பேச்சுமொழி இந்தி டிப்ளமா/ பேச்சு மொழி ஆங்கில டிப்ளமா

1. பயிற்சியில் மொழி ஆர்வமுடைய எவரும் சேரலாம். (பள்ளிச் சிறுவர் முதல் ரிடையர் ஆனவர் வரை)

2. பேச்சு மொழி இந்தி பயிற்சி தமிழ் மூலமாகவும், ஆங்கிலம் மூலமாகவும் நடத்தப்படுகிறது.

3. பேச்சு மொழி ஆங்கிலம் தமிழ் மூலமாகவும், ஹிந்தி மூலமாகவும் நடத்தப்படுகிறது.

4. அஞ்சல் வழியில் நடத்தப்படுவதால் எங்கிருந்தபடியும் சுலபமாகப் படிக்கலாம்.

5. இரு வழித் தொடர்பு (Two Way Communication) இப் பயிற்சியில் சிறப்பு அம்சமாகும். அதாவது ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் பாடங்கள் கூரியர்/ Post மூலம் அனுப்பப்படும். ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பயிற்சிகள் இருக்கும். இப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். இவற்றைத் திருத்தி, பயிலுபவர்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

6. ஐந்து நேர்முக வகுப்புகள் (சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில்) நடத்தப்படுகின்றது. இவ்வகுப்புகளில் அந்த மாதம் அனுப்பிய பாடங்கள் விளக்கப்படுவதுடன் இந்தி மற்றும் ஆங்கில மொழியில் உரையாட (மதிய உணவுடன்) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

7. நேர்முக வகுப்புகளுக்கு வர முடியாதவர்களுக்கு உதவியாக மொழி விளக்க மேம்பாட்டு மையங்கள் திருச்சி, கோவை, மதுரை, தில்லி, ஹைதராபாத், மும்பை, ராஜஸ்தான், தஞ்சாவூர் போன்ற இடங்களில் உள்ளன. தவிர 15 பேர்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் உள்ள இடங்களில் மொழி விளக்க நிபுணர்கள் உள்ளனர்.

8. பேச்சு மொழி ஹிந்திக்காக அகர உச்சரிப் பிலிருந்து பலவகை சூழ்நிலைகளில் பேசும் பயிற்சிகளைக் கொண்ட இரட்டை ஒலி நாடாக்கள் (Twin Cassettes) வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுடன் வழங்கப்படும் துணை நூலை படித்த வண்ணம், ஒலிநாடாக்களைக் கேட்டால் மிக விரைவில் மொழியைக் கற்றுக் கொள்ளலாம். இந்த ஒலிநாடாக்களைப் பெற வரும்புபவர்கள் ரூபாய் 150க்கான டிமாண்ட் டிராப்ட் SBIOA Institute, Chennai என்ற பெயருக்கு எடுத்து தனியாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

9. பேச்சு மொழி ஆங்கிலம் ஒலி நாடாக்கள் தயாரிக்கப்பட உள்ளன.

10. பயிற்சியில் தேறியவர்களுக்கு Diploma in Conversational Hindi/ Diploma in Conversational English சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை ஆற்காடு இளவரசர், முன்னாள் பிரதமர் சந்திரசேகர், பாரத்ரத்னா சி . சுப்ரமணியம், டாக்டர் கிரண் பேடி ஐ.பி.எஸ், பாரத ஸ்டேட் பாங்கு தலைமைப் பொதுமேலாளர் R.C. ஷர்மா, அருட்செல்வர் மஹாலிங்கம், எஸ். குருமூர்த்தி, Chartered Accountant and Eminent Columnist Dr. V.C. குழந்தைசாமி போன்றவர்கள் இம்மையத்தின் பட்டமளிப்பு விழாக்களில் முக்கிய விருந்தினராக உரை நிகழ்த்தியுள்ளனர்.

11. பயிற்சி காலம் ஆறுமாதம் (ஜனவரி முதல் ஜூன் வரை, ஜூலை முதல் டிசம்பர் வரை) அடுத்த வகுப்பு ஜூலை 2006ல் துவங்க உள்ளது.

12. பயிற்சி கட்டணம் ரூ. 600/- (ரூபாய் அறுநூறு மட்டுமே) நேர்முகப் பயிற்சி, தேர்வுக்கட்டணம் உட்பட.)



• பட்டமளிப்பு விழாவில் Dr. கிரண்பேடி IPS உரையாற்றுகிறார்.

ஜூலை 2006ல் துவங்கவிருக்கும் பயிற்சியில் சேர விரும்புபவர்கள் டிமாண்ட் டிராப்ட் அல்லது உள்ளூர் காசோலை (Rs.100) SBIOA Institute, Chennai என்ற பெயரில் எடுத்து சுயவிலாசமிட்ட தபால் தலையுடன் (ரூ.10) கூடிய உறையில் கீழ் கண்ட முகவரிக்கு எழுதவும். (ஒவ்வொரு பயிற்சிக்கும் தனியாக ரூ.100 அனுப்ப வேண்டும்) உறையின் மேல் பேச்சுமொழி ஹிந்தி அல்லது பேச்சு மொழி ஆங்கிலம் என்பதையும், பயிற்சி மொழியையும் குறிப்பிட வேண்டும். (இந்த ரூபாய் 100/- பயிற்சிக் கட்டணத்திலிருந்து கழித்துக் கொள்ளப் படும்.)

The Executive Director,
SBIOA Institute,
229, N.S.C. Bose Road,
P.B.No 1279,
Chennai 600 001.
Phone No: 044-25340226

Advt.

மழை தடதடவெனப் பொழிந்தது. நீர்த்திவலைகள் தரையில் பட்டு ஆக்ரோஷமாகச் சிதறின. ஜன்னல் வழியே கனமான சாரல் முகத்திலறைந்தது. மின்சாரம் இல்லை. எதிர்வீட்டில் எரிந்து கொண்டிருந்த எமர்ஜென்சி விளக்கு வெளிச்சம் மழையின் உக்ரத்தை உணர்த்தியது. ஜன்னல் வழியே மழையைப் பார்த்துக்கொண்டிருந்த செல்வி என்னை பயமாகப் பார்த்தாள். அவள் பயத்தின் காரணம் புரிந்தது. மழை நீர் சாலையைத் தாண்டி மெல்ல அபார்ட்மெண்ட்டுக்குள் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தது. ரேடியோ செய்தி மழையை விவரித்தது.

'இன்று மாலை வரை கடலூர் மாவட்டத்தில் 40 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. தமிழகத்திலேயே அதிக மழை தென் ஆற்காடு மாவட்டத்தில்தான் பதிவாகி இருக்கிறது. சிதம்பரம் அருகே புவனகிரி ஒன்றியத்தில் படுகை ஆறு உடைப்பெடுத்ததில் சித்தூர், மணலூர், மேல்தட்டு ஆகிய கிராமங்கள் நீரில் மூழ்கின...' செல்வி பதறினாள், "அய்யய்யோ! உங்க அத்தை ஊருங்க! அதுவேற கீத்துக்கட்டு வீடு. என்ன ஆச்சோ? ஏங்க, போன் போட்டுக் கேக்கலாமா?" என்றாள்.

நான் சிரித்தேன். "போன் வேலை செய்யல. கவனிக்கலையா நீ? அது சரி! மணலூர் அத்தைய உனக்கு நினைவிருக்கா?"

"ம்ஹூம். இல்லங்க! ரெண்டொரு தடவ நீங்க அவங்களப் பத்தி சொல்லியிருக்கிங்க! ஊரு பேரைக் கேட்டதும் பட்டுன்னு நினைவுக்கு வந்துட்டுது."

பழைய நினைவுகள். இடமாற்றத்தால் துண்டித்துப்போன உறவு என

திருவாரூர் பாபு



புரட்டிப் போட்ட மழை!

ஞாபகங்கள் விரிந்தன.

"அந்த அத்தைய என்னால மறக்கவே முடியாதும்மா! அடிக்கடி அப்பாவ பாக்க ஊருக்கு வந்துடும். அந்த அத்தை வீட்டுக்கு வந்தாலே வீடு கலகலப்பா இருக்கும். செங்கம் தியேட்டர்ல 'ஆட்டுக்கார அலமேலு' படம் ரிலீஸ். தியேட்டர்ல திருவிழாக் கூட்டம். அத்தை கூட படத்துக்குப் போயிருந்தேன். நாலு பக்கமும் கூட்டம் நசுக்குது. எனக்கு மூச்சு முட்டுது. பட்டுன்னு அத்தை தலைக்கு மேல என்னைத் தூக்கிக்கிட்டாங்க. அன்னைக்கு அத்தை அப்படி என்னைத் தூக்காம இருந்துச்சு நான் அம்பேல்தான்!"

தடால் என இடி இறங்கியது. செல்வி "அர்ஜுனா! அர்ஜுனா!" என்றாள்.



"அத்தை வீட்டுக்குப் பின்னால வாய்க்கால் ஓடும்! அந்த வாய்க்கால்ல விளையாடறதுக்காகவே அடிக்கடி மணலூருக்குப் போயிடுவேன். இருட்டற வரைக்கும் விளையாட்டுதான். வீட்டுக்குத் திரும்பறப்ப கொறைஞ்சது நாலு இடத்துலயாவது சிராய்ப்பு இருக்கும். காயத்துல எச்ச தொட்டு வச்சு மண்ணை அள்ளிப் பூசி..." என்றபடி சிரித்தேன்.

"இதெல்லாம் எப்படிங்க உங்களுக்கு இன்னும் நினைவுல இருக்கு?" செல்வி வியப்பாகக் கேட்டாள்.

சிரித்துக் கொண்டேன்.

"கடமையையும் பொறுப்பையும் சுமந்துக்கிட்டு உடம்பு தாம்மா இங்க அலைஞ்சுக்கிட்டு இருக்கு. மனசு ஒட்டுதலோட ஊர்லதான் இருக்கு"

"புரியற மாதிரி பேச மாட்டேங்கனே. கடமை, பொறுப்புன்னு ஏதாவது உளறுங்க" என்றாள்.

கரகரப்புக்கு இடையே ரேடியோவில் செய்தி கசிந்தது.

"வேதாரண்யத்துக்கருகே செம்பனாறு உடைப்பெடுத்ததில் மணல்மேடு கிராமத்தில் வெள்ளம் புகுந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட ஆடு மாடுகள் இதில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இந்தக் கிராமத்தில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போனதாகக் கூறப்படுகிறது."

"என்னங்க! நம்ம ஊரைச் சுத்தித்தான் பாதிப்பு அதிகமா இருக்கு. மணல்மேட்டுல எங்க சித்தி இருக்காங்கங்க!"

செல்வி படபடப்பாகப் பேசினாள்.

"நம்ம கல்யாணம் முடிஞ்சு, கல்யாண மாலை கழற்றதுக்காக கார்ல திருமஞ்சனூர் போனப்ப நம்மகூட வந்தாங்களே.. அவங்களா?"

"அவங்க இல்ல இது! அவங்களோட தங்கச்சி. என் சொந்தக்காரங்க ஒருத்தரைக் கூட உங்களுக்கு நினைவுல இருக்காதே. அன்னைக்கு கார்ல திருமஞ்சனூர் வந்தது சிமிழி சித்தி. அவங்க ஊர்லயும் பாலம் உடைஞ்சு ஒரு வாரமா பஸ் ஓடலியாம். இந்தச் சித்தி கறுப்பா தாட்டியா இருப்பாங்களே அவங்கதான்.

ரொம்ப ஏழைங்க... பாவம். ஆடு மாடு தான் அவங்களுக்கு சோறு போட்டுச்சு. சின்ன வயசுல எனக்கு அம்மை போட்டிருந்தப்ப இந்தச் சித்திதாங்க அம்மாவுக்குத் துணையா என் பக்கத்துலயே இருந்து என்னைக் கவனிச்சிக்கிட்டாங்களாம். அம்மா சொல்லிக்கிட்டே இருக்கும். என்ன ஆச்சோ? கடவுளே... கல்யாணத்தப்ப அவங்கள பாத்ததுதான். அதுக்கப்புறம் பாக்கவே இல்ல. சித்திக்கு மூணு பொண்ணுங்க. அதுல ஒருத்திக்கு என் வயசு! கல்யாணத்துக்கு பத்திரிகை அனுப்பி இருந்துச்சு. ப்ச்..."

"பத்திரிகைய என்கிட்ட காட்டவே இல்ல!"

"காட்டியிருந்தா மட்டும் கிளம்பப் போறீங்களா? இந்த ஆறு வருஷத்துல ஊர்ப் பக்கம் நடந்த எத்தினி விசேஷத்துக்கு நாம போயிருப்போம் சொல்லுங்க!"

கள்ளெனப் பேசினாள். ஏமாற்றக் குரல் வருத்தத்தில் தேய்ந்து வந்தது. உண்மை. எப்போதாவது வீடு தேடி வரும் அழைப்பிதழைப் பார்க்கும் போது எப்படியும் போக வேண்டும் என்கிற உந்துதல் ஏற்படும்.

"காதல்ல தோல்வி அடைஞ்சவங்க தற்கொலை தான் பண்ணிக்கணுமா...?"
"யார் சொன்னது...? காதலிச்சவளையே கல்யாணம்கூட பண்ணிக்கலாம்..."
- கே.ஆனந்த்



பிறகு குறைந்து விடும். மனம் கணக்குப் போட்டு பார்க்கும். பொருளாதாரம் இடற... பிள்ளைகளின் படிப்பை முன்னிறுத்தி ஊர்ப்பயணம் கேன்சலாகிவிடும்.

திடுமென சாலையில் இறுதி ஊர்வலம் எதையாவது பார்க்கும்போது, மனசு இடறும்.

ஒரு நூறு பேர் வருவார்களா?

நண்பர்கள் எண்ணிக்கையில் விரிவார்கள். முடிவில் பயமே வரும்.

"புவனகிரி அத்தை... சிமிழ் சித்தி, திருமஞ்சனூர் வந்த சித்தி... இவங்க எல்லாம் இவ்வளவு நாள் நம்ம ஞாபகத்துலயே வரல இல்ல செல்வி!"

"நமக்குத்தான் ஊரோட ஒட்டுதலே இல்லியே. ஏங்க, நாச்சியார் கோயில் மாமா பொண்ணுக்குக் கல்யாணம்ங்க. பத்திரிகை வந்திருக்கு..." என்றபடி இருட்டில் பத்திரிகையைத் தேடினாள்.

இப்போது மழையின் தீவிரம் குறைந்திருந்தது. காற்று மட்டும் சிலுசிலுவென வீசியது.

"அடுத்த மாசம் பதினாலாம் தேதி கல்யாணம். உங்களுக்கு ஞாபகத்துல இருக்கா...? நாச்சியார் கோயில் மாமா தான் உங்கள மாப்பிள்ள பாக்க வந்தது."

அமைதியாக இருந்தேன்.

"ஏங்க போகலாம்ல...?" ஆர்வமாகக் கேட்டாள்.

"கண்டிப்பா போகலாம்! ரெண்டு நாள் முன்னாடியே போகணும் செல்வி. சிமிழ், புவனகிரி, நாச்சியார் கோயில் எல்லாம் பக்கம்தானே! எல்லாரையும் பாத்துட்டு வரலாம்" என்றேன்.

"ஏங்க மழை விட்டுடுச்சுங்க. ஐயனாரப்பான்னு அப்படியே விட்டுட்டா நல்லா இருக்குங்க. இந்த மழை போதுங்க. ரோட்டைப் பாத்தீங்களா? மரம், ரோடு எல்லாத்தையும் புரட்டிப் போட்டுடுச்சுங்க இந்த மழை!"

"ரோடு, மரம் மட்டுமில்லேம்மா... உறவுகள், நினைவுகள் எல்லாத்தையும்கூட புரட்டிப் போட்டுடுச்சு!" என்றேன். ●


எங்கே நிம்மதி?

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த டாக்டர் மேனி பௌமிக் உலகப் புகழ்பெற்ற இயற்பியல் வல்லுநர். லேசர் மூலமாக கண் அறுவை சிகிச்சை உபகரணத்தைக் கண்டுபிடித்த இருவரில் ஒருவர். எளிய குடும்பத்தில் பிறந்து, தனது கடும் முயற்சியால் விஞ்ஞானியாகி, அமெரிக்காவில் இந்தியாவின் பெருமையை நிலை நாட்டியவரின் 'கோட் நேம் காட்' என்ற புத்தகம் இன்றைக்குப் படு பிரபலம். அமெரிக்க பிரபலங்கள் ரீகன், பில் கிளிண்டன், ஹாலிவுட் நடிகர், நடிகைகளுடன் நட்புகொண்டு உல்லாச வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த பௌமிக்குக்கு சந்தோஷம், மன நிம்மதி குறித்து கேள்விகள் எழ, ஆன்மிகத்தின் மேல் நாட்டம் பிறந்திருக்கிறது. எது உண்மையான சந்தோஷம் என்று உணர்ந்தவர், தான் கற்றுக் கொண்டவற்றைப் பிறரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில் எழுதிய புத்தகம்தான் 'கோட் நேம் காட்!'

"நாம் அமெரிக்காவைப் பார்த்து பணம் சம்பாதிப்பது ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருப்பது தவறு. பணம் அவசியம்தான். ஆனால், பணம் மட்டுமே மன நிம்மதியைத் தந்துவிடாது. இது நான் அனுபவபூர்வமாக உணர்ந்த உண்மை. தயவுசெய்து நமது ஆன்மிகப் பாரம்பரியத்தை மறந்துவிடாதீர்கள். நான் இளமையில் வேதம் கற்றிருந்ததால் ஆன்மிகத்துக்குத் திரும்புவது எளிதாக அமைந்தது.

அமெரிக்காவில் பிரபலமாக இருக்கும் ரிச்சர்டு கியர், ஷேரன் ஸ்டோன், கோல்டி ஹான் போன்றவர்கள் மன நிம்மதிக்காக நம் வேதங்களைத் தேடி வருகிறார்கள். நான் குறிப்பிடுவது ஆன்மிகத்தைப் பற்றி மட்டுமே. ஏனென்றால், 'எல்லா மதங்களும் ஒரே கடவுள்' என்ற கோட்பாட்டையே போதிக்கின்றன. பத்து வருடங்களாக பல மதக் கோட்பாடுகளை நான் ஆழ்ந்து படித்ததால் இதைச் சொல்கிறேன். அதாவது மூலப்பொருள் அல்லது இறைவன் ஒருவரே. இதைப்பற்றி என் புத்தகத்தில் அனைவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் எளிதாக விளக்கியுள்ளேன். நம் முன்னோர்கள் ஆன்மிகத்தில் ஊன்றி அதிக சந்தோஷமாக இருந்தார்கள். எனவே பொருளாதார முன்னேற்றம் என்ற கண்ணோட்டத்தில் நம் ஆன்மிகப் பாரம்பரியத்தை மறந்துவிடாதீர்கள்" என்று கூறும் டாக்டர் பௌமிக், தன் சொந்த மாநிலமான மேற்கு வங்கத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவ - மாணவியர், மேற்படிப்பைத் தொடரும் வகையில் நூறு கோடி ரூபாய் செலவில் அறக்கட்டளை ஒன்றை நிறுவியுள்ளார்.

- தியோடர்



• மேனி பௌமிக்

14.5.2006 முதல் 20.5.2006 வரை

மேஷம் : இனிமையான வாரம். பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. மனத்தில் சந்தோஷம் ஏற்படும். வாக்கு வன்மை மேலோங்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் சீர்படும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம், தொழில் அபிவிருத்தி ஏற்படும். நீண்ட தூரப் பயணங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு, இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணப் பேச்சு வார்த்தை துவங்கும். கலைஞர்கள், எழுத்தாளர்கள், பங்கு மார்க்கெட் துறையில் உள்ளவர்களுக்கு நல்ல காலம். புத்திர பேறு ஏற்படும். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் மந்திரம் படித்து வரவும்.

ரிஷபம் : வழக்கு வெற்றி அளிக்கும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். நெருங்கிய கூட்டாளிகள் விலகிச் செல்வார்கள். மனத்தில் பய உணர்வு இருக்கும். குழந்தைகள் பற்றின மனக் கவலை தீரும். சுபச் செலவு கைகூடும். உத்தியோகத்தில் இடமாற்றம் வரலாம். புதிய வேலை கிடைக்கும். வியாபாரத்தில் சற்று முன்னேற்றம் காண்பிக்கும். பணக்கஷ்டம், சத்ரு தொல்லை விலகும். கணவன் - மனைவி விட்டுக் கொடுத்து நடந்துகொள்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக இருக்கவும். புதிய தொழில் முயற்சியை சற்றுத் தள்ளிப் போடவும். வேலைப்பளு அதிகரிக்கும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வருதல் நன்மையளிக்கும்.

மிதுனம் : குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். தாயின் உடல்நிலையில் கவனம் தேவை. குழந்தைகள் வழியில் திருமண முயற்சி கைகூடும். வீடு / மனை வாங்க நல்ல காலம். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சத்ரு தொல்லை விலகும். நண்பர் / உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். கூட்டுத் தொழில் நல்ல பலன் தரும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். ராகு / கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கடகம் : எண்ணங்கள் யாவும் ஈடேறும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு வந்து அணுகும். மகான் சந்திப்பு ஏற்படும். வீடு மாற்றம் ஏற்படும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். வேலையில் மாற்றம் வரும். எதிர்ப்புகள் விலகும். ஆரோக்கியம் பாதிக்காது. திருமணக் காரியம் கைகூடும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். வராத நிலுவைகள் வந்து சேரும். உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். கலைஞர்கள், எழுத்தாளர்களுக்கு நல்ல காலம். பணக் கஷ்டம் வராது. வியாபாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும். குரு / சனி வழிபாடு நன்மை தரும்.

சிம்மம் : மன உளைச்சல் நிறைந்த வாரம். யாரிடமும் அதிகம் பேச்சு வார்த்தை வைத்துக்கொள்ளக் கூடாது. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. வண்டி வாகனத்தில் செல்லும் போது உஷார். உணவுக் கட்டுப்பாடு அவசியம். நெருங்கிய உறவினர்கள் விலகிப் போவார்கள். மனத்தில் ஒருவிதமான தோல்வி பயம் தெரியும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்து அனுசரித்து

நடக்குமென்பார்

தஞ்சை பரத்வாஜ்

நடந்து கொள்வது நல்லது. தடைப்பட்ட திருமணம் கைகூடும். வேலைப்பளு அதிகரிக்கும். குடும்பத்தில் மனக்கசப்பு ஏற்படும். தொழிலில் சற்று பிற்போக்கான சூழ்நிலை நிலவும். புதிய முயற்சிகளை சற்றுத் தள்ளிப் போடவும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மை பயக்கும்.

கன்னி : கணவன் - மனைவி அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. வீண் வாக்குவாதம் வேண்டாம். பணக்கஷ்டம் வராது. மனசலனம் விலகும். வெளியூர்ப் பிரயாணம் செல்ல நேரிடும். உடன்பிறப்பால் நன்மை ஏற்படும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். குழந்தைகள் வழியில் சுபநிகழ்ச்சி கைகூடும். புதிய தொழில் நன்கு கைகொடுக்கும். உத்தியோகத்தில் உயர்வு, இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி செய்யலாம். செலவுகள் சுபமானதாக இருக்கும். உடல்நிலை பாதிக்காது. கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். குழந்தைப்பேறு உண்டாகும். கலைஞர்களுக்கு முன்னேற்றம் காண்பிக்கும். புதிய ஒப்பந்தங்கள், ஏற்படாது. இறக்குமதி தொழில் செய்பவர்களுக்கு நல்ல பலனை அளிக்கும். ராகு / கேது வழிபாடு நன்மை தரும்.

துலாம் : வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் சுபச் செலவு ஏற்படும். நண்பர்/ உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். பணக்கஷ்டம் தீரும். தொழில் துறையில் நல்ல வருமானம் கிட்டும். உத்தியோகத்தில் பதவி மாற்றம், வேறு வேலைக்குப் போகுதல், பதவி உயர்வு போன்ற நிகழ்வுகள் நடக்கும். கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும். மனசலனம் தீரும். லெட்சுமி கடாக்ஷம் கிட்டும். தொலை தூரப் பிரயாணம் செய்ய நேரிடும். வீடு / மனை வாங்க ஏற்ற தருணம். திருமணக் காரியம் கைகூடும். கலைஞர்கள், எழுத்தாளர்கள் நல்ல பலனை அடைவார்கள். குரு / சனி வழிபாடு நல்ல பலனைத் தரும்.

விருச்சிகம் : மனசந்தோஷம் ஏற்படும். வாக்கு, தனம் மேலோங்கும். குடும்ப வாழ்வு நற்பலனைத் தரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகள் இடம் மாறிச் செல்வார்கள். சுபகாரியம் நடக்கும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஏற்படும். நெருங்கிய கூட்டாளிகள் விலகிச் செல்வார்கள். கூட்டுத் தொழில் செய்பவர்கள் நல்ல பலனை அடைவார்கள். பத்திரிகைகளில் பெயர் வரும். உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். இடமாற்றம் வரலாம். வீடு / மனை வாங்கம் நல்ல தருணம். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். உடல்நிலை பாதிக்காது. பணக் கஷ்டம் இருக்காது. உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல மேன்மை கிட்டும். ராகு / கேது / குரு வழிபாடு நற்பலனைத் தரும்.



• படம் : ஸ்ரீஹரி

நடக்கும்!

பரத்வாஜ்...

எனது மகளுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- லக்ஷ்மி சேகர், ஹைதராபாத்

உங்கள் பெண்ணுக்கு ராகு தசை நடை பெற்று வருகிறது. 2006 இறுதியில் திருமணம் நடக்கும். சொந்தத்தில் வரன் அமையாது. ராகு தோஷம் உள்ள வரனைச் சேர்க்கவும்.

எனது மகனின் திருமணம், தொழில் பற்றிக் கூறவும்?

- எஸ்.ராமசாமி, மதுரை - 2

உங்கள் மகனுக்கு 38 வயது வரை புதன் தசை நடக்கிறது. 2007-ல் திருமணம் நடக்கும். புதன் தசை - அஷ்டமாதிபதி தசை. ஆகவே, வாழ்க்கையில் போராடி முன்னுக்கு வரவேண்டும். திருமணத்துக்குப் பிறகுதான் முன்னேற்றம் கிட்டும். மனைவி பெயரில் தொழில் செய்தால் முன்னுக்கு வரலாம்.

தனுசு : தொழில் துறையினர் இடமாற்றம் செய்ய நேரிடும். உடல் நிலை பாதிக்காது. பொருளாதார மேன்மை உண்டாகும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வாக்கு/நாணயம் காப்பாற்றப் படும். திருமணக் காரியம் கைகூடும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். கொடுக்கல் வாங்கல் நல்ல பலன் தரும். புதிய வீடு / மனை வாங்க நல்ல தருணம். சத்ரு தொல்லை விலகும். ராகு /கேது/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

மகரம் : எண்ணங்கள் யாவும் ஈடேறும். பொருளாதார மேன்மை உண்டாகும். வெளியூர்ப் பிரயாணம் செல்ல நேரிடும் குழந்தைகள் வழியில் சுபநிகழ்ச்சி ஏற்படும். வீடு / மனை வாங்க தருணம். ஸ்தல யாத்திரை செல்ல நேரிடும். நண்பர் உறவினர்மூலம் அனுகூலம் ஏற்படும். சத்ரு தொல்லை விலகும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் நற்பலனைத் தரும். புதிய தொழில் துவங்க ஏற்ற காலம். திருமணக் காரியம் கைகூடும். மன உளைச்சல் தீரும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். குரு / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

கும்பம் : பேச்சில் நிதானம் தேவை. குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்து அனுசரணையுடன் நடந்து கொள்வது நல்லது. சிலர் நெருங்கியவர்களை விட்டு விலகிச் செல்ல நேரிடும். வீடு / மனை வாங்க உத்தமம். கொடுக்கல் வாங்கலில் நிதானம் தேவை. வண்டி வாகனத்தில் செல்லும் போது உஷார். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். புதிய வேலை கிடைக்கும். பணக் கஷ்டம் வராது. உணவுக் கட்டுப்பாடு அவசியம். திருமண காரியம் கைகூடும். நீண்ட தூரப் பிரயாணம் செய்ய நேரும். கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும். புதிய தொழில் முயற்சிகளைத் தள்ளிப் போடவும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

மீனம் : பணவரவு பாதிக்காது. தனம், வாக்கு மேலோங்கும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்து நடந்து கொள்வது நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு இடமாறுதல் கிட்டும். மனசலனம் தீரும். சத்ரு தொல்லை விலகும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நண்பர் / உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். வெளியூர்ப் பிரயாணம் செய்ய நேரிடும். கலைஞர், எழுத்தாளர்களுக்கு நல்ல காலம். திருமணம் கைகூடும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு நற்பெயர் ஏற்படும். பதவி உயர்வு ஏற்படலாம். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

என் பேரன் படிப்பில் நாட்டமில்லாமல் இருக்கிறான். நன்றாகப் படிப்பானா...?

- ஆர்.அலமேலு, திருச்சி

உங்கள் பேரனுக்கு செவ்வாய் தசை நடைபெற்று வருகிறது. 15 வயதுக்குமேல் படிப்பு நன்றாக வரும். சஷ்டி கவசம் படித்து வரவும். தொழிற்கல்வி பயில்வான்.

எனக்கு எப்போது நிரந்தர வேலை கிடைக்கும்?

- ஏ.ஆனந்த், சென்னை

தங்கள் ஜாதகப்படி 26 வயதுக்குப் பிறகு நல்ல வேலை கிடைக்கும். குரு தசை நடக்கிறது. ஆவே வெளிநாடு சென்று வேலை பார்ப்பது நல்ல பலன் தரும்.

...பதில்கள்

காப்பியடித்த கதை!



'How opal Mehta got kissed, Got wild and got a life.' நன்றாகத்தான் விற்பனையாகிக் கொண்டிருந்தது காவ்யா விஸ்வநாதனின் இந்தப் புதிய நாவல். ஈர்க்கும் தலைப்பு, இளம் எழுத்தாளர், அமெரிக்காவில் வசிக்கும் பத்தொன்பது வயது இந்திய மாணவி. சென்னையில் பிறந்து, ஸ்காட்லாந்தில் வளர்ந்து, தற்போது ஹாவர்டில் படித்துக் கொண்டிருக்கிறார் காவ்யா. படிக்கும்போதே எழுதியிருக்கிறார். எழுதிக் கொண்டே படித்திருக்கிறார். எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

திடீரென்று மெகன் மெக்காஃபர்டி என்பவர் ஒரு குண்டை வீசினார். காவ்யா அவருடைய இரண்டு நாவல்களிலிருந்து (Sloppy firsts, second Helpings) ஏராளமான பகுதிகளை வரிக்கு வரி அப்பட்டமாக ஈயடித்திருக்கிறார் என்பதுதான் அவரது குற்றச்சாட்டு. 'என்னால் சாப்பிட முடியவில்லை, தூங்க முடியவில்லை' என்கிறார் மெகன்.

ஓப்பல் மேத்தாவை வெளியிட்ட லிட்டில் பிரௌன் அவசர அவசரமாக மெகனின் புத்தகங்களையும் காவ்யாவின் புத்தகத்தையும் எடுத்து வைத்துக்கொண்டு கண்களில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு ஒப்பிட்டபோது அதிர்ந்தனர். சந்தேகமேயில்லாமல் காவ்யா காப்பியடித்திருந்தார். என்ன செய்வது? ஒரு லட்சம் பிரதிகளை அச்சிட்டு அனுப்பியாகிவிட்டது. வேறு வழி தெரியவில்லை. ஒவ்வொரு புத்தகக் கடையாகத் தொடர்புகொண்டு விற்காமல் எஞ்சியிருந்த ஓப்பல் மேத்தாவை காசு கொடுத்து திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

லிட்டில் பிரௌன் கலக்கத்தில் இருக்கிறது. ஓப்பல் மேத்தாவை எழுதுவதற்காக காவ்யாவுக்கு அவர்கள் கொடுத்த ராயல்டியை என்ன செய்வது? அது மட்டுமா? மேலும் இரண்டு ஓப்பல் மேத்தா நாவல்களை எழுதிக் கொடுக்கும்படி 5,00,000 டாலரை அட்வான்ஸாகக் கொடுத்திருக்கிறார்கள். இதுபோதாதென்று 'ட்ரீம் வொர்க்ஸ்' பட நிறுவனம் ஓப்பல் மேத்தாவைப் படமாக்க காவ்யாவுக்கு ஆறு இலக்க அட்வான்ஸ் தொகையை வழங்கியிருக்கிறது.



• காவ்யா

காவ்யாவிடம் கேட்டால் 'இந்தப் புத்தகங்கள் அனைத்தையும் நான் படித்திருக்கிறேன். ஆனால் காப்பியடிக்கவில்லை. வேண்டுமானால் நன்றி என்று இவர்களது பெயர்களைப் போட்டுவிடுகிறேன்' என்று சொல்கிறார்.

புத்தகத்தின் தலைப்பை இப்படி மாற்ற வேண்டியிருக்கும்.

'How Opal Mehta copied, Got caught and lost a life.'

- மருதன்

ஒரு பக்கம்

மணலில் ஒரு தாஜ்மஹால்!



* பட்நாயக்





ஆக்ராவில், உலகப் புகழ்பெற்ற தாஜ் மகாலுக்குப் பக்கத்தில் யமுனை நதியின் கருமை நிற மணலைக் கொண்டு ஒரு கறுப்பு தாஜ்மகாலை உருவாக்கியவர் ஒரிசா மாநிலம் பூரியைச் சேர்ந்த சுதர்சன் பட்நாயக். இருபத்தெட்டு வயது இளைஞர். 'வெண்மை நிற பளிங்குக் கற்கள் கொண்டு தாஜ்மகாலைக் கட்டிய ஷாஜ கானுக்கு அதற்குப் பக்கத்திலேயே ஒரு கறுப்பு பளிங்குக்கல் தாஜ்மகாலைக் கட்ட வேண்டும் என்று ஒரு கனவு இருந்தது. ஆனால் அது நிறைவேறவில்லை. அதனை சுதர்சன் பட்நாயக் இன்று நிறைவேற்றி விட்டார்' என்கிறார்கள். அண்மையில் சென்னை வந்திருந்த மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக்கை நாம் சந்தித்தோம்.

உங்களுக்கு இந்தக் கலையில் எப்படி ஆர்வம் ஏற்பட்டது?

"எங்கள் வீடு பூரியில் கடற்கரைக்கு மிக அருகில் உள்ளது. எனவே அடிக்கடி கடற் கரைக்குப் போய் மணலில் என் கற்பனை யில் உதித்த மனித முகங்களையும், கடவுள் முகங்களையும் உருவாக்குவேன். அதனை, கடற்கரைக்கு வரும் மக்கள் ரசித்துப் பாராட்டுவார்கள். ஒரு முறை துர்கா பூஜையின்போது நான் உருவாக்கிய துர்கா தேவியின் முகம் மிக அற்புதமாக அமைந் தது. அதனை பத்திரிகைகள் புகைப்படத்துடன் வெளியிட்டன. அதுதான் எனக்குக் கிடைத்த முதல் மீடியா அங்கீகாரம்."

பரிசுகள் ஏதாவது பெற்றிருக் கிறீர்களா?

"சீனாவில் நடந்த போட்டியில் எனக்கு உலக சாம்பியன்ஷிப் பரிசு கிடைத்தது."

உங்கள் லட்சியம்?

"கின்னஸ் உலக சாதனைப் புத்தகத் தில் இடம்பிடிப்பது. அதன் மூலம் இந்தியாவுக்குப் பெருமை தேடித்தருவது. பூரியில் மணல் சிற்பக்கலையைக் கற்றுக் கொடுக்கும் ஒரு பயிற்சி மையத்தை ஆரம் பித்து நடத்தி வருகிறேன். அதில் தற் போது ஐம்பது மாணவர்கள் படிக்கிறார் கள். அந்த பயிற்சி மையத்தை விரிவு படுத்த விரும்புகிறேன்."

- எஸ்.சந்திரமௌலி

"பாவம், இந்தப் பொண்ணு!"



பூஜா... அப்போதுதான் பூத்த புது மலர் போல் இருக்கிறார். தமது குண்டு உடம்பைப் பாதியாகக் குறைத்து இளமையுடன் காட்சியளிக்கிறார் இந்த சீரியல் வில்லி.

"நான் இங்கதாங்க வில்லி, கர்நாடகாவில ஹீரோயின்! கிட்டத்தட்ட ஒன்பது படங்கள்ல ஹீரோயினா நடிச்சு 'ஹூலியா'ங்கிற படத்துக்கு ஸ்டேட் அவார்டே வாங்கியிருக்கேன். அப்போதான் குஷ்பு மேடம் பார்த்துட்டு என்னோட போட்டோவை அனுப்பச் சொல்லியிருந்தாங்க. உடனே 'குங்குமம்' சீரியல்ல வில்லியா என்ட்ரி ஆயிட்டேன். இப்போ கல்கி, கீதாஞ்சலி, செல்வின்னு சீரியல்ல, சீரியஸா பயணம் பண்ணிக்கிட்டிருக்கேன்".

'இப்படி வில்லி கேரக்டர்ல நடிக்கிறதால உங்களோட ஹீரோயின் இமேஜ் பாதிக்காதா?'

"வில்லிங்கிறதும் வித்தியாசமான கேரக்டர்தானே! என்னைப் பொறுத்த வரைக்கும் பர்ட்டிக்குலரா இந்த ரோல்தான் வேணும்னு அடம்பிடிக்கிறதில்ல. அதுவும் இப்போல்லாம் ஓரளவுக்கு பாஸிட்டிவ் ரோல் பண்ண ஆரம்பிச்சுட்டேன். ஆரம்பத்துல செல்வியில கூட 'இவளா'ன்னு திட்டுற அளவுக்கு என்ட்ரி ஆகி, இப்போ 'அய்யோ பாவம்பா இந்தப் பொண்ணு'ன்னு கண்ணீர் விடுற அளவுக்கு என்னோட கேரக்டர் மேல பரிதாபம் வர ஆரம்பிச்சுடுச்சு. 'கல்கி' சீரியல்லயும் நல்ல கேரக்டர்தான். அதே மாதிரி தெலுங்குல 'மயின்டி மகாலட்சுமி' சீரியல்ல சி.ஐ.டி.யா வந்து கலக்குறேன். ஸோ... டிஃபரண்டான எந்த ரோல் கிடைச்சாலும் பெர்ஃபெக்டா பண்ணுவேன். அதுக்காக வயசான பாட்டி ரோல் கொடுத்தா டூமச்!" என்கிற பூஜாவுக்கு, அஸின் மாதிரி நடிக்க ஆசையாம்.

"அவங்களோட க்யூட்டான ஃபேஸ், கலகலப்பான பேச்சு எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். அதே மாதிரி அஜீத். எனக்குப் பிடிச்ச ஹீரோ!" என்றவரிடம் 'அஜீத் மாதிரியே நீங்களும் ஒல்லிக்குச்சியா மாறினதோட ரகசியம்' கேட்டோம்.

"காலை எழுந்தவுடன் வாக்கிங்! பின்பு கனிவு கொடுக்கும் நல்ல யோகா! அதுமட்டுமில்லாம எங்க வீடு அஞ்சாவது மாடியில இருக்கு. லிஃப்ட் இருந்தாக்கூட படியிலதான் நடந்து போவேன். குண்டா இருக்கிறவங்க என்னோட வீட்டுக்குப் படியில ஏறி வந்தாலே போதும் பாதி உடம்பு குறைஞ்சுடும் (சிரிக்கிறார்). அப்புறம் ஆயில் ஃபுட், நான் வெஜ், ஐஸ்க்ரீம் எல்லாத்துக்கும் தடா போட்டுட்டேன். குண்டு பொண்ணுன்னு என்னைக் கிண்டல் பண்ணினவங்கள்லாம் இப்போ ஒல்லிக்குச்சி உடம்புக்காரின்னு செல்லமா பாட ஆரம்பிச்சுட்டாங்க" என்று தற்புகழ் பாடியவரைப் பார்த்து, நாமும் அதே பாடலைப் பாடிவிட்டு அங்கிருந்து 'அப்பீட்' ஆனோம்.

- ம.மனோசௌந்தர்

படம் : பொள்ளாச்சி சுந்தரம்

ஏழை, பணக்காரன்...

ஸமூஹத்தில் உள்ள அத்தனை பேரும் ஒரு காலணா அரையணாவாவது போட்டு எல்லோருமாகச் சேர்ந்தே பொதுக் காரியங்களுக்கான செலவுகளை ஏற்க வேண்டும். பணக்காரன் பணம் மட்டும் கொடுத்துவிட்டு, சரீரத்தால் உழைக்காமலிருந்தான் என்று இருக்கக் கூடாது; ஏழை சரீரத்தால் மட்டும் உழைத்து விட்டுப் பணம் கொடுக்காமல் இருந்தான் என்றும் இருக்கக் கூடாது. பணக்காரன் ரூபாய் தருவதும், ஏழை சரீர கைங்கர்யம் செய்வதும் பெரிய த்யாகமில்லை. பணக்காரன் ஏழைகளோடு வந்து நின்று கொண்டு மண்வெட்டி எடுத்து வெட்ட வேண்டும்; ஏழை தன் கூழுக்கு ஒரு மிளகாய் வாங்கிக் கொள்வதற்குப் பதிலாகக் காலணா டொனேஷன் கொடுக்க வேண்டும். அதுதான் பெரிசு. ஸோஷல் ஸர்வீஸ் பண்ணும்போதே பண்ணுகிறவர்கள் மனஸில் உயர்ந்து வளர வேண்டுமானால் செலவு, உழைப்பு இரண்டிலுமே ஒவ்வொருத்தனுக்கும் பங்கு இருக்க வேண்டும். ச்ரமதானத்துக்கு பலஹீனர்கள் மட்டுமே எக்ஸெப்ஷன்.




- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸர்ச் இன்ஜின்!

நம்பர் ஒன் பின்னணி!

'சோனி'- இந்த நிறுவனம் ஏதாவதொரு வடிவில் நம் வாழ்வில் கலந்திருக்கும். பெரிய பட்டன் ரேடியோவிலிருந்து டிஜிட்டல் ட்ரைவ் வரை சோனி நிறுவனத்தின் ஆட்சி தொடர்ந்து கொண்டிருக்கிறது. எப்படி சோனி நிறுவனம் உருவானது? எப்படி வளர்ந்தது? இடையில் ஒன்றுமில்லாமல் ஆன இந்நிறுவனம், பின்னர் நம்பர் ஒன் ஆன வரலாறு என்ன? மிக மிக சுவாரஸ்யமான இந்த வரலாற்றைத் தெரிந்து கொள்ள க்ளிக் செய்ய வேண்டிய முகவரி - www.sony.net/Fun/SH/index.html நச் நச்னு 37 அத்தியாயங்கள். வெற்றிக் கதைகளைத் தெரிந்து கொள்ளும்போது மனதில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறதே... அட அதுதாங்க, நாம மேலும் வேகமாக இயங்கத் தேவையான எரிபொருள்!



குட்டிக் குட்டியா!

சம்மர் ஆளை காலி பண்ணிக்கிட்டிருக்கு. வெளியே போக முடியல. குட்டீஸ்லாம் கூட லீவுல பகல் நேரத்துல ஜாலியா வெளியே போய் விளையாட முடியல. என்ன பண்ணலாம்? இணையத்துல குட்டிக் குட்டியா, செம தூளா விளையாட நிறைய ஆன்லைன் ப்ளாஷ் கேம்ஸ் இருக்கு. coolquiz.gamerival.com முகவரில கார்டு கேம்ஸ், போர்டு கேம்ஸ், சண்டை விளையாட்டுகள், ஃபுட்பால், கோல்ப் மாதிரி அவுட்டோர் கேம்ஸ், பஸில்ஸ்னு நிறைய குட்டிக் குட்டி சமாசாரங்கள் குவிஞ்சு கிடக்கு. உள்ளே நுழைஞ்சா நேரம் போறதே தெரியாது.

கைப்புள்ள கட்சி

(எங்கள் தலைவர் கைப்புள்ள தலைமையில் உருவான லட்சிய கட்சி இது. கட்சியின் கொள்கை: கைப்புள்ளயைக் கலாய்த்தல்)

கே: தேர்தல்ல உங்க வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கு?

ப: ஜெயிச்சாச்சுன்னு எழுதிக்க... ஒரு மூணு பக்கத்துக்கு தமிழ்நாட்டுல வ.வா.ச... அ.உ.ஆ.கு.கு.க... மல்லிகை கூட்டணி போட்டி போடற தொகுதில எல்லாம் எங்க கூட்டணி வேட்பாளர்கள் பேரை ஹைலைட் பண்ணி இவிங்க எல்லாம் ஜெயிச்சுப்புட்டாய்ங்கன்னு போட்டுக்க...

கே: மால்கேட்ல அப்படி என்ன பண்றீங்க?


ப: பில்டிங் கான்ட்ராக்ட்னு ஊருக்குள்ளே கவுரவமாச் சொல்லி வைச்சுருக்கேன். நீயும் அதையே மெய்ன்டைன் பண்ணு. அதுதான் உனக்கும் நல்லது... எனக்கும் நல்லது...

கே: நீங்க ஆட்சிக்கு வந்தா என்ன பண்ணுவீங்க?



ப: என்ன கேள்வி இது ராஸ்கல்... ஆட்சிக்கு வந்தா ஆட்சி பண்ணுவோம்ய்யா. (vavaasangam. blogspot.com வலைப்பதிவிலிருந்து)

- முகில்



நாம் கர்மாதீனர்களாக, புண்ணிய - பாபங்களுக்கு வசப்பட்டு, அவற்றால் பிறவி அடைகிறோம். பகவானுடைய பிறப்புக்கு புண்ணிய - பாபங்கள் காரணம் அல்ல. அவனுடைய இச்சை காரணம். எப்போ பிறக்கணும்னு நினைக்கிறானோ, அப்போது வந்து பிறக்கிறான். இப்படியாக அவனே பலபடியாகப் பிறக்கிறான். பகவானுடைய அவதாரமானது சத்யம். அதைத்தான் இங்கே

யோகோ யோக விதாம் நேதா
பிரதான புருஷேசுவர :
நாரசிம்ஹ வபு : ஸ்ரீமான் கேசவ :
புருஷோத்தம :

என்று சஹஸ்ரநாமம் அவதாரங்களைக் குறிப்பிட்டுச் சொல்கிறது.

முதலில் வைத்து எண்ணும் படியான சிறந்த அவதாரமாக, சஹஸ்ரநாமம் போற்றும்படியான ஏற்றமான அவதாரமாக நரசிம்ஹ அவதாரமானது பேசப்படுகிறது.

சஹஸ்ரநாமங்களுக்கும் பொருளாய் இருக்கக் கூடியவன் லக்ஷ்மி நரசிம்ஹன் என்பது ஸ்பஷ்டம். அப்படி எம்பெருமான் அவதரித்துத் தன் பெருமையைக் காட்டினான். ஆகையினாலே, அவனுடைய அவதாரமானது நம்முடைய பிறப்பைப் போன்றது அல்ல என்பதைத் தெளிவாய்க் காட்டினான். வேதம் சொல்கிற இதே விஷயத்தைப் பரமாத்மாவும் சொல்லியிருக்கிறான்.

குறையொன்றுமில்லை

எட்டாம் பாகம்

19

பரமாத்மா பகவத் கீதையிலே இதைத் தானே விளக்கிக் காட்டியிருக்கிறான். அவனுடைய வாக்கைக் காட்டிலும் நமக்குப் பிரமாணம் என்ன இருக்கிறது? வேதம் சொல்லிற்று. வேதத்தை அடியொற்றி பகவானும் அதையே வலியுறுத்தி அழகாகப் பேசியிருக்கிறான்.

'இதை உணருங்கள் - உணர்ந்தவர்களுக்கு மறுபடியும் பிறவி இல்லை' என்கிறான். பகவத் கீதையின் நான்காவது அத்தியாயத்தில் 'ஸ்ரீ பகவானுவாச' என்று ஆரம்பித்துச் சொல்லப்படும் விஷயம் இது. ''ஹே அர்ஜுனா!'' என்று அர்ஜுனனைப் பார்த்து பகவான் மூன்றாவது அத்தியாயத்தில் கர்மயோக பிரபாவத்தைப் பேசியிருக்கிறான். இடையிலே அர்ஜுனனை அழைத்து, "கர்மயோக பிரபாவத்தை இப்பொழுதுதான் நான் உனக்குச் சொன்னேன் என்று நினைக்காதே. இதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். யாருக்குச் சொல்லியிருக்கிறேன் என்றால், சூரியனுக்குச் சொல்லியிருக்கிறேன். சூரியன் இதை மனுவுக்குச் சொன்னான். மனு இதை இக்ஷ்வாகுவுக்குச் சொன்னான். பரம்பரையாக ஒருவர் பின் ஒருவரால் கேட்கப்பட்டு, தரிக்கப்பட்டு, அனுஷ்டிக்கப்பட்டும் வருகிறது இது. ஆனால், கால வெள்ளோட்டத்திலே, சொல்லக் கூடியவர்களுக்கு அதிக திறமையில்லாததால், உயர்ந்த விஷயங்களை மறைத்துவிட்டு, சாமான்ய விஷயங்களையே சொன்னதனாலேயும், கேட்கக் கூடியவர்கள் சாமான்ய விஷயங்களையே கேட்டு, உயர்ந்த விஷயங்களிலே புத்தி செலுத்தாமல் விட்டுவிட்டதனாலேயும், என்னால் சொல்லப்பட்ட யோகமானது நஷ்டம் அடைந்து விட்டது!" என்றான்.

இதிலிருந்து என்ன தெரிகிறது...? கால வெள்ளோட்டத்திலே உயர்ந்த விஷயங்களைக் கேட்பதும் அதை மறப்பதும் உலகத்திலே சகஜமாயிருக்



முக்கூர்
லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

கிறது என்பது தெரிகிறது!

"ஆசையினாலே, நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்ல அதிகாரிகள் குறைந்து வருகிறார்கள். அதைக் கேட்க விரும்புகிறவர்களும் குறைந்து வருகிறார்கள். நிறைய மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஹிதத்தைச் சொல்கிறவர்கள் எத்தனை பேர்?! ஹிதமான விஷயங்களை விட்டு விட்டு சாமானிய விஷயங்களையே சொல்பவர்கள் அதிகமானதனாலே, என்னால் சொல்லப்பட்டது நஷ்டமாகி விட்டது" என்றான் பகவான்.

"உயர்ந்த விஷயத்தைத் தன்னுடைய சிஷ்யனுக்கல்லாது, புத்திரனுக்கல்லாது வேறொருவருக்குச் சொல்லக் கூடாது என்று சாஸ்திரம் சொல்வதனாலேயும் 'என்னை சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு ஆக்ஞாபிக்கவேண்டும்' என்று நீ கேட்டுக் கொண்டதனாலேயும் உன்னை நான் சிஷ்யன் என்றும் தாஸ்யபூதன் என்றும் எனக்கு சேஷபூதன் என்றும் ஏற்று, இந்த உயர்ந்த விஷயத்தை உனக்குச் சொன்னேனடா! அதையும் இப்போதுதான் சொன்னேன் என்று நினைக்காதே... ஏற்கெனவே இதை சூரியனுக்குச் சொல்லியிருக்கிறேன்" என்றான் பகவான்.

இதைக் கேட்டவுடன் அர்ஜுனன் சிரித்தான்! "எதற்குச் சிரிக்கிறாய்" என்று கேட்டான் பகவான்.


தெலுங்கிலே அழகானதொரு பாடல் வரும்:

"தலைவர் கொஞ்சம் சொதப்பிட்டார்."

"என்ன..."

"ஒரு தொண்டர் செல் நம்பர் கேட்டப்போ, மறதியா வேலூர் செல் நம்பரைச் சொல்லிட்டாராம்."

- நா.நாகராஜன்



'தலையிலே மயில் பீலி அணிந்து கொண்டு, இவன் வெண்ணெயைத் தேடி கிருஹம்தோறும் அலைந்தவன். வெண்ணெயைத் திருடுகிறபோது ஏகப்பட்ட பொய்களைச் சொன்னவன். மத்தினால் மொத்துண்டவன்! 'மத்தினால் மொத்துண்ட பிரான்' என்றே பெயர் அவனுக்கு...' என்று சொல்லும் பாடல்! அர்ஜுனனும் பரமாத்மாவைப் பார்த்து அதையே சொல்கிறான்:

"நீ புளுகிலே வல்லவன் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அதை இப்போதுதான் பிரத்யக்ஷமாகப் பார்க்கிறேன். நீ எவ்வளவு பெரிய பொய்யன் என்பதைப் பார்க்கிறேன். இவ்வளவு பெரிய பொய்யை ரொம்ப தைரியமாகச் சொல்கிறாயே!" என்றான்.

உடனே பகவான், "நான் பொய் சொன்னேனா...? பொய் எதுவுமே சொல்லவில்லையே!" என்றான்.

உடனே அர்ஜுனன் அவசரமாகத் தன்னைத் திருத்திக்கொண்டு "க்ருஷ்ணா! நீ சொன்னது எனக்குப் புரியவில்லை" என்றான். முதலில் 'பொய்' என்று சொன்னவன், இப்போது 'புரியவில்லை' என்கிறான்!

"என்ன புரியவில்லை?"- பகவான் கேட்டான்.

"நீயோ இப்போது என்னோடு பிறந்திருக்கிறாய்" என்று ஆரம்பித்தான் அர்ஜுனன்... "எனக்குச் சாரதியாக நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய். நீயும் நானும் இந்த இருபத்தெட்டாவது துவாபர யுகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இருபத்தெட்டு சதுர்யுகங்களுக்கு முன்பு தோன்றிய அந்த சூரியனுக்கு நீ சொன்னேன் என்கிறாயே... எப்படி?' எப்போதோ தோன்றிய சூரியனுக்கு, இப்போது உள்ள நீ 'சொன்னேன்' என்கிறாய் அது எவ்வாறு?"

இந்த மாதிரி அர்ஜுனன் கேட்டவுடனே பகவானுக்குச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போய் விட்டது.

ஆளவந்தார் என்கிற ஆசார்யர் இதை அழகாக கீதாசார்யம் என்ற கிரந்தத்திலே எடுத்துக் காட்டுகிறார்: "தன்னுடைய சுவபாவத்தை பகவான் பேசினான். கர்ம யோகத்தின் இடையிலே நான் யார்

என்று நமக்குத் தெரிவிக்கிறான். அதுதான் நமக்கு முக்கியம்" என்கிறார்.

இங்கே பகவான் ஐந்து சுலோகங்கள் பேசுகிறான். அதில் ஆறு விஷயங்களை நமக்குத் தெரிவிக்கிறான். இந்த ஆறு விஷயங்களுக்கும் அவதார ரஹஸ்யம் என்று பெயர். எத்தனை அவதாரங்கள் அவன் எடுத்தாலும் இந்த விஷயம் மனத்தில் கொள்ள வேண்டியது. பகவான் எத்தனை அவதாரங்கள் எடுத்தாலும் இதற்குப் புறம்பாக நடந்துகொள்ள மாட்டான். இதற்கு உட்பட்டுத்தான் அவன் நடக்கிறான்.

இந்த ஐந்து சுலோகங்களிலே அவன் என்ன சொல்கிறான் பாருங்கள்:


"எனக்கு எத்தனையோ ஜன்மாக்கள் கடந்துவிட்டன. நானும் எத்தனையோ பிறவி எடுத்திருக்கிறேன். உனக்கும் எத்தனையோ பிறவிகள் ஏற்பட்டிருக்கின்றன அர்ஜுனா. ஆனால், உன்னைக் கொண்டு என்னை எடை போடாதே. உன்னுடைய பூர்வ ஜன்மா என்னவாக இருந்தது என்று கேட்டால் உன்னால் சொல்ல முடியுமா? இதற்கு முன் என்னவாக இருந்தாய் என்பது தெரியுமா? இனிமேல் எப்படி இருப்பாய் என்று கேட்டால் சொல்ல முடியுமா?... என்னிடம் கேள், உன் ஜன்ம பரம்பரை அத்தனையையும் சொல்லுவேன். இனி எப்படி இருப்பாய் என்பதும் எனக்குத் தெரியும். சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லிற்றே, அந்த மாதிரி நான் சர்வக்ஞன்."

- தன்னை சர்வக்ஞன் என்று பகவான் சொல்லிக் கொள்கிறான்.

"உன்னுடைய பிறவியிலே சங்கோச (வரையறைக்குட்பட்ட) ஞானமுடையவனாக நீ இருக்கிறாய். எனக்கு அவதார காலத்திலேயும் சங்கோச ஞானம் என்பது கிடையாது" என்றான்.

இதைத்தான் நம்மாழ்வார் திருவாய்மொழியிலே அழகாக எடுத்துக்காட்டுகிறார்: 'அவனுடைய ஞானம், அவனுடைய திருமேனி, இதற்கெல்லாம் பங்கமில்லாமல் அவன் அவதரிக்கிறான். அவதார காலத்திலேயும் அவன் திருமேனிக்கு வாட்டமில்லை. அப்ராகிருதமான திவ்ய மங்கள விக்ரஹகமாக அவதரிக்கிறான். அவனுடைய ஞானத்துக்குக் குறைவில்லை' என்கிறார்.

அதனால்தான் 'கௌசல்யா சுப்ரஜா



"நமது மன்னர் கொஞ்சம் பயந்த சுபாவம்!"

"அதுக்காக ஜல்லிக்கட்டுல ஆடுகளை ஓடவிட்டு அடக்கறது கொஞ்சம் கூட நல்லா இல்ல!"

- குட்டி பிரசன்னா

ராம பூர்வா சந்த்யா பிரவர்த்ததே' என்று விச்வாமித்ர மஹரிஷி ஸ்ரீ ராமனைத் துயில் எழுப்புகிறார்.

கௌசல்யா சுப்ரஜா ராமா! தாசரதே ராமா - தசரதன் மகனே எழுந்திராய் என்று எழுப்பக்கூடாதோ...? ஏன் அம்மாவைச் சொல்லி கௌசல்யையின் சுபுத்திரன் என்று குறிப்பிடவேண்டும்? ஏனென்றால் அந்தக் குழந்தை ராமன் படுத்துக் கொண்டிருக்கிற அழகை நித்யம் பார்க்கக் கொடுத்து வைத்தவள் அவ ளல்லவா?

இந்த உலகில் சாமானிய மனிதக் குழந்தையைப் பார்த்து நாம் பூரித்துப் போகிறோம். எந்த விதமான தோஷமுமில்லாமல் அவதார காலத்திலேயும் பரமாத்மா ஸர்வ சுந்த ஸர்வ ரஸனாக உயர்ந்த ரீதியிலே அவதரிக்கிறான். அதைப் பார்த்து ஆச்சர்யப்படுகிறார் விச்வாமித்ரர். 'கௌசல்யா இதை நித்யம் ஸேவிக்கக் கொடுத்து வைத்தவள் அல்லவா? இன்று ஒரு நாள் தானே எனக்குக் கிடைத்தது' என்று விச்வாமித்ரர் சந்தோஷமும் ஏக்கமும் பட்டுக்கொண்டு பகவானை எழுப்புகிறார்.

பகவானின் அவதார கால ஞானமும் அப்படிப்பட்டது; அவன் திருமேனியும் அப்படிப்பட்டது.

அதனால்தான், "நீ உணர மாட்டாய் அர்ஜுனா எல்லாவற்றையும் நான் உணர்வேன்" என்று சர்வக்ஞத்வத்தைச் சொன்னான் பகவான்.

(வளரும்)

‘வேட்டிய மடிச்சுக் கட்டு’ படத்தில் குட்டிப் பையனாகத் திறமை காட்டிய பாக்யராஜ் மகன் சாந்தனு, இன்று தாணுவின் தயாரிப்பில் ‘சக்கரக்கட்டி’ நாயகனாக விஸ்வரூபமெடுத்து நிற்கிறார்... மிரட்டலான போட்டோசெஷனே படத்தைப் பற்றிய பல அனுமானங்களை இண்டஸ்ட்ரியில் தவழவிட்டிருக்கிறது. வாழ்த்துகள் தொடர்ந்து வந்தவண்ணமிருக்க, நமது பங்குக்கு ‘ஹாய்’ சொல்லிவிட்டு சாந்தனுவைச் சீண்டினோம்...


“சர்க்கரைன்னாலே நாக்குல இனிப்பு தாண்டவமாடுதில்லையா... அதுதான் படம். ஒவ்வொரு ஃப்ரேமும் ஸ்வீட்டா நகரும். யூத் டீம் களமிறங்கி இருக்கோம். கலக்காம விடமாட்டோம்'' என்றவரை, சர்க்கரை பற்றி அசைபோடச் சொன்னோம்...

“எனக்கு சர்க்கரைன்னா ரொம்பப் பிடிக்கும். ஆவாரம்பூ படத்துல வர்ற வினீத் சாரோட சர்க்கரை கேரக்டர் ரொம்ப பவர்ஃபுல்லானது. சர்க்கரை கலந்த மில்க் ஸ்வீட்ஸ் விரும்பிச் சாப்பிடுவேன். எந்த ஃபங்ஷன்னாலும் காட்பரீஸ் இல்லாம கொண்டாட மாட்டேன். அம்மா வைக்குற சர்க்கரை பாயசத்துக்கு நான் அடிமை. என்னோட ஸ்கூல் டேஸ்ல ஸ்விம்மிங் காம்படீஷன்ல ஸ்டேட் ஃபர்ஸ்ட் வந்தது இன்னமும் என் நெஞ்சுல படிஞ்சு, சர்க்கரையா இனிச்சுக்கிட்டே இருக்கு. ‘சக்கரக்கட்டி’ல கூட எனக்கு ரெண்டு ஸ்வீட் ஹீரோயின்ஸ். அவங்க எறும்புங்க மாதிரி. சாந்தனு சர்க்கரையை யாரு தள்ளிக்கிட்டுப் போறாங்கன்றதுதான் கதையே... டைரக்டர் கலாபிரபு அதை இனிக்க இனிக்க வடிச்சிருக்கார்'' என்று பாகாய் உருகியவரிடம் ‘அப்புறம்?’ என்றோம்.

“அப்புறமென்ன...? போயிட்டு வாங்க. என்கிட்டேருந்து எந்த வில்லங்கமான பதிலும் வாங்க முடியாது. இப்பத்தான் வந்திருக்கேன். எல்லாம் பின்னாடி பார்த்துக்கலாம். ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம். இந்தப் பேட்டிக்கு சர்ச்சையான டைட்டில் வைக்க நீங்க சிரமப்படுவீங்க'' என்று சாபம் விட்டார்.

- சா. இலாகுபாரதி

“கலக்காம விடமாட்டோம்!”



• 'சக்கரக்கட்டி'
படத்தில் சாந்தனு...

தென்னிந்தியாவிலுள்ள தற்கால வித்வான்களில் சிலர் இசைத்தட்டுகளின் மூலம் தங்கள் புகழைப் பெருக்கிக் கொண்டார்கள். வேறு சிலரோ, இசைத்தட்டு கொடுத்த பின்னர், தங்களுக்கு ஏற்கெனவே இருந்த பெயரையும் இழந்து விட்டார்கள். இன்னும் சிலருடைய கீர்த்தி இசைத்தட்டுகளினால் அதிகமும் ஆகவில்லை; குறைவுபடவுமில்லை.

அரியக்குடி இராமாநுஜ அய்யங்கார் இவற்றுள் மூன்றாவது கோஷ்டியைச் சேர்ந்தவர். அவர் கிராமபோன் பிளேட் கொடுப்பதற்கு முன்னாலேயே சங்கீத உலகில் உன்னத ஸ்தானத்தை அடைந்து விட்டார். அதற்கு மேல் உயர்வதற்கு இடமேயிருக்கவில்லை. ஏறக்குறைய பதினைந்து வருஷ காலமாக அவருடைய புகழ் மங்காமல் இருந்து வருகிறது. அந்தப் புகழை அவருடைய இசைத்தட்டுகள் அதிகமாக்கவுமில்லை; குறைவுபடுத்தவுமில்லை. ஆனால் நிலை நிறுத்தியிருக்கின்றன.

அரசியல் வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் சென்ற பதினைந்து வருஷத்தில் அநேக தலைவர்கள் வந்து போய்விட்டார்கள். ஆனால் சங்கீதத்தில் மட்டும் அய்யங்காருடைய தலைமை இன்னும் நீடித்திருப்பதின் இரகசியம் என்ன? பண்டிதர்கள், பாமரர்கள் எல்லாரையும் ரஞ்சிப்பிக்கக் கூடிய சில அம்சங்கள் அய்யங்காரின் பாட்டில் அமைந்திருப்பதுதான்.

அய்யங்கார்



அய்யங்காருக்கு முந்திய காலத்தில் சங்கீதக் கச்சேரிகளுக்கு வந்து ரஸித்தவர்கள் பெரும்பாலும் அந்த வித்தையின் நுட்பங்களை அறிந்த சிலரேயாவர். மற்ற சாதாரண ஜனங்கள் சங்கீதம் அநுபவிப்பதற்கு நாடக மேடையை நாடி வந்தார்கள். சங்கீத நுட்பங்களை அறியாத சாதாரண ஜனங்களும் ரஸித்து அநுபவிக்கும்படியாகக் கச்சேரி பந்தாவை அமைத்தவர் அய்யங்கார் என்றே சொல்ல வேண்டும். சின்னச் சின்னக் கீர்த்தனங்களாக உருப்படிகள் அதிகமாகப் பாட ஆரம்பித்தவர் அவரே. கச்சேரியில், வித்தைத் திறமையே பிரதான அம்சமாகவுடைய

பிளேட்!

அமரர் கல்கி



பகுதிக்குக் காலத்தைக் குறைத்து, எல்லாரும் அநுபவிக்கக்கூடிய பகுதியை அவர் நீட்டிவிட்டார். கச்சேரியின் கடைசியில், துக்கடாக்கள் அதிகமாய்ப் பாடினார். கீர்த்தனங்களையும் ராகங்களையும் ஒரே சிட்டையாகப் பாடிவந்தபடியால், கொஞ்ச நஞ்சம் சங்கீத ஞானமுள்ளவர்கள் எல்லோரும் அவரைப் பின்பற்றிப் பாடத் தொடங்கினார்கள். ஏகலைவன் துரோணாச்சாரியாரிடம் சிஷ்யனாயிருந்ததுபோல், அவருடைய கச்சேரிகளைக் கேட்பதின் மூலமாகவே அவருக்கு ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் ஏற்பட்டனர்.

சங்கீத வித்தையில் ஆழ்ந்த தேர்ச்சியில்லாதவர் யாராவது கச்சேரியில் இப்படிப்பட்ட புரட்சி செய்ய முயற்சித்திருந்தால் பண்டிதர்கள் சண்டைக்கு வந்திருப்பார்கள். "போச்சு! குடி முழுகிப்போச்சு!" என்பார்கள். ஆனால் அய்யங்காரிடம் அவர்கள் ஜம்பம் ஒன்றும் சாயவில்லை.

தென்னாட்டில் நமது காலத்தில் உயர்ந்த சங்கீத ஞானம் விஸ்தாரமாகப் பரவுவதற்குக் காரண புருஷர்களாயிருந்தவர்களில் தலை சிறந்தவர் யார் என்று கேட்டால், 'அய்யங்கார்தான்' என்று திட்டமாகச் சொல்லலாம்.

எந்த பிளேட்டில் வார்த்தைகளும் ஸ்வரங்களும் சுத்தமாய்க் காதில் விழுந்து, இசைத்தட்டிலிருந்தே பாட்டைக் கற்றுக் கொள்ளும்படியிருக்கிறதோ, அத்தகைய பிளேட்டுகளைத்தான் ஜனங்கள் விரும்பி வாங்குவார்கள்.



* இராமாநுஜ அய்யங்கார்

இவருடைய இசைத்தட்டுகளில் ஒன்று மட்டும் அய்யங்காருடைய புகழ் என்றைக்கும் அழியாமல் இருக்கச் செய்யக்கூடியதாகும். அதுதான் 'வைஷ்ணவ ஜனதோ!' என்ற பாட்டு. மகாத்மா காந்தியின் மனதுக்கு உகந்த கீதம் என்பதாக, தேசத் தொண்டர்களால் தேசிய பஜனைகளில் அடிக்கடி அது பாடப்படுவதுண்டு. அநேகமாக அபஸ்வரக் களஞ்சியமாய்த்தானிருக்கும். அந்த கீதத்தை சங்கீத மேன்மை பொருந்தியதாகச் செய்து வெகு அழகாய்ப் பாடியிருக்கிறார் அய்யங்கார். முதலில் ஆலாபனமே மிக நன்றாயமைந்திருக்கிறது. பிறகு பல கண்ணிகள் அமைந்த அந்தப் பாட்டைக் கேட்பவர்களுக்குத் துளிக்கூட அலுப்புத் தோன்றாவண்ணம் விதவிதமான வேலைப்பாடுகளுடன் பாடியிருக்கிறார். மகாத்மாவுக்குப் பிரியமான பாட்டு, ஒருவருடைய சங்கீதக் காதுக்கும் பிரியமளிப்பது என்றால், வேறு என்ன வேண்டும்? ஆகவே, அய்யங்காருடைய இசைத் தட்டுகளுக்குள், 'வைஷ்ணவ ஜனதோ'வுக்குத்தான் இப்போதைக்கு நான் முதன்மை ஸ்தானம் அளித்திருக்கிறேன்.

- வானதி பதிப்பகத்தின் கல்கி களஞ்சியத்திலிருந்து...



செண்பகம்

நான்கு வாரத் தொடர்

"**உ**னக்கு ரொம்ப பிடிக்குமேன்னு வாங்கி வைச்சா தூக்கிப் பையில வைக்கறியே என்ன அர்த்தம்?" உஷா உரிமையுடன் அதட்டினாள்.

"இல்லே உஷா தலையில கார்த்தால வைச்ச மல்லி அப்படியே இருக்கு..."

"ப்த்ஸ"... திரும்பு" என்று நட்புரிமையோடு நளினியைப் பிடித்துத் திருப்பி, தலையில் பாதி வாடிக் கிடந்த மல்லிகைப் பூவை எடுத்து குப்பையில் போட்டாள் உஷா... "கொண்டா அந்த செண்பகப்பூவை...!"

"வேண்டாம் உஷா, ப்ளீஸ்..." சொல்லும்போதே நெஞ்சில் அழுத்திய சோகம் குரலில் நடுக்கத்தை ஏற்படுத்த, உஷா யூகித்துவிட்டாள்.


"என்ன ஆச்சு...?"

"ஒண்ணும் ஆகலை..."

"சரி இப்ப சொல்ல வேண்டாம். முதல்ல டீ சாப்பிடலாம்..."

சூடான தேநீரும் நெருக்கமான தோழியின் இதமான உபசரணையும் தந்த பாதுகாப்புணர்வில் ஆறுதல் பிறந்தது. அந்த இளகிய நிலையில் உஷா அவளிடமிருந்து எல்லாவற்றையும் வரவழைத்துவிட்டாள்.

"கேட்கவே பயமாத்தான் இருக்கு நளினி. வாழ்க்கைல எப்போ எது தப்பாகும்னு தெரியலை... ஒரு நிச்சயமே இல்லை பார்த்தியா? எவ்வளவோ நாளைக்கு நாங்க இங்கே எங்களுக்குள்ளே



பேசிக்கிட்டிருக்கோம் நளினி - மூர்த்தி மாதிரி தம்பதியைப் பார்க்க முடி யாதுன்னு."

"உனக்கு ரமேஷை ஞாபகமிருக்கா உஷா?"

"ம்... சில முறை பார்த்திருக்கேன். உங்க வீட்டு விசேஷங்கள்ல... ஒல்லியா, உயரமா, தாடி வைச்சுக்கிட்டிருப்பாரே... ரொம்ப கூர்ந்து கவனிச்சதில்லே..."

"நல்ல மனுஷர். இத்தனைக்கும் எங்க கல்யாணமாகறதுக்கு முன்னாலிருந்தே அவர் மூர்த்திக்கு நெருக்கமான நண்பர் தான். அந்த உரிமைலதான் இவ்வளவு வருஷமா வந்து போய்க்கிட்டிருக்கார். சமீப காலமா கொஞ்சம் அடிக்கடி வர்றார் - சில சமயம் மூர்த்தி இல்லாத நேரத்திலயும்."

"இந்த மாற்றத்துக்கு என்ன கார ணம்னு நினைக்கறே...?"

"தெரியலை.... இப்போதான் குழந் தைகள் பெரிசாகி என் உதவியில்லாம தங்களோட வேலையைப் பார்த்துக்கறாங்க.

சீதா ரவி

ரமேஷ் வந்தா நானும் மூர்த்தியோட உட்கார்ந்து அவர்கிட்டே பேச முடியுது... எனக்கு அந்தப் பரிமாற்றம் பிடிச்சி ருந்திருக்கு. தேவையா இருந்திருக்கு... ஆனா அதையெல்லாம் சிந்திக்காம இயல்பா பேசியிருக்கேன்."


மூர்த்தியின் நண்பர்களுக்கு அடைப்புக் குறி ஏதோவொரு கட்டத்தில் கழன்று போய், இயல்பானதொரு உறவு வளர்ச்சி யாக, அந்த நட்பு உரமேறியதைச் சொன் னாள் நளினி. பரஸ்பர நேசமும் மரியா தையும் வளர்வதைச் சொன்னாள். அதன் ஆழத்தில் எவ்வித சலனங்களுக்கும் இடமில்லை. அவள் உள்ளுணர்வுக்கும் சரி, புத்திக்கும் சரி இது நன்றாகவே தெரிந்திருக்கிறது. ஆனால், இப்போது அந்த அமைதியில் ஒரு கல் வந்து விழுந்தி ருக்கிறது - வலிக்க வேண்டும் என்பதற் காகவே எறியப்பட்ட கல்.

"வலிக்கும்... ரொம்ப வலிக்கும்... புரியுது."

"இத்தனைக்கப்புறம் ரமேஷ்கிட்டேயும் சகஜமாயிருக்கிறது எத்தனை பெரிய சித்திரவதை தெரியுமா! ஒரு கட்டத்துல எல்லாத்தையும் அவர்கிட்டே கொட்டித் தீர்த்துடலாமான்னுகூட நினைச்சேன்.."

"ஐயோ! அது ரொம்ப தப்பாகியிருக் கும். நல்ல காலம்..."

இரண்டு



"தெரியும் அதனாலதான் ஒருத்தர்கிட்டேயும் சொல்லாம உள்ளேயே குமுறிக்கிட்டிருக்கேன்..."

சற்று நேரம் கனத்த அமைதி.

"ஒரு வேளை ரமேஷ் கல்யாணம் பண்ணிக்கிட்டு குழந்தை குட்டியோட இருந்திருந்தா இந்தப் பிரச்னையே வந்திருக்காதோ உஷா?"

"தெரியலை, ஆனா மூர்த்தியோட நிலைமையிலிருந்து இதை நீ சிந்திச்சுப் பார்த்தியா...?"

"பார்த்தேன்... அப்படிப் பார்த்ததனாலத்தான் ஓரளவுக்குச் சுதாரிச்சுக்க முடிஞ்சுருக்கு. வீடு - குழந்தைகள் புருஷன்ங்கறதைத் தவிர வேறெதுலயும் கவனமில்லாம இத்தனை வருஷம் நான் வளைய வர்றதைப் பார்த்துக்கிட்டிருந்திருக்கார் மூர்த்தி. புதுசா எனக்கொரு ஆர்வம் அரும்பியிருக்குன்றதை கவனிச்சதுனால பயம் வந்திருக்கணும் அல்லது அதைச் சரியா கவனிக்காம இருந்து திடீர்னு ஒரு நாள் அது அவருக்குப் புலப்பட்டதனால கோபம் வந்திருக்கணும்..."


"மெல்ல மெல்ல பேசி சரி பண்ணிருந்தினி."

"பேச முயற்சி பண்றப்பல்லாம் அடி விழறதே... இப்போ ரமேஷ் வெளிநாடு போயிருக்கார். வர மூணு மாசம் ஆகும். கொஞ்சம் சிரமமில்லாம மூச்சு விடறேன்..."

"போனவர் எப்படியும் திரும்பி வருவாரே... அப்போ என்ன பண்ணுவே...?"

"அதுக்குள்ள நிலைமையைச் சீர்பண்ணத்தான் போறேன். ஆனா உஷா, எனக்கு உள்ளே ஒண்ணு நொறுங்கிப் போய்க் கிடக்கே... அதைத்தான் சரி பண்ண முடியுமான்னு தெரியலை. ரொம்ப பயமாயிருக்கு..."

"வர வர எதுலதான் ஊழல் செய்றதுன்னு விவஸ்தையே இல்லாம போயிடுச்சு."
"எப்படிச் சொல்றே?"
"தலைவர், கூட்டணிக் கட்சிகள் நடுவே உறவுப் பாலம் அமைக்கறதுல ஊழல் பண்ணிருக்கார்."
- வீ. விஷ்ணுகுமார்



அவள் பயந்தது போலவே நடந்தது. குழந்தைகள் இருவரும் வெளியே சென்றிருந்த ஒரு ஞாயிறு மாலையில் மூர்த்தியுடன் தனியே பேச சந்தர்ப்பம் வாய்த்தது.

சோபாவில் சௌகரியமாய்ச் சாய்ந்து டீவி. பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கையிலிருந்த ரிமோட்டைப் பிடுங்கி எடுத்து அதை அணைத்தாள்.

"ஏய்! ஏய்!... ஏன் அணைக்கறே..?"

"பேசணும்." பக்கத்தில் உட்கார்ந்தாள்.

"சொல்லுங்க ராணியம்மா..."

"எப்படிக் கூப்டீங்க...?"

"ராணியம்மா! சர்வாதிகாரிணி! ரிமோட் கொண்டாள்; என்னைக் கொள்ளை கொண்டாள்...!"

அவனோடு சேர்ந்து சிரிக்க முடியவில்லை.

தோள்களில் கையைச் சுற்றிப் போட்டு அவளைக் கிட்டே இழுத்தான்.

சலிப்பு அலை ஒன்று உள்ளே ஆர்ப்பரித்து எழுந்தது. பழகிய இலகுவுடன் இளகிப் பரிமாற உள்ளம் மறுத்தது.

இல்லை; இந்தக் கணம் முக்கியம்! 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி தீரா நோய் தீர்க்கவல்லான் தன்னை...' கணகணவென்று ஓதுவார் பாடியது காதில் கேட்டது.

"இப்போ ராணியம்மா பேசறதை ராஜா பொறுமையா கேட்டுப்பீங்களாம்..." என்று அவன் உற்சாகத்துக்கு ஈடு கொடுத்து நெற்றியில் முத்தமிட்டாள்.

"சொல்லு சொல்லு..."

"ரமேஷ் இங்க வந்து போறதுல உங்களுக்கு அப்படி என்ன பிரச்னை...?"

"............"

"சொல்லுங்க..."

"பிடிக்கலை..."

"ஏன்... அவர் என்ன அன்னியமா அசலா உங்க ஃப்ரெண்ட்... இவ்வளவு நாளா வந்து போய்க்கிட்டிருந்தவர்... உங்க பேர்ல எவ்வளவு அபிமானம் வைச்சருக்கார் தெரியுமா...?"

"............"

"மௌனமாயிருந்தா என்ன அர்த்தம்...?"

"என் ஃபிரண்டைப் பத்தி எனக்குத் தெரியும்...."

"ரொம்ப நல்லது. பாதி பிரச்னை விட்டுது. என்னைப் பத்தியும் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணுமே... பத்தொன்பது வருஷத்துல என்னை நம்ப நீங்க கத்துக்கலியா? இல்லை அந்த நம்பிக்கை ஏற்படற மாதிரி நான் நடந்துக்கலியா? எங்க, என்ன தப்பு ஆச்சு சொல்லுங்க...?"

கேட்டு முடிப்பதற்குள் அழுகை பீறிட்டது. உடலின் குருதி மொத்தம் கண்ணீராய் மாறி வெடித்துச் சிதறியது.

"நளினி... என்ன இது..." பதறிப் போய் அவளை அணைத்துக் கொண்டான். "வேண்டாம்... அழக்கூடாது... கண்ணில்லே... நான்தான் ஒரு கோபக்காரன்னு உனக்குத் தெரியுமே..."

"எவ்வளவு சுலபமாச் சொல்லிட்டீங்க...!" - கண்ணில் நீர் பெருகுவது நிற்கவில்லை.

"எனக்கு நாற்பது வயசாகுது. சின்னக் குழந்தை இல்ல... ஒருபோதும் யாரும் என்னைத் தப்பாப் பயன்படுத்திக்க விடமாட்டேன்... நான் சொல்லாமலே நீங்க உணர வேண்டிய விஷயமில்லையா இது...?"

சற்றே அவள் அழுகை நின்றது.

"எங்கே, சிரி பார்க்கலாம்..." என்றான் அவள் முகவாயை நிமிர்த்திப் பிடித்து...

அவள் சிரிக்காமல் அவன் முகம் பார்த்துச் சொன்னாள் :

"நமக்கு இரண்டு குழந்தைகள் இருக்கு... திரும்பினா வளர்ந்து போய் கல்யாணத்துக்கு நிற்கும் இரண்டும். நம்ம சேர்ந்து சுமக்க வேண்டிய பொறுப்பு இன்னும் வண்டி வண்டியா கிடக்கு. வேண்டாத தப்பான எண்ணங்களை மனசுல வளர விடாதீங்க. ரமேஷ் உங்களுக்கு மட்டும் ஃப்ரெண்டா இருந்தார். அப்புறம் நமக்கு நண்பரானார். இப்போ என் தோழராவும் இருக்கார். அதனால நம்ம உறவு எந்த வகையிலும் மாறலை, மாறாது. புரியுதா...? எப்பவும் நான் உங்களோட இருப்பேன்."

தனது ஆழ்மனத்தை அவள் அம்பலப்படுத்தியதில் சங்கடப்பட்டான். அவளை நேருக்கு நேர் நோக்காமல் பார்வையைத் தாழ்த்திக் கொண்டான்.

"என்ன, சரிதானே?" என்றாள். அவன் அசௌகரியத்தைப் போக்கும் முகமாக கைகளைப் பிடித்துக் குலுக்கி உற்சாகமூட்டினாள்.

"நடந்ததையெல்லாம் மறந்துடுவோம்... சரியா?"

"ஓ.கே. ராணியம்மா, ரிமோட் கொண்டாள்.... இப்போ என் ரிமோட்டை எனக்குத் திருப்பித் தருவீங்களா?"

மீண்டும் குழந்தைத்தனமாக டி.வி.யில் ஆழ்ந்தான்.

அதே குழந்தைத்தனத்துடன் கடந்த மூன்று நான்கு மாதங்களின் சுசப்பை



"முதல்ல கைலாசம் மருத்துவமனைன்ற பேரை மாத்துங்க டாக்டர்."

"ஏன் – நல்லாயில்லையா?"

"நான் ட்ரீட்மெண்ட்டுக்கு வரும்போதெல்லாம் 'கைலாசத்துக்கா போறே'ன்னு அபசகுனமா கேக்குறாங்க."

- கே.ஜீ. மாணிக்கவாசகம்

வாரியார் அமுதம்!



தாழம்பூ பாம்புகளால் சூழப்பட்டிருக்கிறது. அதனிடம் பழங்கள் இல்லை. முள்ளோடு கூடியிருக்கின்றது. எளிதான சேற்றில் நிற்கிறது. வாசனை என்ற ஒன்று இருப்பதால், மக்கள் அதனை எடுத்துப் பாராட்டி சூடிக்கொள்கிறார்கள். வாசனை என்ற ஒரு நற்குணத்தால் ஏனைய தீமைகள் மறைந்துவிடுகின்றன.

அதுபோல் கொடுக்கின்ற தரும குணமாகிய வாசனை ஒன்று மட்டும் இருக்குமானால் உலகம் உன்னைப் பாராட்டும், மதிக்கும்.

அவனால் முற்றிலும் மறந்துவிட முடிந்தது... ஆனால் அவளுக்குத்தான் அது சாத்தியப்படவில்லை. மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி ஒரு நோயைத் தீர்த்ததில் ஆத்மசக்தி முற்றிலும் வடிந்து காலியாகியிருந்தது. உள்ளே அணைந்து போன விளக்கை ஏற்ற மீண்டும் மீண்டும் முயன்று தோற்றாள். அதன் திரியில் எரிந்துபோன சுடர் அப்பிக்கிடந்தது. ஒளியூட்ட முயன்றபோதெல்லாம் நினைவுகள் புகைந்தெழுந்து அதை அணைத்தன. உள்ளே இருளும் புறத்தில் பொய்யொளியுமாக அவள் வளைய வந்தது மூர்த்திக்குப் புரியவில்லை; ரமேஷுக்கும் தெரியவில்லை. மீண்டும் செண்பகப் பூச்சூட அவள் மனம் ஒப்ப வில்லை.

ஆனால் குழந்தைகள் உணர்ந்து கொண்டார்கள்.

"அம்மா இப்பல்லாம் சிரிக்கவே மாட்டேன்கறியே..." நித்யா புகார் செய்தாள்.

"இல்லியே... எப்பவும் போல சிரிச்சுக்கிட்டுத்தானே இருக்கேன்..."

"ஊஹூம்! நீ சிரிக்கறே. ஆனா உன் கண்ணு சிரிக்கவே மாட்டேன்றது..."- ஆணி அறைந்தாற்போல் இருந்தது சத்யா சொன்னபோது.

"இல்லேடா கண்ணு... அம்மாவுக்கு வயசாயிட்டு வரதில்ல... சீக்கிரம் டயர்ட் ஆயிடுது..." சமாளித்தாள்.

இன்று... அதே சத்யா தன் கண்ணுக்குள் புதிர்களைப் பூட்டி வைத்துக் கொண்டு இவளுக்குச் சவால் பார்வை விடுக்கிறான். சட்டைப் பையில் செண்பகம் வேறு... யார் கொடுத்திருப்பார்கள்... சிநேகிதி? காதலி? கோயில் பிரசாதம்? அல்லது வெறும் பிரமையா?

மறுநாள் துவைக்கப் போடப்பட்டிருந்த அவன் சட்டைப் பையைச் சோதித்துப் பார்த்தாள் நளினி. காலியாகத்தான் இருந்தது. மெதுவாக பாக்கெட்டை உள்-வெளியாகப் பிரித்து முகர்ந்து பார்த்தாள்... செண்பகப்பூ வாசம் திட்டவட்டமாக அதில் கமழ்ந்தது.

(மணம் வீசும்)



பேய் வீடு!

"மொத்தம் எடுக்கப்பட்ட படத்தின் நீளம் சுமார் 50,000 அடிகள் தொடர்ச்சியான படமாக எடிட் செய்யப்பட்டபோது சுமார் 12,000 அடிகள். இப்படத்தை எடுக்க எடுத்துக் கொண்ட காலம் மூன்று வருடங்கள். பிரயாண தூரம் சுமார் ஒரு லட்சம் மைல்கள். பயன்படுத்தப்பட்ட கேமிராக்கள் 100.

- 'மகாத்மா காந்தி'
சினிமாவை முதலில் எடுத்த ஏ.கே.செட்டியார்.

படம் :
பூஹர் சரவணன்



சினிமாவுக்குப் போகலாம் வாங்க!

19 **கு.ஞானசம்பந்தன்**

'பட்டிக்காடா பட்டணமா' ஷூட்டிங்கின்போது அப்படத்தின் கதாநாயகி ஜெயலலிதா நடிப்புக்கு இடையில் ஓய்வு நேரங்களில் தனியே அமர்ந்து ஆங்கிலப் புத்தகங்களைப் படித்துக் கொண்டே இருப்பார்.

கிராமத்துப் பெண்கள் அவரது அழகையும் அவர் படித்துக்கொண்டே இருப்பதையும் வியந்து வியந்து பார்த்துக் கொண்டே செல்வார்கள்.

அந்த வாரம் முழுவதும் ஷூட்டிங் தான். அதிலும் அந்தக் காலத்தில் புகழ்பெற்ற இன்றைக்கும் ரசிக்கத்தக்க பாடலாக விளங்கும் 'அடி என்னடி ராக்கம்மா பல்லாக்கு நெளிப்பு' என்ற பாடல் காட்சி வைகையாற்றில் அணைப்பட்டி கிராமத்தில் எடுக்கப்பட்டபோது எட்டு ஊர் ஜனங்களும் அன்ன ஆகாரமின்றி அதனைப் பார்த்து ரசித்த காட்சி பெரிய வரலாற்று நிகழ்ச்சி.

அந்தப் படம் தமிழ்த் திரையுலகில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்று 'சில்வர் ஜூபிலி' கண்ட படம்.

அந்தப் படத்தின் வெற்றிக்கு நடிகர்களின் நடிப்பு, கதை, இசை, டைரக்ஷன் என்று பல காரணங்கள் கூறப்பட்டாலும், எங்கள் ஊரில் எடுத்ததால்தான் என்று எங்கள் ஊர் மக்களும், நாங்கள் சென்று ஷூட்டிங் பார்த்ததும் ஒரு காரணம் என்று நானும் நண்பர்களும் சொல்லிக் கொண்டோம்.

ஷூட்டிங் முடிந்து படப்பிடிப்புக் குழுவினர் ஊர் செல்லுமுன் டி.ஆர். மகாலிங்கம் வீட்டில் பெரிய விருந்தும் நடைபெற்றது. சினிமா மணியைப் பாராட்டாதவர்களே இல்லை எனலாம்.

'மணி பேசாம நீ இவங்களோடயே மெட்ராஸ் போயிடேன். அப்

படியே சினிமா நடிகர் ஆயிடலாம்' என்று என்னைப் போன்ற பலரும் மணியிடம் சொன்னார்கள். அவன் வழக்கப்படி அனைவர் சொன்னதையும் சிரித்தபடி ஏற்றுக்கொண்டான். ஆனால் போகவில்லை.

சில நாட்கள் கழித்து அனைவரும் ஆற்றங்கரைத் தோப்பில் கூடியபோது "நாமெல்லாம் கூடி நாடகம் போடலாம்" என்று சினிமாமணி சொன்னான். நான் கதை, வசனம், நாங்கள் தான் நடிகர்கள், சினிமாமணி இயக்குநர், என்பது முடிவாயிற்று.

நாடகக் கூத்து ஆரம்பமாயிற்று.

சினிமாமணி நாமெல்லாம் நாடகம் முதலில் போடவேண்டும் என்று சொன்னதோடு அதற்காக எங்களையும் தயார் செய்யத் தொடங்கினான்.

நாங்கள் அன்று தொடங்கி எங்கள் ஊரைச் சுற்றியுள்ள கிராமத் திருவிழாக்களில் நடைபெறும் நாடகங்களைத் தொடர்ந்து பார்ப்பது என்றும், அந்த நாடகக் கலைஞர்களைப் பார்த்துப் பழகி நடிப்பைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் முடிவாயிற்று.

முழுப்பரீட்சை முடிந்த கையோடு ஒன்றரை மாதம் லீவும் விட்டு விட்டார்கள். இடையில் பள்ளிக்கூடத்துக்கு ஒரு நாள் மட்டும் வந்து பாஸா- பெயிலா? என்று மட்டும் பார்க்க வந்தால் போதும். அதெல்லாம் ஒரு பொற்காலம்.

இந்தக் காலத்தை நினைத்தால்தான் பயமாக இருக்கிறது. எப்போதும் பிள்ளைகள் படித்துக்கொண்டே இருக்கிறார்கள். காலையில் படிப்பு, மாலையில் படிப்பு, டியூசனில் படிப்பு, சனி, ஞாயிறு ஸ்பெஷல்கிளாஸ் படிப்பு, லீவு விட்டால் கூட அடுத்த வருஷத்திற்கான படிப்பு. பத்தாததற்கு விடுமுறையில் செல்லும் குழந்தைகளைப் பார்த்து டீச்சர்கள், "லீவுல சும்மா இருக்கலாம்னு நினைச்சுடாதே. இந்தக் கேள்வித்தாள்ல இருக்கிற அத்தனை கேள்விக்கும் மூணு மூணு தடவை விடை எழுதிட்டு வரணும் தெரியுதா" என்று கர்ஜித்து அனுப்புகிறார்கள்.

நல்லவேளை நான் இப்போது சிறுவனும் இல்லை, பள்ளிக்கூடமும் போக வேண்டியதில்லை. அதுமட்டுமில்லை அந்தக் காலத்தில் லீவு விட்டால் பிள்ளைகள் பாட்டி வீட்டுக்கு, தாத்தா ஊருக்கு என்று சந்தோஷமாகக் கிளம்பி விடுவார்கள்.


புதிய புதிய விளையாட்டுகளை எல்லாம் அந்தக் காலத்துக் குழந்தைகள் பருவகாலங்களுக்கு ஏற்ப விளையாடுவார்கள். நானே விளையாடியிருக்கிறேன்.

காற்று பலமாக வீசத் தொடங்கும் காலத்தில் காற்றாடி செய்வோம். காற்றாடி என்பது 'பட்டம்' என்று நகரத்தில் உள்ளவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதில்லை. பட்டம் என்பது காகிதத்தில் செய்து நூலில் கட்டிப் பறக்கவிடுவது. காற்றாடி என்பது பச்சைப் பனை ஓலை சற்றே காய்ந்த பிறகு எடுத்து வந்து அதை + (பிளஸ்) வடிவத்தில் அதிலேயே சேர்த்து, கூர்மையான நீண்ட முள்ளைக் கையில் குத்தி விடாதபடி கொண்டு வந்து, அதில் பனை ஓலை காற்றாடியைக் குத்திக் கையில் பிடித்துக்கொண்டு எதிர்காற்றில்

" 'நான் அரசியலுக்கு வந்ததே ஒரு விபத்து தான்'னு தலைவர் பேசறாரே?"

"ஆனா... அந்த விபத்தால அதிகம் பாதிக்கப்பட்டது மக்கள்தானே?"

- சி.பி.செந்தில்குமார்



ஓடினால் பனை ஓலைக் காற்றாடி திருமாலின் சக்கரம் போலச் சுற்றும்.

சீசன் மாறினால் பம்பரக் குத்து தொடங்கும். எல்லோரும் பையில் பம்பரம் வைத்திருப்போம். நான் சில சமயம் தலையணைக்கு அடியில் அதை வைத்துத்தான் தூங்குவேன்.

ஆற்றங்கரையில் மாலை நேரத்திலும், இரவு நிலாக் காலத்திலும் கபடி என்ற சடுகுடு விளையாட்டு மிக அருமையாக நடைபெறும்.

இரவு நேரங்களில் ஒளிந்து கொள்வோரைக் கண்டுபிடிக்கும் விளையாட்டு நடக்கும். அதற்குத் 'திருடன் போலீஸ்' விளையாட்டு என்று பெயர். அதிலும் ஒளிந்து கொள்வதற்கு கிராமங்களைப் போல் இடங்கள் எங்கே இருக்கின்றன? இடிந்துபோன வீடுகள், (பேய் வீடுகள் என்று பெயர். அதில் போய் ஒளியக் கூடாது என்பது விளையாட்டில் ஒரு விதி) வைக்கோல் படப்புகள், மரங்கள், மாட்டுக் கொட்டகைகள், கொல்லைப் புறங்கள், மொட்டை மாடிகள் இப்படி எங்கும் ஓடலாம் ஒளியலாம்.



"அரசியலுக்கு வர்றதுக்கு முன்னாடி தலைவர் பெயிண்டரா இருந்தாராம்..."

"அதாவது, அப்ப வெள்ளையடிச்சவர்... இப்ப கொள்ளையடிக்கிறார்..."

- ஜே. தனலட்சுமி

ஒருநாள் நாங்கள் ஒளிந்து விளையாடத் தீர்மானித்தோம். தேடி வருபவன் ஒருவன்தான் வரவேண்டும். ஓடி ஒளிபவர்கள் ஒன்பது பேருக்குமேலே இருக்கலாம். தேடி வருபவன் தெரு முக்கிலிருக்கும் சின்ன கிருஷ்ணன் கோயிலை ஒரு சுற்றிச் சுற்றி வரவேண்டும். அதற்குள் நாங்கள் மாயமாய் மறைந்து ஒளிந்து விடுவோம்.

நானும், சிவத்தக்காளையும், சிவனாண்டியும், உயிரை வெறுத்து ஓடி ஒரு வீட்டின் கொல்லைப்புறத்தில் இருந்த வைக்கோல் படப்பில் ஒளிந்துகொண்டு வைக்கோலை அள்ளி, அள்ளி மேலே போட்டுக் கொண்டோம். நாங்கள் எல்லோரையும் பார்க்க முடியும்; எங்களை யாரும் பார்க்க முடியாது.

எங்களைத் தேடிவந்த 'போலீசு' ராசப்பன், நேரே ஓடிவந்து சற்று நேரம் இருட்டில் எங்களைப் பார்க்க முடியாமல் நின்றான். யோசித்தான். அதற்குள் என்னோடு வைக் கோல் படப்பில் ஒளிந்திருந்த சிவத்தக்காளை 'ஊஊஊ' என்று தெரு நாய் போல ஊளையிட்டான். அந்தச் சத்தத்தைக் கேட்ட ராசப்பன் கிடுகிடுவென நடுங்கி ஒரே ஓட்டமாக ஓடிப் போய்விட்டான்.

எங்களுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. எங்களை யாரும் கண்டுபிடிக்கவில்லை என்றால் நாங்கள்தான் ஜெயித்தவர்கள்... என்று நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தபோது வந்தது வினை.

இரண்டு இரண்டு நாய்களாகத் தெரு நாய்கள் பல, நாங்கள் ஒளிந்திருந்த வைக்கோல் படப்பை நோக்கி அணிவகுத்து வரத் தொடங்கின. இதையெல்லாம் பார்க்காத சிவத்தக்காளை மேலும் மேலும் ஆனந்தமாக ஊளையிடத் தொடங்கினான்.

அமைதியாக வந்த பத்துக்கும் மேற்பட்ட நாய்கள் ஆவேசமாக எங்கள் வைக்கோல் படப்பைச் சுற்றிச் சுற்றி வந்து ஊரே அதிரும்படி குலைக்கத் தொடங்கின.

(ரீல் சுற்றும்)

நல்ல பொண்டாட்டி!

கிருஷ்ணா

அலுவலகத்திலிருந்து திரும்பியிருந்த என்னவரிடம் காபியை நீட்டினேன்.

"ஹூம்! இதுதான் குறைச்சலாக்கும்" என்றவரை ஆச்சர்யமாகப் பார்த்தேன்.

காபியில் கண்விழித்து, குளிக்கும் முன், குளித்தபின், அலுவலகம் புறப்படும் முன், அலுவலகம் சென்றவுடன், மதிய சாப்பாட்டுக்குமுன், பின் என்று தொடர்ந்து, இரவு படுக்கப் போகும் வரை காபியைக் குடிக்கும் 'பெருங்குடிகாரர்' இவர்.

எங்களின் எட்டு வயது மகள், டீ.வியைப் போட, விஜய்யும், அஸினும் ஆடினார்கள்.

"அணைச்சுத் தொலை சனியனை. மனுஷன் மூடு அவுட்டாகியிருக்கும் போது என்ன வேண்டிக்கிடக்கு தேன்கடி டான்ஸ்?" என்று கத்தினார்.

தினசரி பத்து தடவையாவது மூட் அவுட் ஆகும் மகானுபாவன் இவர்.

செருப்பு அறுந்துவிட்டால் போச்சு, சூடான காபி நாக்கைச் சுட்டுவிட்டால் போச்சு, அலுவலகம் கிளம்பும்போது மின்சாரம் தடைப்பட்டால் போச்சு, வெளியே கிளம்பும்போது மழை வந்து விட்டாலும் போச்சு, இவர் ஆசைப்பட்ட கத்தரிக்காய் கறி சரியாக வேகாவிட்டால் போச்சு... எங்களுக்கு, இவரின் மூட் அவுட் இப்போதெல்லாம் சிரிப்பான விஷயமாகிப் போச்சு.

தர்மபத்தினியின் கடமை உணர்வு இருக்கிறதே!

"ஏன், என்னாச்சு?" என்று கேட்டேன்.

"இரத்தக் கொதிப்பாம்! உடம்பு எடை வேற ஜாஸ்தியாம். கொழுப்பு வேற அதிகமாம்."

"உங்களுக்கா?"

"கிண்டலா? அலுவலகத்திலே மெடிக்கல் செக்கப் செஞ்சாங்க. தினசரி காலையிலே நடக்கணுமாம்."

"இதை டாக்டர் சொல்லணுமாக்கும்" என்றேன் முணுமுணுப்பாய்.

"என்ன?" என்றார்.

"பாவமே, உங்களுக்குப் போய் வரணு மான்னேன்."

வாரத்தில் இரண்டு நாள், டிபனாய் வெண்பொங்கல்! நெய்யும், முந்திரியும் மிதக்க வேண்டும்! மதியச் சாப்பாட்டில் வறுத்த, பொரித்த ஐயிட்டங்கள் இல்லா விட்டால் உணவு உள்ளே செல்லாது. அடை டிபன் பிரதி ஞாயிறு கட்டாயம். நெய், வெல்ல அடை, வெண்ணெய் தடவிய அடை, கட்டித் தயிர், மிளகாய்ப் பொடி அடை என்று



ஊர்வலமாய் உள்ளே செல்லும். இப்படிச் சாப்பிட்டால், கொழுப்பும், இரத்தக் கொதிப்பும் உடம்புக்குள் கும் மாளமடிக்காமல் வேறு என்ன செய்யும்.

இவரே சாப்பாட்டு ராமன். இதில் தாய்ப்பாசம் சேர்ந்து கொண்டால் கேட் கவே வேண்டாம். நாற்பத்தைந்து வய

தாகியும், குழந்தை என்று இவரைச் சீராட்டுவார் மாமியார்.

"குழந்தை உட்கார்ந்தே வேலை செய்ய றான். உடம்பு சூடாகியிருக்கும். இன்னும் ரெண்டு கரண்டி(!) நெய்விடு."

வாரம் ஒரு கிலோ வெண்ணெய் வாங்கும் வீடு எங்கள் வீடாகத்தானி ருக்கும். இத்தனைக்கும் வீட்டில் நாலே பேர்தான்.

கிருஷ்ணர் கூட பால பருவத்தில் மட்டுமே வெண்ணெய் தின்றாரே தவிர, வளர்ந்தபின்பு வெண்ணெய் உண்டதாகப் புராணத்தில் சொல்லவில்லை! ஆனால் இவர் இன்னமும் பாலகிருஷ்ணர்தான்.

"அலாரம் வை! காலையிலே நாலரைக்கு எழுந்துக்கணும். நடக்கப் போறேன்" என்றார்.

காலையில் அலாரம் அடித்தபோது என் தூக்கம் கெட்டதுதான் மிச்சம்.

''ரொம்பத் தூக்கமாய் வருது. ஒரு அரைமணிநேரம், இன்னும் கொஞ்ச நேரம்'' என்று சொல்லிச் சொல்லி ஏழு மணிக்குத்தான் கண் விழித்தார்.

எழுந்ததுமே மூட் அவுட்! நடைப் பயிற்சி செய்யாததால்!

மாலையில் கை நிறையப் பொருட்களுடன் வந்தார்.

நடப்பதற்குத் தோதாய் பெர்முடா டிராயர், டி-ஷர்ட், ஸ்பைக் ஷூ என்று தடபுடல் பண்ணியதில் கணிசமாய் பணம் அவுட்.

மாதக் கடைசி என்று பருப்பிலும், எண்ணெயிலும் சிக்கனப்படுத்திய எனக்கு மூக் குடைப்பு.



-ஆர்

அடுத்த நாள் காலையிலும் ஷுவும், பெர்முடாவும், அவருடன் அறையின் மூலையில் தூங்கிக் கொண்டிருந்தன.

"அது... நாளைக்குப் பாரேன்" என்று சூளுரைத்தார்.

"சாப்பாட்டுல தேங்காய் போடாதே. எண்ணெய் சேர்க்காதே. சாதம் கொஞ்சமாய் வை. காய்கறியை வெறுமே வேக வைச்சு, உப்புப் போடு அளவாய். இனிமேல் இரவில் இரண்டே இரண்டு சப்பாத்திதான்" என்று வீரப்பிரகடனம் செய்தார்.

மாசக் கடைசியாதலால், செலவு மிச்சம் என்று நானும் பதிசொல் தட்டாமல் சமைத்தேன்.

மதியம் மூன்று மணிக்கு வீட்டுக்கு வந்த என் தம்பி கேட்டான்.

"என்னக்கா, அத்திம்பேருக்கு லஞ்ச் தரலியா கேரியரிலே?"

"கொடுத்தேனே! ஏண்டா?"

"வஸந்த பவன் ஹோட்டலில் ஸ்பெஷல் சாப்பாட்டை வளைச்சுக் கட்டிக்கிட்டிருந்தாரேன்னு கேட்டேன்" என்றான்.

மாலையில் வீடு திரும்பியதும் வஸந்த பவன் கதையைக் கேட்டேன் அவரிடம்.

"நாக்கு செத்துப் போச்சு. ஒரு மாறுதலுக்கு" என்று வழிந்தார்.

பத்தியச் சாப்பாட்டின் உயிர் இரண்டே நாளில் முடிந்து போனது.

"டாக்டர்களுக்கு என்னடா வேலை? ஆயிரம் சொல்லுவாங்க! நம்ம குடும்பத்துலேயே எல்லோருக்கும் கொஞ்சம் இரட்டை நாடி சரீரம்தான். அதுலேயும் நீ உன் மாமாவைக் கொண்டிருக்கே ஜாடையிலேயும் உருவத்திலேயும், நாக்குக்குப் பிடிச்சதைச் சாப்பிடு. அதுக்குத்தானே சம்பாதிக்கறே" என்று மாமியார் தூபம் போட, முகம் மலர்ந்தார் அவர்.

வீட்டில் மீண்டும் நெய் மிதக்கும் வெண் பொங்கலும், வெண்ணெயில் வழுக்கும் அடையும் சமையலில் வலுப் பெற்றன.


அடுத்த வாரமே இவர் திடீரென தலைசுற்றி விழ, அருகிலிருந்த ஆஸ்பத்திரிக்கு அவரைக் கூட்டிக் கொண்டு ஓடினோம்.

"இரத்தக் கொதிப்பு, அதிகக் கொழுப்பு. தினசரி உடற்பயிற்சியும் உணவுக்கட்டுப்பாடும் ரொம்ப அவசியம்" என்றார் டாக்டர்.

"பொண்டாட்டிக்குத்தான் பொறுப்பு வேணும். சாப்பிடற வயசு, அவன் அப்படித்தான் ஆசைப்படுவான். நீதான் அவனைக் கொஞ்சி, கெஞ்சி, அதட்டி, தினசரி உடற்பயிற்சி செய்ய வைக்கணும். அளவாய்ச் சாப்பாடு போடணும் ஹும்! அவனுக்கு நல்ல பொண்டாட்டி வாய்க்கலியே" என்று மாமியார் அலுத்துக் கொண்டாள். ○

"பெண்ணுக்கு செல்போன் கம்பெனியில் வேலை!"

"இருக்கட்டுமே. அதுக்காக பாடச் சொன்னா இப்படியா விதவிதமா ரிங்டோனை ஹம்மிங் பண்றது?"



"கண்டக்டர்! இந்த பஸ் நேர்வழியா போகும்னு சொன்னீங்க. ஆனால் சுத்திச் சுத்திப் போகுதே!"

"உயிரை வாங்காதேய்யா. இது ஊட்டிக்குப் போற பஸ். சுத்திச் சுத்திதான் போகும்!"

- ஞா.ஞானமுத்து



"சாமியார் அருள்வாக்கு சொல்றப்ப பவர்கட் ஆயிடுச்சு!"

"அப்ப இருள்வாக்குனு சொல்லு!"




"மன்னர் ஏன் கிழக்குப் பக்கமே தலைவச்சுப் படுக்க மாட்டேங்கறார்?"

"கிழக்குப் பக்கம் போர் முரசு இருக்குதே!"

- அம்பை தேவா



இயற்கை மின்சாரம்!



1959-ல் ஃபேய்ன்மன் ஒரு விருந்தின் இறுதியில் பேசும்போது 'சிறியது கேட்கின்' என்பதற்குப் பதிலாக எந்த அளவுக்கு நுட்பமாகப் பொருள்களைத் தயாரிக்க முடியும் என்பது பற்றிப் பேசினார். இயற்பியல் விதிகள் அணு அணுவாக ஒரு பொருளை வடிவமைப்பதை தடைசெய்யவில்லை என்றார் அவர். அதைச் சொன்ன காலத்தில் கால்குலேட்டர்கள் அளவில் சுருங்கி பாக்கெட்டுக்குள் போகத் துவங்கியிருந்தன. அப்போது அவர் சொன்னது ஓர் அதீதமான, ஏன் அபத்தமான கருத்தாகக்கூட இருந்தது. அதன்பின் டெக்னாலஜி வளர்ந்து அவர் சொன்னது இன்று சாத்தியமாகியிருப்பது ஃபேய்ன்மனின் தீர்க்க தரிசனத்தையும் மேதைமையையும் காட்டுகிறது.

மாலிக்யூலர் மெஷின்கள் என்னும் கருவிகளை வைத்துக்கொண்டு அணு அணுவாக ஒரு சாதனத்தை வளர்த்து ஆளாக்க முடியும். மாலிக்யூலர் மெஷின்கள் மற்ற பொருள்களைத் தயாரிப்பதுடன் தன்னையே கூடத் தயாரித்துக் கொள்ள முடியும். பெங்களூரில் இருக்கும் எச்.எம்.டி. தொழிற்சாலையில் லேத் மில்லிங் மெஷின், ட்ரில் போன்ற இயந்திரங்களை உற்பத்தி செய்ய அதே லேத்களையும் ட்ரில்களையும் பயன்படுத்துகிறார்கள். அதுபோல மாலிக்யூலர் மெஷின்கள் தம்மைத் தாமே உருவாக்கிக்கொள்ள முடியும். படிப்படியாகக் கீழிருந்து மேல் 'பாட்டம் அப்' முறையில் எதை வேண்டுமானாலும் சிறுகச் சிறுக உற்பத்தி செய்யலாம். வீடு கட்டுவதுபோல் அதற்கான ப்ளூப்ரிண்ட் பாதை என்ன? எதற்குப் பின் எது? இடையில் என்ன என்ன கருவிகள் தேவைப்படும்? அந்தக் கருவிகளை எப்படிப் பெற வேண்டும் என்ற விவரங்கள் தெரிந்தால் ஒரு அணுவிலிருந்து ஆரம்பித்து ஒரு கம்ப்யூட்டர் சில்லு வரை செய்ய முடியும். இந்தத் தொழில்நுட்பத்துக்கு முன்னுதாரணம் உயிரணுக்கள்தான். நாமெல்லாம் அப்படித்தானே உண்டானோம். ஒற்றை க்ரோமோசோம்களில் பொதிந்திருக்கும் வம்ச செய்தியைப் 'படித்து'த் தன்னைத் தானே இரட்டிப்பாக்கி, இரண்டு நான்காகி நான்கு எட்டாகி, எங்கெங்கே யார் யார் எப்படியெப்படி பிரிந்து போய் வேறு என்னென்னவாக வேண்டும் என்ற செய்தியையும் படித்து அதன்படி நிகழ்ந்து முழு மனிதனாகிறோம். இயற்கை செய்ததை, செய்வதை நாம் செய்ய முடியாதா?

தண்ணீர் போன்ற திரவப் பொருளோ, ஆக்சிஜன் போன்ற வாயுப் பொருளோ... உன்னிப்பாகப் பார்த்தால் நிம்மதியில்லாமல் அலையும் அணுக்கூட்டங்கள் தெரியும். அவற்றின் அமைப்பில் ஒழுங்கு இருக்காது. இரும்பு போன்ற திடப்பொருளின் அணு அமைப்பில் கொஞ்சம் ஒழுங்கு இருக்கும். இலேசில் அவற்றை ஊதித் தள்ளவோ அல்லது பாத்திரத்தில் கொட்டவோ முடியாது. அவற்றின் அணு அமைப்பைக் கலைக்க நிறைய சக்தி வேண்டும். நானோ டெக்னாலஜி சாதனங்கள்

வாயு அல்லது திரவ வடிவில் இல்லாமல் அதே சமயம் திடப் பொருள்போல சாஸ்வதம் இல்லாமல்





* படம் : ஸ்ரீஹரி



குறிப்பிட்ட வரிசையில் மாறக்கூடிய திடப்பொருள்கள். சத்தியமாகப் புரியவில்லையல்லவா? ஓர் உதாரணத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம். ஒரு மைதானத்தில் பள்ளிப் பிள்ளைகள் வரிசையாக நட்சத்திர வடிவிலோ, சதுர வடிவிலோ நின்றுகொண்டு தேகப் பயிற்சிகள் செய்து காட்டுவார்களே, அதை எண்ணிப் பாருங்கள். முதலில் ஒரு விசில் ஊதியதும் சட்டென்று அனைவரும் இடத்தை அல்லது கை நீட்டலை மாற்றிக்கொண்டு வேறு வடிவமாகிவிடுவார்கள். அடுத்த விசிலில் இன்னொரு வடிவம். எதற்குப் பின் எந்த வடிவம் என்பது முன்பே தீர்மானித்து ஒத்திகை பார்க்கப்பட்டது. இதுபோல்தான் நானோ டெக்னாலஜியில் தயாரிப்பு முறை அணு அளவில் மாற்றங்கள் நிகழ்த்தப்படுகின்றன. முன்பே தீர்மானித்த வரிசையில் படிப் படியாக வடிவம் மாறி இறுதி வடிவத்துக்கு வரும் விரயமில்லாத மாறுதல்களுக்கு உதாரணம் எறும்புப் புற்றுகள். ஒரு பொருளை அணு அணுவாக சீராக உற்பத்தி செய்ய முடியும் சாத்தியம் ஏற்பட்டால் கழிவுப் பொருள்கள் இருக்காது. தொழிற்சாலைகளில் விஷ வாயுக்களை காற்றில் கலக்காமல் செயல்படுத்தலாம். விரயமான செயல்கள் இல்லாததால் ஆற்றல் அதிகரிக்கும். உதாரணமாக சோலார் செல்கள் சூரிய ஒளியை மின்சாரமாக நேரடியாக மாற்றக் கூடியவை. சிலிக்கான் என்னும் தனிமத்தில் பாஸ்பரஸ், போரான் போன்ற சேர்க்கைகளைக் கட்டுப்படுத்திக் கலந்து செய்யப்படும் 'ஃபோட்டோவோல்ட்டேய்க்' ஒளிமின் செல்களின் மேல் சூரிய வெளிச்சம் படும்போது எலக்ட்ரான்கள் விடுபட்டு அதனூடே மின்சாரம் பாயும். சூரிய வெளிச்சம் என்பது நமக்கு இயற்கை இலவசமாகத் தருவது. அதுவும் இந்

சுஜாதா



"எனக்கு வடிச்சுக் கொட்ட முடியாதுன்னு என் மனைவி சொல்லிட்டா!"

"அப்புறம்!"

"குக்கர் வாங்கிக் குடுத்துட்டேன்."

- லீலாஜி



"கனவு வர்றது சகஜம்தானே!"

"கனவு வர்றதுக்கு ஒரு வாரத்துக்கு முன்னாடியே, 'உங்கள் மனத்திரையில் முதன் முதலாக...'ன்னு விளம்பரமெல்லாம் வருது டாக்டர்!"

- ஞா.ஞானமுத்து

" 'காதலுக்காக உயிரையே தருவேன்'னு என் காதலன் சொல்லியிருக்கான்டி..."

"அப்போ உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதா முடிவு பண்ணிட்டான்னு சொல்லு...."

- கே.ஆனந்த்



தியாவில் அபரிமிதமாகக் கிடைப்பது. கோடைகாலப் பகல்வேளையில் ஒரு சதுர மீட்டர் பரப்பில் படும் சூரிய ஒளி ஆயிரம் வாட்டுக்குச் சமம். இதை நேரடியாக மின்சாரமாக மாற்ற முடிந்தால் அதைவிட சுத்தமான, எளிதான, சாஸ்வதமான மின் உற்பத்தி இருக்க முடியாது.

நமக்கு மின்சாரம் கிடைக்கும் மற்ற முறைகளான ஹைட்ரோ எலக்ட்ரிக், தர்மல் எல்லாமே மறைமுகமாக சூரிய சக்தியைத்தான் மின்சக்தியாக மாற்றுகின்றன. சோலார் செல்கள்தான் நேரடியாக அதைச் செய்யக் கூடியவை. எனினும் ஒரு சிக்கல், இதன் ஆற்றல் (efficiency) குறைவு. ஒரு சோலார் செல்லின் மீது படும் எல்லா வெளிச்சமும் மின்சாரமாக மாறுவதில்லை. மொத்தத்தில் பதினைந்து விழுக்காடுதான் மாற்றப்படுகிறது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. சூரிய வெளிச்சத்தில் பல நிறங்கள் கலந்திருப்பது ஒரு காரணம். சோலார் செல்லினூடே மின்சாரத்தைக் கடத்தும்போது ஏற்படும் விரயங்கள் மற்றொரு காரணம். இருப்பினும் சூரிய வெளிச்சம் இலவசமாகக் கிடைப்பதால் இந்த ஆற்றல் குறைவை அதிகம் பொருட்படுத்தத் தேவையில்லை என்று தோன்றலாம். இன்றைய விலைவாசியில் ஒரு வீட்டுக்குத் தேவையான மின்சாரத்தை முழுவதுமாக சூரிய சக்தியை மாற்றும் சோலார் பானல்களை கூரைமேல் பொருத்தி ராத்திரி சப்ளைக்கு பாட்டரிகளை சார்ஜ் பண்ணி முழுவதும் செயல்படுத்த செலவு அதிகமாகும். ஒரு யூனிட் மின்சாரத்துக்கு 500 ரூபாய் ஆகும். சோலார் செல்களைத் தயாரிப்பதில் ஏற்படும் செலவு குறைந்து அதன் ஆற்றல் அதிகமாகும்போது சூரிய வெளிச்சம், நம் மின் தேவைகளை நிரப்பக் கட்டுபடியாகும். அதற்கு நானோ டெக்னாலஜி முறைகள் பயன்படும்.

(விந்தை தொடரும்)

"கோயிலுக்குப் போயிட்டு குங்குமத்தோட வருவேன்னு பார்த்தா கையில புத்தகங்களோடு வர்ற?" என்று கேட்டபடியே ஸ்ரேயாவிடமிருந்து புத்தகங்களை வாங்கிப் பார்வையிட்டான் வஸந்த்.

"நாலேகால் டாலர், முடிவிலும் ஒன்று தொடரலாம், ஏழாம் சுவை... மூணுமே ஜெயந்தி சங்கரோடதுதானா... ஆமா உன் தோழியா அவங்க?"

"இல்லடா, கோயிலுக்கு என் ஃப்ரெண்ட் ஸ்வேதா வந்திருந்தா. அவளுக்கு யாரோ கொடுத்தாங்களாம். படிக்கலாம்னு வாங்கிட்டு வந்துட்டேன்."

"ஸ்வேதா படிச்சாங்களாமா? எப்படியிருக்காம்?"

"ஜெயந்தி சங்கர் எல்லா பத்திரிகைகள்லயும் பரவலா எழுதிட்டு வர்றவங்க. சிங்கப்பூர்வாசி. நாலேகால் டாலர், சிறுகதைத் தொகுப்பு. ஒவ்வொரு சிறுகதையும் ஒரு அனுபவம். அவங்களோட கதை சொல்ற முறை மிக நுட்பமா இருக்கு. பிற எழுத்தாளர்கள்லருந்து இதுதான் அவங்கள வித்தியாசப்படுத்திக் காட்டுது. சிங்கப்பூரோட இன்னொரு முகத்த கதைகள் சொல்லுது. 'ஏழாம் சுவை' கட்டுரைங்க... ஆவிகள் புசிக்குமா, சந்திர ஆண்டு, மலேசிய மகுடம்னு விதவித டாபிக்ல எழுதியிருக்காங்க. சுவையா இருக்கு. 'முடிவிலும் ஒன்று தொடரலாம்' அவங்களோட குறுநாவல்கள் தொகுப்பு. மனோரீதியான சிக்கலை அடிப்படையா கொண்ட 'மு.ஒ.தொ.' குறுநாவல் சிறப்பா இருக்கு. மற்ற குறுநாவல்களும் வெவ்வேறு அனுபவங்கள வாசகர்களுக்குத் தருது'ன்னு ஸ்வேதா சொன்னா. அதான் படிக்கப் பிடுங்கிட்டு வந்துட்டேன்."

"எங்கிட்டகூட ஒரு புக் இருக்கு ஸ்ரேயா, 'அட்லாண்டிக்குக்கு அப்பால்... பி.கே.சிவகுமாருங்கறவரு எழுதின கட்டுரைத் தொகுப்பு... இலக்கியம், சமூகம், கவிதை, அமெரிக்கான்னு பல விஷயங்கள் பத்தி எழுதியிருக்கார். நேரிடையா, மனசுக்குச் சரின்னு பட்டதை அப்பட்டமா போட்டு உடைச்சிருக்குற அவரோட நேர்மைக்கு சல்யூட் பண்ணலாம்."

"சரி சரி... ரொம்ப நேரமா பேசிட்டிருக்கோம். நடை சாத்தப்போறாங்களாம் கிளம்பலாம் வா."



புக் சாட்


நாலேகால் டாலர், மதி நிலையம், 4, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 600 017.

ஏழாம் சுவை, உயிர்மை, 29, சுப்ரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை - 600 018.

முடிவிலும் ஒன்று தொடரலாம், சந்தியா பதிப்பகம், 57, 53வது தெரு, அசோக்நகர், சென்னை - 600 083.

அட்லாண்டிக்குக்கு அப்பால், எனி இந்தியன் பதிப்பகம், 102, சௌத் உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 600 017.





ஆன்மிகத்தில் இரண்டு விஷயங்களைச் சொல்லுவார்கள். ஒன்று சத்தியம். இன்னொன்று ரகசியம். சத்தியம்தான் இந்த உலகில் மிக முக்கியமானது. அதே சமயம் ரகசியத்தையும் நாம் ஒரு போதும் கைவிட்டுவிடக் கூடாது. இடம், பொருள், ஏவல் அறிந்து ரகசியத்தைக் காப்பாற்றவும் தெரிந்துகொள்ள வேண்டும்.

அம்மாவுக்கு கதையொன்று நினைவுக்கு வருகிறது. ஒரு ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார். அவர் மிகவும் நல்ல மனிதர். இறை பக்தி நிரம்பியவர். அவருக்கு பூஜை, தியானம் போன்றவற்றில் ஈடுபடுவதற்கு போதிய நேரம் கிடைக்கவில்லை. அதே நேரம், தான் சம்பாதித்த லாபத்தில் பெரும் பங்கை ஏழைகளுக்குச் செலவிடுவதில் சந்தோஷம் கொண்டார்.



அவரைக் காண வெகு தொலைவிலிருந்து ஒரு ஏழை வந்தான். இரண்டு நாட்களாக அவன் பட்டினி என்பதால் அவனால் நடக்கவே முடியவில்லை. அவனது குடும்பம் பட்டினியில் மிகவும் வாடியது. அவன், இந்த செல்வந்தரைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரிடம் போனால் நிச்சயமாக உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அவரிடம் வந்தான். ஆனால், வெறும் கையுடன் அவரைச் சென்று பார்க்கவும் மிகவும் கஷ்டமாக இருந்தது. தள்ளாடித் தள்ளாடி அவன் நடந்து வரும் வழியில் ஒரு அருவியைக் கண்டான். அதன் அருகில் சென்று அருவி நீரை அள்ளிப் பருகினான். அவனுக்கு அந்த அருவி நீர் தேவாமிர்தமாக இனித்தது.

'ஆஹா! இந்த இனிக்கும் அருவி நீரையே அந்தப் பணக்காரருக்கு நாம் பரிசாகக் கொடுத்தால் என்ன!' என்று நினைத்தான். அங்கே கிடந்த ஒரு மண் பானையில் அருவி நீரைப் பிடித்துக் கொண்டான். பணக்காரரைக் காணப் புறப்பட்டான். பணக்காரரது வீட்டை அடைந்தான். அவரைக் காண வரிசையில் நின்றுகொண்டான். அவனது முறை வந்தது.

"ஐயா! நான் பரம ஏழை. என்னிடம் உங்களுக்குக் கொடுப்பதற்கு எதுவுமில்லை. எனவே நான் வரும் வழியில் இருந்த அருவியின் இனிப்பான நீரை உங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறேன். தயவுசெய்து மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என வேண்டினான்.

பணக்காரர், அந்தப் பானையிலிருந்து கொஞ்சம் தண்ணீரை எடுத்துப் பரு

னார். "ஓ! என்ன அற்புதமான சுவை! தேவாமிர்தத்தையே கொண்டுவந்து கொடுத்துவிட்டீர்கள்! இந்த அருவி நீருக்கு ஈடு இணை வேறு எதுவுமில்லை" என்று சொன்னார். அவருக்குப் பக்கத்தில் இருந்த அவரது வேலைக்காரர்களும் அந்த அமுதம் போன்ற அருவி நீரைப் பருக மிகுந்த ஆர்வம் கொண்டனர். ஆனால் அந்தப் பணக்காரர், அந்தத் தண்ணீர் முழுவதையும் தனக்குப் பக்கத்தி

அந்த அருவி நீர்! யாராவது ஒருவர் இதில் கொஞ்சம் குடியுங்கள்" என்று சொல்லி ஒரு வேலைக்காரரிடம் சிறிதளவு அருவி நீரைக் கொடுத்தார். தண்ணீரை வாங்கிக் குடித்த அந்த வேலைக்காரர், அதை விழுங்காமல் வெளியில் துப்பிவிட்டார். 'நம் முதலாளி அற்புதமான சுவை என்று சொல்லிக் குடித்த தண்ணீரை இவர் குடிக்காமல் துப்பிவிட்டாரே' என்று அனைவருக்கும் குழப்பம் ஏற்பட்டு

6

அன்பெனும் மழையிலே...

என்றென்றும் இன்பம்!

மாதா அமிர்தானந்தமயி

லேயே வைத்துக்கொண்டு, வேறு யாருக்கும் தர மறுத்துவிட்டார்.

அந்த அருவி நீரைக் கொண்டு வந்து கொடுத்த ஏழைக்கு நிறைய தானம் செய்து அனுப்பி வைத்தார். ஏழை மனிதனுக்கோ அளவில்லா மகிழ்ச்சி. சந்தோஷமாக ஊருக்குப் புறப்பட்டார்.

ஏழை அந்த இடத்தை விட்டு அகன்றதும் அவரது வேலைக்காரர்கள், "ஐயா! நீங்கள் தான தருமம் செய்வதில் சந்தோஷப்படுபவர். அப்படிப்பட்ட நீங்களே இந்த அருவி நீரை எங்களுக்குத் தராமல் இருந்தது ஏன் என்று புரியவில்லை" என்று தங்களுடைய சந்தேகத்தை வெளிப்படுத்தினார்கள். அதற்கு அந்தப் பணக்காரர், "நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். இதோ

விட்டது.

முதலாளியே விளக்கம் அளித்தார். "வாயில் வைத்தாலே குமட்டிக்கொண்டு வரும் இந்த அருவி நீர் குடிப்பதற்கு ஏற்றதில்லை. வெகுதூரத்திலிருந்து நடந்து வந்த அந்த ஏழை, பசியால் வாடிய நிலையில் அருவியைப் பார்த்திருக்கிறார். பசியும், தாகமும் முற்றிய நிலையில் இந்தத் தண்ணீரைப் பருகியபோது அவருக்கு அது தேவாமிர்தமாக இருந்திருக்கிறது. என்னிடம் தானம் பெறும்போது, தான் ஏதாவது கொடுக்க வேண்டும் என்கிற அதீத ஆர்வத்தில் அந்தத் தண்ணீரை எனக்குக் கொண்டு வந்திருக்கிறார். அவர் மனம் புண்பட்டுவிடக்கூடாது என்று நான் நினைத்தேன். அவர் மனம் புண்பட்டால், நான் தானமாகத் தரும் எந்தப்

பொருளையும் கைநீட்டி வாங்கிக்கொள்ள அவருக்கு மனம் வராது. அவரை வெறும் கையோடு அனுப்ப நான் விரும்பவில்லை. அதனால்தான் அந்தத் தண்ணீரைப் பாராட்டிவிட்டு, அவருக்குத் தானம் கொடுத்து அனுப்பி வைத்துவிட்டேன். அவர் முன்னிலையில் அந்தத் தண்ணீரை உங்களுக்குக் கொடுத்திருந்தால், இதோ... இவர் செய்ததைப்போல் குடிக்க முடியாமல் துப்பிவிட்டிருப்பீர்கள். அந்த ஏழையின் மனம் புண்பட்டிருக்குமில்லையா?" என்று கேட்டார்.

அந்தப் பணக்காரர் குடிக்க லாயக்கில்லாத தண்ணீரை, தேவாமிர்தமாக இருப்பதாகச் சொன்னது பொய்தான். தன் செய்கையால் மட்டுமில்லை, தன்னுடைய வேலைக்காரர்களது செய்கையாலும் தன்னிடம் தானம் பெறும் ஒருவரது மனம் புண்பட்டுவிடக்கூடாது என்று நினைத்தார். அவர் சொன்ன பொய்யால் யாருக்கும் பாதிப்பு கிடையாது. அதேசமயம், அந்தப் பொய் ஒரு ஏழையின் மனதைக் குளிரவைத்தது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

உடனே, 'அம்மாவே சொல்லிவிட்டார். பொய் சொல்லலாம்' என்று அர்த்தம் செய்து கொள்ளாதீர்கள். மேற்கூறியது போன்றதொரு சூழ்நிலையில் உண்மையினைச் சொல்லாமல் இருப்பது தவறில்லை என்றுதான் சொல்கிறேன்.

ஆன்மிகத்தில் நம்பிக்கை கொண்ட யாரும், சுயலாபத்துக்காக ஒரு போதும் பொய் சொல்லக் கூடாது. நமது வார்த்தைகளாலோ, செயல்களாலோ ஒருவரின் மனம் புண்படும்படி நடந்துகொள்ளக் கூடாது. ஒருவருக்கு நம்மால் சந்தோஷம் தரமுடியவில்லையா? போகட்டும். குறைந்தபட்சம் அவரை வேதனையில் ஆழ்த்தாமலாவது நாம் இருக்க வேண்டும்.

ஒரு மனிதனின் வாழ்வில், ஒருநாளும் மங்காமல், மறையாமல் நிற்பதும் எக்காலமும் ஒளி பரப்புவதும் சந்தோஷம் அளிப்பதும் அன்பு ஒன்றுதான். குழந்தைகளே, அன்புதான் இறைவன்.

(அன்பு பெருகும்)



அ-ம்-மா

நாளுக்கு நாள் சுதாமணியின் இறைபக்தி, குறிப்பாக கிருஷ்ண பக்தி தீவிரமடைந்து கொண்டே வந்தது. கண்ணன் மீது ஏராளமான பாடல்களை இயற்றிப் பாடத் தொடங்கினார். பூஜை அறையிலேயே அதிக நேரம் செலவழித்தார். நினைவிழந்த நிலையில் கண்களிலிருந்து தாரைதாரையாக கண்ணீர் வழியும். மகளுக்கு மனோவியாதியாக இருக்குமோ என்று சந்தேகப்பட்ட பெற்றோர், ஒரு மந்திரவாதியை அழைத்துக்கொண்டு வந்து, மந்திரித்து ஒரு கயிறைக் கட்டினார்கள்.

சில சமயங்களில் சுதாமணிக்கு 'தானே கிருஷ்ணன்' என்ற எண்ணம் வந்துவிடும். பேரானந்தத்தில் திளைத்த நிலையில் நடனம் ஆடுவார். தூங்கினால் கனவில் கண்ணன் வருவதாகக் கூறுவார். நாளடைவில், கண்ணன் சுதாமணியை முழுமையாக ஆக்ரமிக்கத் தொடங்கினார்.

சுதாமணி, தன்னையே கிருஷ்ணனாகப் பாவித்து பக்தர்களுக்கு அருளாசி வழங்க ஆரம்பித்ததையடுத்து, அவரை நாடி ஆசிபெற ஏராளமான பக்தர்கள் வரத் தொடங்கினார்கள். அவரது வீட்டின் மாட்டுத் தொழுவம், சீரமைக்கப்பட்டு பக்தர்கள் கூடுமிடமானது.


- மௌலி

ஓவியனின் கடமை!

"ராஜ்குமார் சார் என்றால் தும்பா இஷ்டா அன்னோரு (அண்ணா) என்று தான் கூப்பிடுவோம். அவர் நடிச்ச பல படங்களுக்கு கட்-அவுட், பேனர் வரைஞ்சிருக்கேன். ரெக்கார்டு ஹிட்டான 'மயூரா' படத்துக்கு பேனர் தயாரிச்ச பெருமை எனக்குண்டு. பல சூப்பர்ஹிட் படங்களைக் கொடுத்த மகா மனிதராயிற்றே, இனி அவர் இடத்தை யாரால் நிரப்ப முடியும்...?" தழுதழுக்கிறார் அறுபத்தேழு வயதான முன்னணி ஓவியரும் பேனர் ஆர்ட்டிஸ்டுமான கே.சின்னப்பா.


மிக ஏழ்மையான குடும்பம் சின்னப்பாவுடையது. ஸ்கூல், காலேஜ் போய் படிக்க வசதியில்லாததால் ஒன்பது வயதிலேயே கட்-அவுட், பேனர் வரைய வந்துவிட்டார். இன்று வரை மூவாயிரத்துக்கும் அதிகமாக பேனர் வரைந்திருக்கிறார். "பேனர் வரைவது எளிதான விஷயமல்ல. ரசிகர்கள் கோபம் கொள்ளாதபடி ஹீரோக்களை வரைந்து தர வேண்டும்" என்று சொல்லும் சின்னப்பாவின் ஓவியக் கண்காட்சி சமீபத்தில் பெங்களூரில் நடைபெற்றது. ஓவியங்களில் பிரதான இடம் பெற்றிருந்தவை கோயில் சிற்பங்கள், யானை, தேர், கோயில் பிரகாரங்கள்.

பலரையும் கவர்ந்த அந்த ஓவியக் கண்காட்சி பற்றிக் கேட்டபோது, "சிற்ப வேலைப்பாடுகளை ஒரு கேன்வாஸில் கொண்டு வருவது எளிதான விஷயமல்ல. 77-லிருந்து கோயில்களை வரைகிறேன். பேலூர் சிற்பங்களை முதன்முதலில் பார்த்தபோது பரவசப்பட்டேன். மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் மாதக் கணக்கில் தங்கி வரைந்திருக்கிறேன்" எனும் சின்னப்பா, "நம் நாட்டின் பொக்கிஷங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடமை ஓவியனுக்கு இருக்கிறதில்லையா?" என்கிறார் அக்கறையுடன்.





• கே. சின்னப்பா





பிரபலமான ஐ.பி.எம். நிறுவனம் தன் நியூயார்க் கிளைக்கு சின்னப்பாவின் ஓவியங்கள் சிலவற்றை வாங்கிச் சென்றுள்ளது. சிட்னியிலிருக்கும் பிரபல ஹோட்டலிலும் இவருடைய ஓவியங்களைக் காணலாம்.

"நான் ஆத்ம திருப்திக்காகவே வரைகிறேன். என்னுடைய பெயிண்டிங்குகளுக்கு விலை வைப்பதில்லை. எவ்வளவு கொடுத்தாலும் சந்தோஷமாக வாங்கிக் கொள்வேன். சம்பாதிப்பதற்குத்தான் பேனர் வரைகிறேனே" என்கிறார் இந்த ஓவியக் கலைஞர்.

- லதாசேகர்

ராஜாதி ராஜ ராஜ

(இம்சை மன்னன் அறுபத்தி யாறாம் புலிகேசி வேகமாக அந்தப் புரத்தினுள் நுழைகிறார். மகாராணி கட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கிறாள். உள்ளே நுழைந்தவர் சத்தமாக..)

"மகாராணி... மகாராணி...."

(திடுக்கிட்டுப் போய் எழுந்த மகாராணி..)

"எதற்காக இப்படிச் சத்தம் போடுகிறீர்கள்... கொஞ்ச நேரம் என்னை நிம்மதியாகத் தூங்க விடுகிறீர்களா?...

"ஹுூக்கும்... எப்போதும் தூங்குவது தானே உன் வேலை... ஒரு ஐந்து நிமிடம் இடைவேளை விடக் கூடாதா..."

(கொட்டாவி விட்டவாறு..) "சரி... சரி... தொலைகிறது... எதற்காக என்னை எழுப்பினீர்கள்?.."

"என் உடைவாளைப் பார்த்தாயா?..."

"உங்கள் உடைவாளை நான் ஏன் பார்க்கிறேன்...?"

"அதானே... நீ எதற்குப் பார்க்கப் போகிறாய்... உனக்கு இருபத்திநாலு மணி நேரமும் சீரியல் பார்க்கவே நேரம் சரியாக இருக்கிறதே..."

(முறைத்துப் பார்த்த மகா ராணி..)

"வீண்பேச்சு வேண்டாம். ஆமாம்... எதற்கு அந்த உடைவாளைத் தேடுகிறீர்கள்... உங்களுக்கும் வீரத்துக்கும் தான் காத தூரமாயிற்றே..."

"என்னை வீணாகப் படுத்தாதே மகாராணி... உண்மை பேச கால நேரமே கிடையாது உனக்கு... அதை விடு... உடைவாள் மேட்டருக்கு வா... காலையில் சமைக்க காய்கறி எல்லாம் தயார் செய்துவிட்டு காய் நறுக்க உடைவாளைத் தேடுகிறேன்... காணோம்... எனக்கு டென்ஷன் ஆகுமா? ... ஆகாதா?... அரண்மனையில் இருந்த ஒரே அரிவாள்மனையையும் இம்சை இளவரசன் அறுபத்தேழாம் புலிகேசி கேட்டான் என்பதற்காக பழைய இரும்பு கடைக் காரனிடம் போட்டு பேரீச்சம்பழம் வாங்கி வந்து விட்டாய்..."

"உபயோகமுள்ள பொருளைப் போட எனக்கும் முதலில் தயக்கமாகத்தான் இருந்தது... அதனால்தான் உபயோகமில்லாமல் இருக்கும் பொருளாய்ப் போடலாம் என்று உங்கள் வாளைத் தேடினேன்... அதைக் காணவில்லை..."

"பிரச்னையை திசை திருப்பப் பார்க்காதே மகாராணி... இப்பொழுதே தாமதமாகிவிட்டது... அரசவைக்குப் போகவேண்டும்.

அரசவைக்கு வருகிறார் இம்சை அரசன் அறுபத்தாறாம் புலிகேசி.

"ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட... ராஜ கம்பீர (சட்டென்று நாக்கைக் கடித்துக்கொண்டு...) சோப்ளாங்கி, மன்னன் அறுபத்தி ஆறாம் எலிகேசி பருக்... பருக்... பருக்...

(அரசன் அதிர்ச்சியடைந்து..)

"கட்டியம் கூறுபவனே... என்ன இது..."

"மன்னித்துக் கொள்ளுங்கள் மகாராஜா... நான் தங்களுக்கு 'பராக்' கூறும் சமயத்தில் நாக்குழறி விட்டது. இப்போது சொல்கிறேன் பாருங்கள்... (கம்பீரமாக...)

"பராக்...பராக்... பராக்..."


"அரசன், ஏய்... நிறுத்து... என் பேரை என்னவென்று சொன்னாய்?"

"அறுபத்தாறாம் புலிகேசி என்று சொன்னேன் மன்னா..."

"பொய் சொல்லாதே... நீ சொன்னது நன்றாக என் காதில் விழுந்தது. நான் உன்னை அப்புறம் கவனித்துக் கொள்கிறேன்..."

(அரசவையில் மன்னன் நுழைகிறான். மன்னன் நுழைவதைக் கவனிக்காத மந்திரி பிரதானிகள் தங்கள் இருக்கை

லகலக...



சோப்ளாங்கி!

களில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். மன்னன் கோபமாகத் தன் இருக்கையில் போய் அமர்ந்து...)

"மந்திரி பிரியாணிகளே...ச்சே...மந்திரி பிரதானிகளே..."

(யாரும் எழவில்லை... மன்னன் கோபமாகி...)

"ஏய் மந்திரி... மொத மந்திரி... எந்திரிய்யா...

(மந்திரி திடுக்கிட்டுப் போய் எழுகிறார்).

"மந்திரி..."

"இன்னா மன்னா?..."

"மாதம் மும்மாரி பொழிஞ்சதா..."

"ம்... பெஞ்சது... பெஞ்சது..."

"மந்திரி... நான் கேட்டதுக்குப் பதில்..."

"ரெண்டு மழைதான் பெஞ்சது... அதுக்குள்ளே நீர்தான் வந்து எழுப்பி விட்டுட்டீரே..."

(தூதுவன் அப்போது பக்கத்து நாட்டில் இருந்து வந்த ஓலையைத் தருகிறான்).

"மந்திரியாரே... ஓலையை வாங்கிப் படியும்..."

"மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய அறுபத்தாறாம் புலிகேசி மன்னர் அவர்களுக்கு..." (படிப்பதை விட்டுவிட்டு விழுந்து விழுந்து சிரிக்கிறார் மந்திரி. குழம்பிப்போன மன்னன்...)

"ஏனய்யா சிரிக்கிறீர்?"

"பொய் சொல்வதில் தவறில்லை மன்னா... ஆனால் ஆரம்பத்திலேயே பொய்யா?... தாங்கள் மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவராம்... இது கொஞ்சம் அதிகமாகத் தெரியவில்லை?..."

"போதும் உமது கிண்டல்... மேலே படியும்... சகிக்க முடியவில்லை... அமைச்சரே... ஓலையை கையில் வைத்துக்

கொண்டு என்ன பண்ணுகிறீர்?"

"சற்றுப் பொறுமையாக இருங்கள் மன்னா... எழுத்துக் கூட்டி படிக்க வேண்டாமா? தா...தா...தாங்கள் ஆ...ஆ...ஆறு வருடமாக கப்பம் செ...செ... செலுத்தவில்லை. இனிமேலும் பொறுக்க முடியாது... எனவே, உடனடியாக கப்பம் செலுத்தவும்... இல்லையென்றால் தாங்கள் நாட்டின் மீது போர் தொடுப்பேன்..." (படித்து முடித்து விழுந்து விழுந்து சிரிக்கிறார் மந்திரி).

"எதற்கய்யா மீண்டும் சிரிக்கிறீர்?..."

"நமது நாட்டின் மீது போராம்... விவரம் தெரியாதவன்... தனது மதிப்பைத் தானே குறைத்துக் கொள்கிறான்..."

"போதும் உமது நையாண்டி... போய் ஓலை எழுதுபவனை வரச்சொல்லும்... உமக்கு ஒழுங்காகப் படிக்கவே தெரியவில்லை... இதில் நக்கல் வேறு..."

அந்த நேரம் உள்ளே வந்த வாயிற்காப்பாளன்.

"மன்னா... தங்களைக் காண தமிழ்ப் புலவர் வைரக்கண்ணன் வந்திருக்கிறார்..."

"ஆ... வைரக்கண்ணனா?..." (என்று பயந்து நடுங்கிவிட்டு, பின்பு சுதாரித்து கம்பீரமாக) "நான் இல்லை என்று கூறு..."

"ம்ஹீம்... எல்லாம் சொன்னேன்... இன்று தாங்கள் உள்ளேதான் இருக்கிறீர்கள் என்று அடித்துச் சொல்கிறார்..."

"ஐயோ... என்னைப் புகழ்ந்து பாடிய தற்கு... சிரிக்காதீர்கள் அமைச்சரே... என்னைப் புகழ்ந்து பாடியதற்கு... பாருங்கள்... மீண்டும் கேலிச் சிரிப்பு..." (அமைச்சர் வாயைப் பொத்திக்கொண்டு விட, தொடர்கிறார் மன்னர்).

"அவருக்கு நான் தரவேண்டிய பாக்கியை வசூல் பண்ணத்தான் வந்திருக்கிறார்... ஐயோ... நான் இப்போது என்ன செய்வேன்...? இந்த அரசவையில் எனக்கெதிராகச் சதி நடக்கிறது. நான் இன்று இருப்பேன் என்று இங்கிருக்கும் யாரோ ஒருவர்தான் புலவரிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு என்னைக் காட்டிக் கொடுத்திருக்கிறார். யார் அந்தக் கறுப்பு ஆடு..." அனைவரும் அமைதியாய் இருக்கின்றனர்.

அதே நேரம் இன்னொரு வாயிற்காவலன் அவசரமாக உள்ளே வருகிறான்.

"மன்னா...பெரிய ஆபத்து வருகிறது... தங்களைப் பார்க்க மகாராணி வருகிறார்..." என்கிறான் அலறலாக. திடுக்கிட்டுப்போன புலிகேசி வேகமாக எழுகிறார்.

"ஐயோ... தொலைந்தேன் நான்... மகாராணி வந்தால் போர் முரசு ஒலித்து எனக்கு எச்சரிக்கை விடுக்கச் சொல்லியிருந்தேன் முரசு அறிவிப்பவனிடம். அந்தப் பாழாய்ப் போனவன் தூங்கித் தொலைந்து விட்டான் போல... நான் அவனை அப்புறமாய்க் கவனித்துக் கொள்கிறேன். நான் இப்பொழுது எங்கே போவேன்... ஆ... ஐடியா... அமைச்சரே... சீக்கிரம் அந்த காலியாய் உள்ள கஜானாவைத் திறக்கச் சொல்லும்...ஒளிந்து கொள்கிறேன்..."


பின்னங்கால் பிடறியில் பட ஓடும் புலிகேசியைப் பார்த்து அரசவையே விழுந்து விழுந்து சிரிக்கிறது. ○

"புதுசா வந்து சேர்ந்த சிஷ்யனை ஏன் பாராட்டி உடனே திருப்பி அனுப்பிட்டீங்க குருவே?"

"'உன்கூடப் பிறந்தவங்க எத்தனை பேர்னு கேட்டதுக்கு 'தனியாகத்தான் பிறந்தோம். தனியாகத்தான் போகப் போகிறோம். பின் எதற்கு நடுவில் வந்த உறவுகளைப் பற்றி விசாரிக்கிறீர்கள்...?' என்கிறான்.

- ஸ்ரீவித்யா





• காரேத் கேட்ஸ்

கவலையா இருக்கீங்களா?

'பாப் சங்கீதம்' கேட்கும் இளைஞர்களுக்கு காரேத் கேட்ஸைத் தெரிந்திருக்கக்கூடும். ஆனால், கர்நாடக சங்கீதம் கேட்கும் என்னைப் போன்ற ஆசாமிகளுக்கு அந்த இளைஞனின் சாத்வீகமான முகம்தான் முதலில் ஈர்த்தது. அப்புறம் அந்தக் குரல், சாதாரணமாக 'பாப்' சங்கீதம் என்றாலே எழுகின்ற கூக்குரல் இல்லை. பட்டைப் போன்ற, மிருதுவான மென்மையான இளமை ததும்பும் குரல். 'Go your own way' என்ற ஆடியோ - வீடியோ குறுந்தகடுகளைக் கேட்டும், பார்த்தும் ரசியுங்கள். எல்லாமே Romantic பாடல்கள்தான். ஒரு சில மிதமான இரைச்சல்களும் இருக்கின்றன. அதே வசீகரக் குரல், கன்னத்தில் குழி விழும் முகம், முன் வாயில் பற்களுக்கு இடையே உள்ள சிறிய இடைவெளி எல்லாமே இருபத்தொரு வயது காரேத் கேட்ஸை இன்று உலகப் பிரபலப் பாடகனாக்கிவிட்டது. மிக முக்கியமான விஷயம்: கேட்ஸ் பேசும்போது மிகுந்த திக்குவாய்க்காரர். ஆனால் இசை அவரை அதிலிருந்து மீட்டிருக்கிறது.

'கலக்கறே மச்சி' நகைச்சுவை நாடகம்; சமகாலத்து இளைஞர்கள் மத்தியில் உலவும் சொலவடை. ஆனால் இதில் 'கலக்கியவர்' முக்கிய கதாபாத்திரத்தில் வந்த நடு வயதுக்காரர் எம்.ஆர்.கேதான் அன்றைய நாடக நடிகர். அனுபவம் பேசுகிறது. ஜன்மப் பகை கொண்டாடும் இரு பெரியவர்களின் பெண்ணும், பிள்ளையும் காதலிக்க, அவர்களுக்கு உதவப் போகிறார் டாக்டர் ஞானசம்பந்தம் (எம்.ஆர்.கே.). அதாவது பையனின் அப்பா வருகையில் பெண்ணின் அப்பாவாகவும், பெண்ணின் அப்பா வரும்போது பையனின் அப்பாவாகவும் இரண்டு பேரும் ஒரே சமயத்தில் வந்தால்? அதுதான் 'கலக்கறே மச்சி!' 'ஸிச்சுவேஷனல் காமெடி' இதில் நன்றாக வந்துள்ளது. பல புது ஆர்வமுள்ள பல புதிய இளைஞர்களுக்கு இந்த நாடகம் இடம் தந்திருக்கிறது. கதை, வசனம் எழுதிச் சிரிக்க வைத்துள்ள அரவிந்தன், சில பழைமை வசனங்களைத் தவிர்த்திருக்கலாம். கவலையோடு இருக்கிறீர்களா? கவலைப் படாமல் தைரியமாக இந்த நாடகத்துக்குப் போகலாம். வாய் விட்டுச் சிரித்தபடி வருவீர்கள்.

• 'கலக்கறே மச்சி' காட்சி..



- ஜோதி ஸ்வரூபிணி

அரசியலில் நடிகர்கள் எதிர்பார்ப்பைக் கூட்டுகிறார்களே?

● ச.ஜான் பிரிட்டோ,
திண்டுக்கல் - 3

? ஒரு புத்தம் புதிய திரைப்படம் சினிமா தியேட்டருக்கு வந்தவுடன் வி.சி.டி.யில் பார்த்தால் திருட்டு வி.சி.டி என்கிறார்கள். ஆனால் நூலகத்தில் பத்திரிகைகள் படிக்கும் மக்களை அறிவாளிகள் என்று மெச்சுகிறார்களே?

! உள்ளங்கை அகல வி.சி.டி.யில் நூறு சினிமாக்களைப் பதிவு செய்யக்கூடிய தொழில்நுட்பம் உருவாகி வருகிறது. திருட்டு வி.சி.டியாவது ஒண்ணாவது! அதெல்லாம் இன்னும் கொஞ்சம் நாளைக்குத்தான். அப்புறம் 'யாதும் நமதே, யாவரும் பாரீர்'தான்!


• பிராயச்சித்த வோட்டு!

● பெ. பொன்ராஜபாண்டி,
மதுரை - 16

? தி.மு.க. அமோக வெற்றி பெறும் என்ற ஓர் ஆங்கில நாளிதழின் கணிப்பில் ஏதோ மர்மம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறாரே வைகோ?

! ஒரு இழவு மர்மமும் இல்லை. முதலில் 'ஜெ' அலை வீசுகிறது' என்றார்கள்; அப்புறம் 'தொங்கு சட்டசபை' என்றார்கள்; கடைசியாக 'கருணாநிதியின் கூட்டணிக்கு அமோக வெற்றி' என்றார்கள். ஏதோ ஒன்று நடந்துதானே ஆக வேண்டும். 'நாங்கதான் அப்பவே சொன்னோமே' என்று சமாளிக்கலாம்.

● ஆர். ராஜதுரை,
சீர்காழி

? 'வேட்டைத் திருவிழா' என்கிற பெயரில் கனடா நாட்டு அரசு இந்த ஆண்டு மூன்று லட்சம் சீல்களைக் கொல்லத் திட்டமிட்டுள்ளதே?

! கொடூரம்! இது வேட்டைத் திருவிழா இல்லை; வக்கிரத் திருவிழா. நிற்க. நம் நாட்டில் மத வழிபாடு என்ற பெயரில் பசு, எருமை, ஒட்டகம், ஆடு என பலி கொடுக்கப்படுவதும் வக்கிரம்தான் - நான்கு லட்சத்து எண்பதாயிரம் பிராணிகள் இவ்வாறு ஆண்டுதோறும் கொல்லப்படுகின்றன என்கிறது மாடு வதை தடுப்பு இயக்கம்!

• நியாயமான கோரிக்கை


● ஜோ. ஜெயக்குமார்,
நாட்டரசன்கோட்டை

? "இரட்டை இலைக்கு கருணாநிதி வோட்டுப் போட்டால், அவர் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தமாகும்'' என்று விசு சொல்கிறாரே?

! அப்போ, உதயசூரியனுக்கு ஜெ. வோட்டுப் போட்டால் அவர் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தமா? ரொம்ப கலப



• மீட்டிங்கை நம்பி...!

நீங்கள் கேட்டவை –தராசு

மா்ன தீர்வா இருக்குதே! யா.ாகங்களையும், ஜோசி யத்தையும் வாஸ்துவையும் ஜெ. இனி ஒதுக்கிவிடலாம்!

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? மாநில மகளிர் ஆணையத்தை, அதிகாரமுள்ள ஆணையமாக மாற்ற வேண்டும் என்று ஜனநாயக மாதர் சங்கப் பொதுச் செயலாளர் உ.வாசுகி கோரிக்கை வைத்துள்ளாரே?

! மிக நியாயமான கோரிக்கை. பெண்கள் பொது வாழ்வில் / பணிவாழ்வில் மேலும் மேலும் ஈடுபட்டு வருவதால் விளையக்கூடிய சிக்கல்களை / பிரச்னைகளை உடனுக்குடன் எடுத்துத் தீர்வு காண, சார்பற்ற அமைப்புகள் அதிகாரம் பெறுவது நல்லது. ஆனால், ஆணையத்தின் தீர்ப்பு, தேவைப்படும்போது நீதிமன்ற மேற்பார்வையை அனுமதிப்பதாக இருக்க வேண்டும்.

● ஆர்.பிரகாஷ், பொன்மலை

? சந்திரமுகி துருக்கி, ஜெர்மன் மொழிகளில் 'டப்' செய்யப்படவிருப்பது பற்றி...?

! அவர்களுக்கு ஜகஜாலங்கள்; நமக்கு டாலர்கள்!

● விஜயலட்சுமி சிவசுப்பிரமணியன், சென்னை - 4

? "தனி ஒரு மனிதனக்குணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என மஹாகவி பாரதியார் கூறியது தீவிரவாதமா? மனிதநேயமா?

! மனிதநேயத்தால் விளைந்த அறச் சீற்றம். அந்த மூன்றாவது சரணம். நான்காவது அடியில்



• டாலர் ரூட்!

அந்தச் சீற்றம் தணிந்து ஆக்கபூர்வமாகச் சிந்திக்க ஆரம்பித்து விடுகிறாரே!

● வசீகரன், தேனாம்பேட்டை

? "ஷூட்டிங்கைவிட மீட்டிங்கில் தான் வருமானம் ஜாஸ்தி" என்கிறாரே சத்யராஜ்?

! தேர்தல் சமயத்தில் இது உண்மையாக இருக்கலாம். அப்புறம் ஐந்தாண்டுகள் ஷூட்டிங்கைத்தானே நம்பி காலம் தள்ள வேண்டும்.

● மு.தமிழ்ப்பாண்டியன், சென்னை - 49

? தற்பொழுது பாடல்கள் எழுதும் பாடலாசிரியர்களின் பாடல்களில் 'பழையது ஏதோ ஒன்று இல்லை' என்று

படுகிறதே... அது என்ன?

! கருத்தாழம்; இலக்கியத் தரம்.

● சிவ. இராமலிங்கம், தூத்துக்குடி.

? லஞ்சம் - புரிகிறது... அதென்ன லாவண்யம்?

! வாங்கிய லஞ்சத்தை, 'வாங்கவே இல்லை' என்று சாதிக்கும் நுண்கலை என்று வைத்துக் கொள்ளுங்களேன்!



• அறச் சீற்றம்!

● ஆர்.சுந்தரி, குளித்தலை

? 'குடும்ப ஆட்சி' என்று எதிரணியை விமர்சிக்கும் 'ஜெ', ஏன் பதவியைப் பிடிக்க மட்டும் ஆசைப்பட்ட வண்ணம் உள்ளார்?

! உடும்பு ஆட்சியில் பிரியம் வைத்திருப்பதால்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? டீ.வி- வானொலியில் இப்போதே ஏகப்பட்ட விளம்பரத் தொல்லை. இனி செல்போனிலும் விளம்பரங்கள் வருதாமே...?

! 'வருதாமே?' என்ன, ஏற்கெனவே வந்துகொண்டுதானிருக்கிறது. நமக்குத் தேவையான விளம்பரங்களை மட்டும் கவனிப்பதும்; தேவையற்ற விளம்பரங்களைக் காலம் தாழ்த்தாமல் ஒதுக்கப் பழகுவதும்தான் ஒரே வழி. இது எல்லா மீடியா சாதனங்களுக்கும் பொருந்தும். மனோதிடம் முக்கியம்!

● அ.ப.ஜெயபால், பரங்கிப்பேட்டை

? சினிமாக்களில் உங்களுக்கு ரொம்ப தமாஷாகப்படுவது எது?

! தமாஷுக்கென்று கதையோடு ஒட்டாமல் தனி டிராக் அமைப்பதுதான்!

● வே. பாலமுருகன், திண்டுக்கல்

? எய்ட்ஸ், புற்றுநோய், பாலியல் பிரச்னை போன்றவற்றுக்கு அதிசய சிகிச்சை வழங்குவதாக பத்திரிகைகளில் சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவர்கள் விளம்பரம் செய்துகொள்வதைக் கட்டுப் படுத்த புதிய சட்டம் வருகிறதாமே?

! ஹோமியோ, சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவங்களில் பலனே இல்லை என்று கூறிவிட முடியாது. போலிகள் களையெடுக்கப்பட வேண்டும் என்பதுதான் முக்கியம். இவற்றுக்கும் கல்லூரிகள் உருவாக்கி, பரீட்சைகள் எழுதிப் பட்டம் பெற்றவர்களுக்கு மட்டுமே தொழில் நடத்த லைசென்ஸ் வழங்கலாம்.

● எஸ்.விஜயலட்சுமி, ஸ்ரீவில்லிபுத்தூர் ❐

? புதிய கட்சி தொடங்கும் ஓர் அரசியல்வாதியிடம் மக்கள் எதிர்பார்ப்பதைவிட, புதிய கட்சி தொடங்கும் ஒரு நடிகரிடம் அவர்கள் எதிர்பார்ப்பது அதிகமாயிருக்கிறதே... என்ன காரணம்?

! சினிமாவில் ஊழல் - அநியாயங்களை எதிர்த்தே பழக்கப்பட்ட நடிகர், அப்படியே அசல் அரசியல் வாழ்க்கையிலும் நடந்துகொள்வார் என்ற எதிர்பார்ப்பாக இருக்கும். ஆனால், இன்றைய அரசியலை தூசு தட்டி துப்புரவுபடுத்த மூன்று அம்சங்கள் ஒருவரிடம் வேண்டும்: தூய்மை, திறமை, தலைமை.

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? அட்சய திரிதியைக்குத் தங்கம் வாங்கினீரா?

! தங்கமான புத்தகம் வாங்கினேன்; படித்து மகிழ்ந்தேன். நிற்க. தங்கம் வாங்குவதில் தவறில்லை. ஷேர் மார்க்கெட்டைவிட பாதுகாப்பானது. ஆனால், வாங்கும் தங்கம் தூய்மையானது என்பதற்கு உத்தரவாதம் தேவை. சில வங்கிகளில் தரமான தங்கக் காசுகள் விலைக்குத் தருகிறார்கள். ஆனால், அதை நகையாகச் செய்தால் மாற்று குறையும். ○

❐ ரூ.100/- பரிசு பெறுபவர்:

எஸ். விஜயலட்சுமி,
2, துரோபதி அம்மன் கோயில் தெரு,
திருவில்லிபுத்தூர்,
626 125

• ரூ. 50/- பரிசு பெறுபவர்:

சி. ஜான் பிரிட்டோ,
26, அறிஞர் அண்ணா நகர்,
மேட்டுப்பட்டி சாலை,
நாகல் நகர் அஞ்சல்,
திண்டுக்கல் - 3



GOKULAM CALIBRE COMICS

For Wholesome Development...

Name : ....

Address : ....

: ....

.... Pin : ....

PERIOD:

☐ 1 year Rs.144/- ☐ 2 years Rs.288/- ☐ 3 years Rs.432/-

Amount enclosed : Rs. ☐ (DD / MO / Cheque * favouring 'Gokulam Calibre Comics')

* Add Rs. 20/- for Outstation cheques

The Circulation Manager, Gokulam Calibre Comics,

'Kalki Buildings', 47-NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal,

CHENNAI - 600 032. E-mail : subscription@kalkiweekly.com



டான்சி நிலத்தின்

"அரசாங்க நிலத்தை முதலமைச்சர் ஜெயலலிதா வாங்கியது முறையானதல்ல; அவர் மனச்சாட்சிபடி செயல்பட்டு அந்த நிலத்தை அரசிடமே மீண்டும் ஒப்படைக்க வேண்டும்" என்று சுப்ரீம் கோர்ட் டான்ஸி நில வழக்கில் ஜெயலலிதாவை விடுதலை செய்து, தீர்ப்புச் சொன்னது. 'இனி திருடன்கூட மனச்சாட்சியுடன் செயல்பட்டு, திருடிய பொருளைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் அவன் குற்றமற்றவனாகிவிடுவான்' இவ்வாறு கிண்டலடித்து, தனது கடைசி பிரசாரக் கூட்டம் நடந்த சிந்தாதிரிப்பேட்டையில் பேசினார் கலைஞர். தமது மனச்சாட்சிப்படி அந்த நிலத்தை ஜெயலலிதா அரசிடம் திருப்பிக் கொடுத்துவிட்டாரா? அதைத் தெரிந்து கொள்ளும்முன் ஒரு சின்ன ப்ளாஷ்பேக்.

• ஆர்.எஸ்.பாரதி



1991-96-ம் ஆண்டுகளில் ஜெ. முதல்வராக இருந்தபோது நடந்த விவகாரம் இது. முதலமைச்சர் ஜெயலலிதாவும், தோழி சசிகலாவும் ஜெயா பப்ளிகேஷன்ஸ் மற்றும் சசி எண்டர்பிரைசஸ் என்ற இரு நிறுவனங்களில் பங்குதாரர்கள். தங்கள் நிறுவனத்தை விரிவுபடுத்த அவர்களுக்கு நிலம் தேவைப்பட்டது. கிண்டி தொழிற்பேட்டையில் இருந்த ஏழு கிரவுண்ட் டான்ஸி நிறுவன நிலம் அவர்களைக் கவர்ந்தது. ஒரு பொது ஊழியர், அரசு நிலத்தை வாங்கக்கூடாது என்பது வழிகாட்டு நெறி. ஆனால் அதைப் பற்றியெல்லாம் ஜெ. எப்போதும் கவலைப்படுவதில்லையே. முதல்வரும் தோழியும் நிலத்தை அடிமாட்டு விலைக்கு வாங்கி விட்டார்கள். இதனால் டான்ஸிக்கும் நஷ்டம். முத்திரைத் தாள் கட்டணத்திலும் ஏய்ப்பு.



கதி என்ன?

இதை எதிர்த்து பொதுநல வழக்குப் போட்டார் தி.மு.க.வின் சட்டத்துறை செயலாளராக இருந்த ஆர்.எஸ்.பாரதி. அவருடைய வழக்கறிஞர் சண்முகசுந்தரம் கடுமையாகத் தாக்கப்பட்டார். ஆமை வேகத்தில் நகர்ந்த வழக்கு, 1996-ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது தனிநீதிமன்றம் அமைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டது. தனி நீதி மன்றம், ஜெ., சசிகலா மற்றும் நான்கு பேருக்கு மூன்றாண்டு கடுங்காவல் தண்டனையும், அபராதமும் விதித்தது. இது நடந்தது 2000-ல். பின்னர் 2002-ல் உயர்நீதி மன்றம் அவர்களை விடுதலை செய்தது. விவகாரம் அப்பீலாகி உச்சநீதிமன்றத்தை அடைந்தது. அங்கே சொன்ன தீர்ப்புதான் முதல் பாராவில் நீங்கள் படித்தது.

"2003-ல் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனால் அடுத்த ஒரு வருடம் வரை ஜெயலலிதா நிலத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. பின்னர் அப்போது தலைமைச் செயலாளராக இருந்த லட்சுமி பிராணேஷ் அவர்களுக்குக் கடிதம் எழுதிக் கேட்டேன். நிலத்தை ஒப்படைத்து விட்டார்கள் என்று அவர் எனக்குப் பதிலளித்தார். ஆனால் சட்டப்படி அந்த நிலம் மீண்டும் டான்ஸி நிறுவனம் பெயரில் பதிவு செய்யப்படவில்லை. காரணம் விசாரித்ததில் ஜெ. சொத்துக் குவிப்பு வழக்கில் இந்த நிலமும் சிக்கி இருப்பதால் சட்டப்படி மாற்ற முடியவில்லை என்ற செய்தி வருகிறது. எனவே நான் உச்சநீதி மன்றத்தில் அவதூறு பெட்டிஷன் போடலாம் என்றிருக்கிறேன்" என்கிறார் ஆர்.எஸ்.பாரதி.

இந்த விவகாரம் குறித்து அதிகாரிகள் பேசத் தயங்குகிறார்கள். நிலம் மறுபதிவு ஆகவில்லை என்று மட்டும் தெரிகிறது.

மர்மத்தை விடுவிக்குமா புதிய அரசு?

- கௌசி

படம் : **ஸ்ரீஹரி**




• புதியாசிங்

பூரி ஜகன்னாதர் கோயி லில் ஆரம்பித்து புதியாவின் ஓட் டம் புவனேஷ்வரில்தான் நின்றது. வழி நெடுக ஏகக் கூட்டம். பொதுமக்களின் அபார அன்பு. கழுத்து நிறைய மாலைகள்...

விம்கா ரெக்கார்ட்ஸின் துணை ஆசிரியரான அம்ரீன் நூர், புதியாவைப் புகழ்ந்து தள்ளிவிட்டார். "புதியாவின் சவால்கள் நிறைந்த வாழ்க்கை பயணத் தைக் கையேடாகவே போடப்போகி றோம். அது பலருக்குப் பாடமாக இருக் கும்" என்கிறார்.

புதியா சிங்... இந்தியாவின் புதிய நம்பிக்கை நட்சத்திரம்! நாலு வயதே ஆன புதியா, கடந்த வாரம் லிம்கா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸில் தன் பெயரை நெற்றியடியாகப் பதிவு செய்துள்ளான்.

என்ன செய்தான் என்கிறீர்களா? பூரியிலிருந்து புவனேஷ்வர் சுமார் 65 கிலோமீட்டர். இந்த தூரத்தை அனாயசமாக ஏழு மணி நேரத்தில் ஓடியடைந்து சாதனை புரிந்துள்ளான். இந்தச் சிறிய வயதில் வேறு யாரும் இதற்குமுன் இத் தனை தூரம் ஓடிய தில்லை என்கிறது தகவல்.



• கண்ணன் புகழேந்தி.

புதியா செய்திருப்பது சாதனையா அல்லது குழந்தை உரிமை மீறலா என்று சென்னை ஒய்.எம்.சி.ஏ. வின் ஸ்போர்ட்ஸ் மருத்துவத்துறை தலைவரான டாக்டர் கண்ணன் புகழேந்தியிடம் கருத்துக் கேட்டோம்.

"இது நூற்றுக்கு நூறு குழந்தை உரிமை மீறல். அமெரிக்கா போன்ற நாட்டில் இது போல ஒரு காரியத்தைச் செய்யவே முடி யாது. மீறி நடத்தினால் சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் வழக்குப் போட்டு, தண்டனை தருவார்கள்" என்றார் அவர்.

"நாலரை வயது சிறுவனை மாரத்தான் ஓட வைத்ததே சட்டப்படி குற்றம். அகில உலக விளையாட்டு விதிகளின்படி பதினைந்து வயதானால்தான் 21 கி.மீ. ஓடக்கூடிய 'அரை மாரத்தானில்' பங்கேற்க முடியும். 42 கி.மீ. தூரம் கொண்ட முழுமையான மாரத்தான் போட்டியில் பங்கேற்க வேண்டுமானால் 18 வயது நிரம்பி இருக்க வேண்டும். இங்கே நாலரை வயதுக் குழந் தையை 65 கி.மீ. ஓட

புதிய(ர) சர்ச்சை!

வைத்து, சாதனை என்று சொல்லி கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். எலும்புகள் முழு வளர்ச்சியடையாத நிலையில் இது போன்ற பயிற்சிகளில் பால்முகம் மாறாத ஒரு சிறுவனை ஈடுபடுத்துவதை ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. இது உடல்ரீதியாக மட்டுமின்றி, மனோ ரீதியிலும் அந்தச் சிறுவனை மிகவும் பாதிக்கும். இதனைத் தவறான ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு, மேலும் பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இதுபோல ஈடுபடுத்த முன்வரலாம்'' என்று எச்சரிக்கிறார் டாக்டர் கண்ணன் புகழேந்தி.

'சிறு வயதிலேயே, குற்றாலீஸ்வரன் ஐந்து கடல்களில் நீந்திச் சாதனை புரியவில்லையா?' என்றால்,

'நீச்சலுக்கும் ஓட்டத்துக்கும் வித்தியாச முண்டு. கின்னஸ் சாதனையின்போது ஒரு மணி நேரத்துக்கு ஐந்து நிமிட ஓய்வு தரப்படுகிறது. மாரத்தான் ஓட்டப் பந்தயத்தில் அதுமாதிரி ஓய்வு கிடையாது. அது தனி நபர் சாதனை. இது போட்டி. அகில உலக அளவில் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்க குறைந்த பட்ச வயது பன்னிரண்டு என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது' என்கிறார்.

அப்படியென்றால் புதியாவை ஒரு ஒலிம்பிக் பந்தய ஓட்டக்காரராக ஆக்க என்னதான் செய்ய வேண்டும்?

"இந்த வயதில் ஒலிம்பிக் அது இது என்று அவனுக்கு அனாவசியமான பிரஷர் தருவதை உடனே நிறுத்த வேண்டும். இந்த வயதில் அவனை ஒரு சாதாரண சிறுவனாக வளர்த்தாலே போதுமானது. பதினாறு வயதில் வேண்டுமானால் பயிற்சியை ஆரம்பிக்கலாம். சீரான, முறையான பயிற்சி அவசியம். அப்போது வேண்டுமானால் புதியாவால் சாதிக்க முடியும்'' என்கிறார் கண்ணன் புகழேந்தி.

-எஸ்.சந்திரமௌலி,
லதாசேகர்





“எங்களுக்கே

குஷ்புவுக்குக் கோயில் கட்டிய தமிழ்நாட்டில், அதன்பின்பு நடிகைகள் மீதான மோகம் குறைந்துவிட்டது போலொரு தோற்றம் இருந்தது. (மோனல் தற்கொலைக்காக மூன்று இளைஞர்கள் தற்கொலை செய்து கொண்டதைத் தவிர). ஆனால், தமிழ்நாடு இதற்கெல்லாம் விதிவிலக்காகவா இருக்கப் போகிறது! இதோ பாலாபிஷேகத்தோடு தொடங்கிவிட்டார்கள் அகில இந்திய த்ரிஷா ரசிகர் மன்றத்தை.

சமீபத்திய த்ரிஷாவின் பிறந்த நாளன்று சென்னை, வடபழனியிலுள்ள அவரது ரசிகக் கண்மணிகள் தங்களுடைய தேவதையின் ஆளுயர பேனருக்கு பாலாபிஷேகம், பூஜையெல்லாம் செய்து அமர்க்களப்படுத்த... அக்காட்சியை நேரில் கண்டவர்கள் சற்றே விக்கித்து நின்றனர்.

"இதென்ன புதுக் கலாசாரம்? எப்படி இதை அனுமதித்தீர்கள்?" என்று த்ரிஷா தரப்பில் கேட்டோம். அவருடைய அம்மா உமாகிருஷ்ணன் வியப்போடு பேச ஆரம்பித்தார்.

''சாமி' ஹிட் ஆனவுடனே த்ரிஷாவுக்கு ரசிகர் மன்றங்கள் திறக்கணும்னு ஏராளமான கோரிக்கைகள் வந்துச்சு. இதெல்லாம் நமக்குத் தேவையில்லாத விஷயம்னு விடாப்பிடியா மறுத்துட்டோம். ஆனா இப்போ ஆரம்பிக்கப்பட்டிருக்கிற ரசிகர் மன்றமும், பாலாபிஷேக சம்பவங்களும் எங்களுக்கே புதுசா இருக்கு. எங்களோட அனுமதி இல்லாம தொடங்கப்பட்ட நற்பணி மன்றம்தான் என்றாலும் நாங்க ரொம்ப பெருமிதமா உணர்றோம்'' என்று பீடிகையோடு பேச ஆரம்பித்தார் உமா.

''வடபழனியில த்ரிஷா மன்றம் தொடங்கியிருக்கிற ஜெஸ்ஸியும் அந்த மன்றத்தைச் சேர்ந்தவர்களும் துபாயைச் சேர்ந்தவங்க. த்ரிஷா மேலுள்ள அபரிமிதமான பாசத்தால அங்கேயே மன்றம் திறக்க ஆசைப்பட்டிருக்காங்க. முடியலை. சென்னை வந்தவுடனே முதல் வேலையா ரசிகர் மன்றம் தொடங்கித் தொடர்ந்து அவங்க செய்து வர்ற காரியங்கள்தான் கண்கலங்க வைக்குது. த்ரிஷா மன்றத்தின் சார்பா முதியோர் இல்லங்கள், மூளை வளர்ச்சியற்ற குழந்தைகளோட காப்பகங்களுக்கெல்லாம் சத்தமில்லாம நிறைய உதவிகளைப் பண்ணிட்டு வர்றாங்க. ரத்ததான முகாம்களும் நடத்தறாங்க. 'பாலாபிஷேகம் பண்றதுக்குப் பதிலா

"இது புதுசு!"

புதுக் கலாசாரம் தமிழ்நாட்டை எங்கு போய் நிறுத்தப் போகிறதோ!

அந்தப் பாலை ஒரு ஏழைக் குழந்தைக்குத் தந்திருக்கலாமே'ன்னு கேட்டேன். 'இல்லே மேடம், அப்போதுதான் ஒரு வெளிச்சம் கிடைக்கும். த்ரிஷா ரசிகைகளைப் பற்றி நாலு பேருக்குத் தெரியவரும்'னு சொன்னாங்க. இது வரைக்கும் அவங்க என்னையும் த்ரிஷாவையும் நேர்ல பார்த்ததில்லை. எதுக்கும் கையேந்தி நின்னதில்லை. பிரதி உபகாரம் பார்க்காம இந்த மன்றத்துல ஆயிரம் பேர் துடிப்பா இயங்கிட்டு வர்றாங்க. இதெல்லாம் பார்த்து த்ரிஷாவும், அவளோட உடைகளையும் சின்ன வயசுல பயன்படுத்தின பொம்மைகளையும் ஹோமுக்குத் தர்றதா முடிவு பண்ணியிருக்கா. ஐஸ்வர்யா ராய் கண்தானம் செய்தவுடனே அதைப் பார்த்து நிறையப் பேர் கண்தானம் பண்ண முன்வந்தாங்களாம். அதேபோலதான் த்ரிஷாவோட ரசிகர் மன்றமும் சமுதாயத்துக்கு முன்னுதாரணமா இருக்கும். கட்டாயம் நடிகர்களோட ரசிகர் மன்றங்கள் மாதிரி தியேட்டர்ல கட்-அவுட் வைச்சு அமளிதுமளியெல்லாம் பண்ணக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன்" என்றார்.

ம்... இந்த புதுக் கலாசாரம் தமிழ்நாட்டை எங்கு கொண்டு போய் நிறுத்தப் போகிறதோ!

- பப்பி



• உமா கிருஷ்ணன்



குனிந்து அருவாளால் புல் அறுத்துக் கொண்டிருந்த செண்பகம் நிமிர்ந்து வரப்பு மேட்டைப் பார்த்தாள். குவியலாய் இருந்த புல் போதும் என்று நினைத்தவள், வயலைவிட்டு வரப்பின் மீது ஏறி புற்களை கட்டுக் கட்டினாள்.

செண்பகத்துக்கு இருபத்தைந்து வயது. கருந்ததேகம். நினைவு தெரிந்த நாளில் இருந்தே வயல் வேலைதான். அவள் புருஷன் மாடசாமியும் வயல்வேலைக்குச் செல்பவன்தான். குடும்ப வாழ்க்கை நன்றாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது. தலைச்சன் பிள்ளை பெண்ணாகப் பிறந்து, அவளைப்போல் இல்லாமல் சிவப்பாக இருந்த அந்த நாட்களில் செண்பகத்தைப் போல் மகிழ்ச்சியாக யாருமே இருந்திருக்க மாட்டார்கள். ஆனால், அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஏதோ வியாதியில் அவள் குழந்தை இறந்துவிட்டது.

பைத்தியம் பிடித்ததுபோல் ஆகிவிட்டாள். உலகமே இருண்டு போனது. குழந்தையின் நினைவு வரும்போதெல்லாம் மார்பில் பால் சுரந்தது. ஒரு வாரம் கழித்து மார்பு கனத்து பால் கட்டிக்கொண்டது.

அந்தச் சமயத்தில்தான் அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டாள். நடுத்தெரு கல்வீட்டுக்காரரின் பெண்ணுக்கு குழந்தை பிறந்திருக்கிறது. ஆனால், அந்தப் பெண் தனது குழந்தைக்குப் பால் கொடுக்கக் கூடாது என்று டாக்டர் கூறிவிட்டாராம்.

"நீ என் பேத்திக்குப் பால் கொடுக்கிறாயா...?" என்று கேட்டாள் கல்லு வீட்டுக்கார பாட்டி. சந்தோஷமாய் ஆமோதித்த செண்பகம் அந்தக் குழந்தைக்குப் பால் கொடுக்கத் துவங்கினாள். அந்த சுகத்தில் தன் பிள்ளை இல்லாக் குறையையும் மறந்தாள். கடந்த நான்கு மாத காலமாகப் பால் கொடுத்து வருகிறாள். அன்றைக்கும் வேலையை முடித்துவிட்டு, பால் கொடுக்க கல்லு வீட்டை நெருங்கினாள். அவளைப் பார்த்ததும் வீட்டிலிருந்து எதிர்ப்பட்ட குழந்தையின் தாய், "என் வீட்டுக்காரர் ஊரிலிருந்து

கே. பூபதி

வந்திருக்காரு. குழந்தைக்கு மத்தவங்க பால்கொடுப்பதை எல்லாம் அவர் விரும்பலை. அதனால் இனிமேல் நீ பால் கொடுக்க வேண்டாம்" என்று கூறிவிட்டு அவளின் பதிலுக்குக் கூட காத்திருக்காமல் உள்ளே சென்றுவிட்டாள்.

செண்பகத்துக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. அழுதுகொண்டே வீட்டுக்குச் சென்றாள். படுத்தவள் இரண்டு நாட்களாக எழுந்திருக்கவில்லை.


புருஷனிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள். மார்பு வலித்தது. அந்த இளம் குழந்தையின் முகம் அவ்வப்போது கண்முன் வந்து சென்றது. இந்தக் கொடுமையை விட பிள்ளை இல்லாத பெண்ணாகவே இருந்துவிட்டிருக்கலாமே என்று நினைத்தாள்.

மூன்றாம் நாள் காலை வீட்டுக்கு வெளியே "செண்பகம்..." என்ற குரல் கேட்டது.

வந்தது கல்லு வீட்டுக்காரம்மாதான். கலைந்த தலையை வாரிக்கட்டிக் கொண்டு வெளியே போனாள்.

"என்னடி இது கோலம்...? அவதான் சின்னப்பொண்ணு, புருஷன் பேச்சைக் கேட்டுக்கிட்டு ஏதோ சொல்லிட்டா, நீ என்கிட்ட சொல்ல வேண்டியதுதானே.


தாய் மனசு...



கவலைப்படாதே, சாயந்தரம் ஆறுமணிக்கு கோயிலுக்கு வா, நான் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வர்றேன், யாருக்கும் தெரியாமல் பால் கொடு" என்றாள் கல்லு வீட்டுக்காரம்மா.

"அம்மா" என்று அழுதாள் செண்பகம்.

"நானும் ஐந்து பிள்ளை பெத்தவதான், எனக்குத் தெரியாதா ஒரு தாயோட மனசு, குளிச்சிட்டு கோயிலுக்கு வந்து சேரு" என்று புறப்பட்டாள் அந்த அம்மா. ○


நீ உங்கப்பா மாதிரி பெரிய ஆள் ஆனதும் என்ன செய்வே?
தொப்பையைக் குறைக்க ஜிம்முக்குப் போவேன்.
- ஆர்.எஸ்.பிரபு



100% Vegetarian
Supreme
SUN FLOWER OIL
Tasty
சுப்ரீம் சன்பிளவர் ஆயில் 100% தரமானது.
சால்வெண்ட் முறையின்றி நவீனமுறையில்
தயாரிக்கப்பட்ட சிக்கனமான சமையல் எண்ணெய்.
இது தெளிவாகவும் இலேசாகவும் உள்ளதால்
உணவின் சுவையை கூட்டவல்லது.
4 side sealed printed laminated pouch
Anti-leaching Anti-odour
Naturally healthy
Supreme
SUNFLOWER OIL
FREE Gift with every pack
Stocks are available without this offer also

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

அடையார் இயற்கை வைத்திய மையம்



* மத்திய உள்துறை அமைச்சர் திரு. சிவராஜ் பாட்டீலுடன் எங்கள் டைரக்டர் திரு. S.P. நாயுடு
S.P. Naidu - Ex. President of Madras Diamond Manufacturer's Association & Former Trade Protocol Agent of Romania

"அடையார் நேச்சர் க்யூர்! பிணி உடையவர்களின் துயர் போக்கும் ஆலமரமாக செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் தலைமையிடத்தில் இருக்கும் திரு. புருஷோத்தமன் திக்கற்றவர்களை வழி நடத்தும் ஒரு தெய்வமாகவே காட்சியளிக்கிறார்". இயற்கை தரும் அருமருந்து என்ற தலைப்பில் ஜனவரி 2006 'மங்கையர் மலரில்' வெளியானது.

கீழ்க்கண்ட நோய்களுக்குச் சிறப்பு சிகிச்சை அளிக்கிறோம்:

- மூட்டுவலி (எல்லா வகை) - Arthritis (All Types)
- ருமடாய்டு ஆர்த்ரெடிஸ் - Rheumatoid Arthritis
- குதிகால் எலும்பு வளர்ச்சி - Calcaneal Spur
- வெரிகோஸ் வெயின்ஸ் - Varicose Veins
- கழுத்து, இடுப்புவலி - Spondilitis
- தூக்கமின்மை - Sleeplessness
- ஆஸ்துமா - Asthma
- உடல் பருமன் - Obesity
- சர்க்கரை நோய் - Diabetes
- பர்கின்ஸன்ஸ் - Parkinsons

அனைத்து வியாதிகளுக்கும் தாங்கள் எங்களிடம் ஆலோசனை பெறலாம்.

இங்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள்:

- Therapeutic Herbal Oil Massage
- Herbal Paste Application & Soaking
- Hydrotherapy
- Physiotherapy
- Yoga Therapy
- Oxygen & Relaxation Therapy
- Diet Therapy
- Health Counselling



பக்க விளைவுகளற்ற மூலிகை மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன.

இங்கு யோகா வகுப்புகள் சிறப்பாக எடுக்கப்படுகின்றன.

Team of Doctors: Expert Doctors in Siddha, Ayurveda, Naturopathy, Yoga. Retired Senior Physiotherapist from Jipmer Medical College - heads our physiotherapy department.

ADYAR NATURE CURE CENTER ™

Registered Hospital

No. 6, II nd Cross Street, Kasturba Nagar, Adyar, Chennai - 20. Ph: 044 - 2441 3399, 2440 2470.
email : adyarnaturecure@yahoo.com **Website** : www.adyarnaturecure.com

குறிப்பு: A/c., Deluxe rooms, Rooms, ஜெனரல் வார்டு, கலர் டி.வி., போன் வசதி உள்ளன.
சைவ உணவு மட்டும் வழங்கப்படும். முன்பதிவு அவசியம்.